# தமிழ் இலக்கியத் தொகுதி

( முதற் புத்தகம் )

பொதுப் பிரிவு

வித்துவான் **K. C. வன்மீகநாதன்,** M.A., B.O.L., L.T.,
தமிழ்த்துறைத் தலைவர்,
அரசினர் கலைக் கல்லூரி, சென்னை-2.

**விசுவம் வெளியீடுகள்,**
9, கொண்டி செட்டித் தெரு, சென்னை-1.

பதிப்புரிமை ] **1953** [ விலை ரூ

# தமிழ் இலக்கியத் தொகுதி

முதற்புத்தகம் — நான்காம் படிவத்திற்குரியது

(பொதுப் பிரிவு)


தொகுப்பாசிரியர்

K. C. **வன்மீகநாதன்**, M. A., B. O. L., L. T.

தமிழ்த்துறைத் தலைவர்

அரசினர் கலைக் கல்லூரி, சென்னை.



VISWAM PUBLICATIONS

**விசுவம் வெளியீடுகள்**

**9, கொண்டி செட்டித் தெரு, சென்னை — 1.**

பதிப்புரிமை] 1953 [விலை ரூ. 1—2—0

முதற்பதிப்பு : 1952
இரண்டாம் பதிப்பு : 1953

Approved by the Text Book Committee Madras
for class use - Vide Fort St. George Gazette-
Supplement to Part 1-B—Page 88 dated 13—5—'53.

# முகவுரை

அரசியலார் அண்மையில் (2-7-1952) உயர்நிலைப்பள்ளி உயர் வகுப்புத் தமிழ்ப் பாடவியலைத் திருத்தி வெளியிட்டுள்ளனர். உயர்நிலைப்பள்ளி மாணவர், அப்பள்ளிப் படிப்பை முடித்துச் செல்லுங்கால், தாய்மொழியாம் தமிழ் மொழியில் குறிப்பிட்ட ஓரளவு அறிவு பெறுதல் வேண்டும் என்பதும், மனத்தில் எழும் கருத்துக்களைத் தமிழில் தெளிவாக எழுதவும் பேசவும் ஆற்றல் பெற்றிருத்தல் வேண்டும் என்பதும், ஏதேனும் ஓர் அலுவலில் ஈடுபட்ட பின்னரும் தமிழை மேன்மேலும் கற்கும் ஆர்வம் பெற்றவர்களாக விளங்க வேண்டும் என்பதும் அரசியலாரின் அடிப்படையான நோக்கங்கள் ஆவன. அவற்றைக் கருத்தில் இருத்தி, "தமிழ் இலக்கியத் தொகுதி" என்னும் பெயரிய இந்நூல் வெளிவருகின்றது.

தமிழ்ப் பாடவியலில் விதிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களினின்று சிறிதும் வழுவாமல், தமிழ் நாட்டு மாணவர்களுடைய மனநிலைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ற செய்யுட்களும், கட்டுரைகளும் ஈண்டுச் சேர்க்கப்பட்டுள்ளன. ஈண்டு இடம் பெற்றுள்ள செய்யுட்கள் மாணவர்களுடைய தமிழறிவை வளர்ப்பதுடன், அவர்க்குத் தமிழார்வத்தையும் ஊட்டும் என்பது ஒருதலை. இங்கே சேர்க்கப்பெற்றுள்ள கட்டுரைகள் யாவும் தமிழ் நாட்டு அறிஞர்களால் எழுதப் பெற்றவை. அவை மாணவர்களுடைய சிந்தனையைத் தட்டியெழுப்புவதற்கும், அவர்களுக்கு அழகுணர்ச்சியை ஊட்டுவதற்கும், தமிழில் நல்ல ஆற்றலை அளிப்பதற்கும் பெரிதும் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

மாணவர்க்குத் தமிழறிவு நிலைபெறப் பயிற்சிகள் பல தருதல் வேண்டும் என்பர் அறிஞர். அதற்கு இயைய இந்நூலுள் பன்முறைப் பயிற்சிகளும், சிறுவிடை வினாக்களும், கட்டுரை வினாக்களும், நடைமுறை இலக்கணப் பயிற்சிகளும் தரப்பெற்றுள்ளன. செய்யுட் சுவையை நுகர்வதற்குத் துணையாகச் செய்யுட் பகுதிக்குக் குறிப்புரையும் ஈண்டுச் சேர்க்கப்பட்டுள்ளது.

உயர்நிலைப் பள்ளியின் உயர் வகுப்பு மாணவர் இந்நூலைப் படித்துப் பயனடையுமாறு செய்யும்படி தமிழறிவு மிக்க சான்றோர்களை வேண்டுகின்றேன்.

சென்னை,
11—11—'52.

**கி. சி. வன்மீகநாதன்.**

## நன்றியுரை

இந்நூலின்கண் காணப்படும் செய்யுட்களுட் சிலவற்றையும், கட்டுரைகளுட் பலவற்றையும் ஈண்டுச் சேர்த்துக் கொள்வதற்கு மனமுவந்து இசைவுதந்த பெரியார்கள் பலராவர். அவர்கட்கு எம் மனநிறை நன்றி உரித்தாகுக.

### செய்யுட் பகுதி

| தலைப்பு | இசைவு தந்தவர் |
|---|---|
| 1. பாஞ்சாலி சபதம் | சென்னை அரசியலார். |
| 2. பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி | |
| 3. ஆசிய சோதி | ... கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள். |
| 4. மனோன்மணீயம் | ... தென்னிந்தியச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார். |
| 5. இளந்தமிழருக்கு | ... நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையவர்கள். |

### உரைநடைப் பகுதி

| தலைப்பு | இசைவு தந்த அறிஞர்கள் |
|---|---|
| 1. என் சரித்திரம் : | ... திருவாளர் க. சுப்பிரமணிய ஐயர். |
| 2. தமிழன் கண்ட மலேயா (கடிதம் 1) | ... வித்துவான் அ. மு. பரமசிவானந்தனர், B. O. L., M. Litt. |
| 3. நல்லார் இணக்கம் : | ... திருவாவர் ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B. L. |
| 4. அன்னைக்கு (கடிதம் 5) : | ... டாக்டர் மு. வரதராசனர், M. A., M. O. L., Ph. D. |
| ('அன்னைக்கு' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றது.) | |
| 5. ஏனிந்தப் பஞ்சம் : | ... திருவாளர் கு. இராஜவேலு M. A. |
| 6. கப்பலோட்டிய தமிழன் : | ... திருவாளர் ம. பொ. சிவஞான கிராமணியார். |
| 7. புள்ளின வாழ்க்கை | திருச்சி வானொலி நிலையத் தலைவர். |
| 8. கிராமத்தின் புது வாழ்வு | |
| 9. ரூபாவதி : | ... திருவாளர் வி. கூ. சாமிநாதன். |

இசைவு தந்த அறிஞர்கட்கு யாம் எழுமையுங் கடப்பாடுடையேம்.

**ஆசிரியர்.**

# உள்ளுறை

## செய்யுள்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| **I.** | **வாழ்த்து:** | | |
| | திருப்புகழ் | ... | 1 |
| | திருவருட்பா | ... | 2 |
| | இரட்சணிய யாத்திரிகம் | ... | 2 |
| | சீறாப் புராணம் | ... | 2 |
| | தேவாரம் | ... | 3 |
| | பிரபந்தம் | ... | 4 |
| **II.** | **அறவுரை:** | | |
| | 1. திருக்குறள் | ... | 6 |
| | 2. நாலடியார் | ... | 7 |
| | 3. சிறு பஞ்ச மூலம் | ... | 5 |
| **III.** | **வரலாறு:** | | |
| | 1. நளவெண்பா | ... | 9 |
| | 2. குசேலோபாக்கியானம் | ... | 11 |
| | 3. பாஞ்சாலி சபதம் | ... | 13 |
| | 4. ஆசிய சோதி | ... | 15 |
| | 5. மனோன்மணீயம் | ... | 17 |
| **IV.** | **சிறு நூல்கள் :** | | |
| | 1. திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி | ... | 19 |
| | 2. நால்வர் நான்மணி மாலை | ... | 21 |
| | 3. பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி | ... | 22 |
| | 4. இளந்தமிழருக்கு | ... | 23 |
| | 5. பாரசீகத் தனிப்பாடல்கள் | ... | 24 |
| **V.** | **பல்சுவை :** | | |
| | 1. சிலேடைக் கவி | ... | 24 |
| | 2. சீட்டுக் கவி | ... | 25 |
| | 3. அம்மானை | ... | 25 |
| **VI.** | **வருணனை :** | .... | 25 |
| | **குறிப்புரை :** | ... | 27 |

## மனப்பாடஞ் செய்தற்குரிய செய்யுட்கள்

| பகுதி | செய்யுள் எண் | வரிகள் |
|---|---|---|
| **I. வாழ்த்து :** | *5,8* | *12* |
| **II. அறவுரை:** | | |
| *1.* திருக்குறள் | *1,5,6,7,8,10,11,13* | *16* |
| *2.* நாலடியார் | *2,4* | *8* |
| *3.* சிறு பஞ்ச மூலம் | *3,4* | *8* |
| **III. வரலாறு :** | | |
| *1.* நளவெண்பா | *6,7,12* | *12* |
| *2.* குசேலோபாக்கியானம் | *7,9,10* | *12* |
| *3.* ஆசிய சோதி | *5,6,7* | |
| **VI. சிறு நூல்கள் :** | | |
| *1.* திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி | *2,4* | *8* |
| *2.* நால்வர் நான்மணி மாலை | *4* (இறுதி ஆறு அடிகள்) | *6* |
| *3.* இளந்தமிழருக்கு | *3* | *8* |
| **VI. வருணனை :** | *4* | *4* |
| | | *100* |

# உரைநடை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | என் சரித்திரம் (மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்) | .... | 45 |
| 2. | தமிழன் கண்ட மலேயா (கடிதம் 1.) (வித்துவான் அ. மு. பரமசிவானந்தனார், B. O. L., M. Litt. | .... | 52 |
| 3. | நல்லார் இணக்கம் (திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள். B. A., B. L.) | ... | 57 |
| 4. | கடமைக்குப்பின் உரிமை (தொகுத்தோன்) | ... | 63 |
| 5. | அன்னைக்கு (டாக்டர் மு. வரதராசனார், M. A., M. O. L., ph. D.) | ... | 69 |
| 6. | ஏனிந்தப் பஞ்சம் (சிறு கதை) திரு. கு. இராஜவேலு, M.A.) | ... | 73 |
| 7. | கப்பலோட்டிய தமிழன் (திரு. ம. பொ. சிவஞான கிராமணியார்) | ... | 77 |
| *8. | புள்ளின வாழ்க்கை : காகமும் குயிலும் (திரு. டி. வி. கிருஷ்ணன்) | ... | 83 |
| 9. | ரூபாவதி (திரு. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், B. A.) | ... | 88 |
| *10. | கிராமத்தின் புதுவாழ்வு-தொழில் திட்டம் (திரு. வி. வி. இராமசாமி, எம். எல். ஏ.) | ... | 92 |
| 11. | பண்டை உரைநடை | ... | 100 |
| | உரைநடைப் பகுதியின் வினாக்கள் | ... | 103 |


*திருச்சி வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப் பெற்றவை.

# தமிழ் இலக்கியத் தொகுதி

## (முதற் புத்தகம்)

---

## பொதுப் பிரிவு—செய்யுள்

## 1. வாழ்த்து

எடுத்த காரியம் இடையூறில்லாமல் இனிதாய் முடிவதற்காக இறைவனை வாழ்த்தி வணங்குதல் நம்நாட்டு வழக்கமாகும். அவ்வழக்கத்தைப் பின்பற்றித் தமிழ் நூல்களின் தொடக்கத்தில் பெரும்பாலும் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் காணப்படுகின்றன. கடவுளின் பெருமைகளைக் கூறுவதற்கென்றே தோன்றிய நூல்கள் பல தமிழ்மொழியில் உள்ளன. அப்பாடல்கள் படிப்போர் மனத்தையும், கேட்போர் மனத்தையும் உருக்கக் கூடியவை.

### திருப்புகழ்

முருகக் கடவுளைப் போற்றும் பாடல்கள் அமைந்த நூலே திருப்புகழ் ஆகும். இதனை இயற்றியவர் அருணகிரிநாதர் என்பவராவார். அவர் கி. பி. 15-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று தெரிகின்றது. பாரதம் பாடிய வில்லிபுத்தூராழ்வாரும் இவரும் ஒரே காலத்தைச் சேர்ந்தவர் என்பர் ஆராய்ச்சியாளர். திருப்புகழ்ப் பாடல்கள் எளிமையும் ஓசை நயமும் வாய்ந்தவை. இவ்வினிய பாடல்களை இன்னிசையுடன் பாடி முருகக் கடவுளை வழிபடுவது வழக்கத்தில் உள்ளது.

காரணம தாக வந்து புவிமீதே—
  காலனணு காதி சைந்து கதிகாண ;
நாரணனும் வேதன் முன்பு தெரியாத—
  ஞானநட மேபு ரிந்து வருவாயே ;
ஆரமுத மான தந்தி மணவாளா—
  ஆறுமுக மாறி ரண்டு விழியோனே;
சூரர்கிளை மாள வென்ற கதிர்வேலா—
  சோலைமலை மேவி நின்ற பெருமாளே.

## திருவருட்பா

சிவபெருமானிடம் கொண்ட அன்புப்பெருக்கினல் வெளிவந்த பாடல்களைக் கொண்ட நூல் திருவருட்பா ஆகும். இதனை அருளியவர் **இராமலிங்க சுவாமிகள்** ஆவார். இவர் சிவனடியார்களிடம் அன்பு கொண்டவர். இவர் சோழ நாட்டில் மருதூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர் என்று தெரிகிறது. இவர் 19-ம் நூற்ருண்டில் வாழ்ந்தவர். இவருடைய பாக்களில் பக்திச்சுவை சொட்டும்.

அன்னையினும் பெரிதினிய கருணை யூட்டும்
ஆரமுதே என்னுறவே அரசே யிந்த
மன்னுலகில் அடியேனை என்னே துன்ப
வலையிலகப் படவியற்றி மறைந்தாய் அந்தோ
பொன்னைமதித் திடுகின்ருேர் மருங்கே சூழ்ந்து
போனகமும் பொய்யுறவும் பொருந்த லாற்றேன்
என்னையுளங் கொள்ளுதியோ கொள்கி லாயோ
என்செய்வேன் என்செய்வேன் என்செய்வேனே. 2

## இரட்சணிய யாத்திரிகம்

இந்நூல் ஒரு கிறித்தவக் காப்பியம் ஆகும். ஜான் பன்யன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள மோட்சப் பிரயாணம் (Pilgrim's progress) என்னும் நூலைத் தழுவியே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலை இயற்றியவர் திரு. H. A. **கிருஷ்ண பிள்ளை** என்பவர் ஆவார். இவர் வாழ்ந்த காலம் 1827 முதல் 1900 வரையில் ஆகும். இவர் இந்தியக் கிறித்தவர்; திருநெல்வேலியில் தமிழ் ஆசிரியராக இருந்தவர். இந்நூற்பாடல்கள் சொற்சுவையும் பொருட்சுவையும் வாய்ந்தனவாகும்.

கன்னி பாலனுய்க் காசினி தனிலவ தரித்து
மன்னு ஜீவகோ டிகளெலாம் வான்கதி மருவத்
தன்னு யிர்ப்பரித் தியாகமுஞ் சிலுவையில் தந்த
என்னு பாசனு மூர்த்தியை அஞ்சலித் திடுவாம். 3

## சீருப்புராணம்

இஃது ஒரு முஸ்லிம் மதக் காப்பியம். முகம்மது நபிகள் நாயகத்தின் வரலாற்றை இந்நூல் கூறுகின்றது. இதனைப் பாடியவர் **உமறுப் புலவர்** என்பவிராவார். எட்டையபுர சமஸ்தானத்தில் இவரது தந்தையார் வணிகராக விளங்கிவந்தார். உமறுப் புலவர் இற்றைக்குச் சற்றேறக் குறைய 250 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். இந்நூல் இலக்கியச்சுவை வாய்ந்தது.

சிறந்தமெய்ப் பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமு முணர்ந்து
துறந்தவர் இதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பொன்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையு மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே.

## தேவாரம்

தே+ஆரம்=தேவாரம். தே - கடவுள்; ஆரம் - மாலை. சிவபிரானிடம் அன்பு மிகுதியால் பாடப்பெற்ற பாடல்களின் தொகுதிக்குத் தேவாரம் என்பது பெயர். தேவாரத்தை அருளிய ஆசிரியர்கள் **அப்பர், சம்பந்தர், சுந்தரர்** ஆகிய மூவரும் ஆவர். இம்மூவரும் தமிழ்நாட்டுச் சைவத் திருத்தலங்கள் தோறும் சென்று, ஈசனின் திருவருளைப் பல பாடல்களால் வழுத்தினர். அப்பரும், சம்பந்தரும் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தனர். சுந்தரர் கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்தார். அப்பர் ஈசன் அருளால் தமது சூலை நோய் தீரப்பெற்றவர். சம்பந்தர் குழந்தையாக இருந்த பொழுது பார்வதியம்மையாரிடம் ஞானப்பால் உண்டவர். சுந்தரர் ஈசனிடம் தோழன் உரிமை பூண்டவர்.

வடியேறு திரிசூலந் தோன்றும் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழும் திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 5

—**அப்பர்**

ஊனாயுயிர் ஆனாயுடல் ஆனாயுல கானாய்
வானாய்நில னானாய்கடல் ஆனாய்மலை ஆனாய் [டுறையுள்
-னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
ஆ யுனக் காளாய்இனி அல்லேனென லாமே. 6

—**சுந்தரர்**

## பிரபந்தம்

திருமாலினிடம் அன்புகொண்ட ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். அவர்கள் இறைவனிடம் கொண்ட பக்திப்பெருக்கால் பாடிய பாடல்களின் தொகுதிக்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்பது பெயர். ஆழ்வார்கள் பன்னிருவருள் **பெரியாழ்வாரும், குலசேகர ஆழ்வாரும்** சேர்ந்தவர்கள் ஆவார் திருமாலுக்குப் பூமாலைகளைச் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகிய ஸ்ரீ ஆண்டாளைப் பெற்றெடுத்தவர் பெரியாழ்வார். இவர் கி. பி. 8.ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். குலசேகர ஆழ்வார் சேர அரசர் குலத்தில் தோன்றியவர். பக்தி மேலீட்டால் இவர் தம்மை மறந்துவிடுவது வழக்கம். ஒருமுறை 'இராமன் இராவணனுடன் போர் செய்ய இலங்கைக்குச் சென்றார் என்று புராணப் பிரசங்கம் செய்தவர் சொல்லியபொழுது, இவர் தம்மையே மறந்து, 'ஆ, அப்படியா! இதோ, அப்பொழுதே அவருக்குத் துணை செய்ய நானும் செல்கின்றேன்' என்று கூறிக் கடலில் இறங்கிவிட்டாரென்றும், புராணப் பிரசங்கம் செய்தவர் உடனே, 'இராமன் இராவணனை வென்று 'திரும்பினார்' என்று கூறியவுடன், இவர் மகிழ்ச்சியோடு கரையேறினார் என்று கதை வழங்குகிறது.

## பெரியாழ்வார் திருமொழி

வருக வருக வருகவிங்கே
வாமன நம்பீ வருகவிங்கே
கரிய குழற்செய்ய வாய்முகத்துக்
காகுத்த நம்பீ வருகவிங்கே
அரிய னிவனெனக் கின்றுநங்காய்
அஞ்சன வண்ணா அசலகத்தார்
பரிபவம் பேசத் தரிக்ககில்லேன்
பாவியே னுக்கிங்கே போதராயே. 7

—**பெரியாழ்வார்**

## பெருமாள் திருமொழி

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மாநீ
ஆளா வுனதருளே பார்ப்பன் அடியேனே.

—**குலசேகர ஆழ்வார்.**

# II. அறவுரை

## 1. திருக்குறள்

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர் என்பதை யாவரும் அறிவர். 'வள்ளுவர்' என்பது ஒரு குடியின் பெயர். யானையின்மீது ஏறியிருந்து முரசு அறைந்து திருவிழா, திருமணம், படையெழுச்சி முதலியவற்றை மக்களுக்கு அறிவிப்பது வள்ளுவர் குடியின் தொழிலாகும். திருவள்ளுவனாரின் வாழ்க்கையைப்பற்றிப் பலவிதமான கதைகள் தமிழ் நாட்டில் வழங்குகின்றன. வள்ளுவனாரின் குறட்பாக்களையும், கருத்துக்களையும் தமிழ்ப் புலவர்கள் பலர் எடுத்தாண்டுள்ளனர். இவர் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவர் என்பது அறிஞர் கருத்து. திருக்குறளுக்குப் பதின்மர் உரையெழுதியுள்ளனர். அவற்றுள் **பரிமேலழகர்** எழுதிய உரையே சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இந்நூல் உலக மொழிகள் பலவற்றுள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பெரும் பிரிவுகளை உடையதாதலால் இதற்கு முப்பால் என்றும் பெயர் உண்டு. திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் 133. ஒவ்வோர் அதிகாரத்துக்கும் பப்பத்துக் குறட்பாக்களாக 1330 குறட்பாக்களைக் கொண்டது இந்நூல். இது பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

### வெகுளாமை

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கால் என். 1

நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையும் உளவோ பிற. 2

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. 3

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 4

### கல்வி

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. 5

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 6

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. 7

யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்.
சாந்துணையுங் கல்லாத வாறு. 8

கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. 9

## சொல்வன்மை

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல். 10

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து. 11

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. 12

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். 13

பல சொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சில சொல்லல் தேற்றா தவர். 14

இணருழ்த்து நாறா மலரனையர் கற்றது (து)
உணர விரித்துரையா தார். 15

## 2. நாலடியார்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று நாலடியார். **சமண முனிவர்கள்** பாடிய நீதி வெண்பாக்கள் பல. அவற்றுள் நானூறு பாடல்களின் தொகுதியே இந்நூல் ஆகும். இந்நூல் கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று ஒரு சாராரும், கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று மற்றொரு சாராரும் கூறுவர். "பெரும்பிடுகு முத்தரையர்" என்னும் பெயர் பல இடங்களில் வருகின்றதாதலால் இந்நூல் பல்லவர் காலத்தைச் சேர்ந்ததாகக் கருதற்கு இடமுண்டு. திருக்குறளை ஒட்டியே இந்நூலுக்கு இயலும், அதிகாரமும் வகுக்கப்பட்டன என்பர் சிலர். மக்களுக்கு இன்றியமையாத அறவுரைகள் பலவற்றை இந்நூல் கூறுகின்றது.

### அறன்வலியுறுத்தல்

உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழல்பயந் தா (அங்)கு—அறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும். 1

### தீவினையச்சம்

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்— வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. 2

### பெரியாரைப் பிழையாமை

பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபின்
ஆர்க்கும் அருவி அணிமலை நன்னாட
போர்க்குதல் யார்க்கும் அரிது. 3

### நட்பாராய்தல்

யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய். 4

### அறிவின்மை

கற்றறிந்த நாவினார் சொல்லார்தம் சோர்வஞ்சி;
மற்றைய ராவார் பகர்வர்; பனையின்மேல்
வற்றிய ஓலை கலகலக்கும் எஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை ஒலி. 5

## 3. சிறு பஞ்ச மூலம்

இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதைப் பாடியவர் **காரியாசான்** என்பவர் ஆவார். கண்டங்கத்தரிவேர், சிறு வழுதுணைவேர், சிறு மல்லி வேர், பெருமல்லி வேர், நெருஞ்சி வேர் என்னும் ஐந்தும் சிறு பஞ்ச மூலம் எனப்படும். இவ்வைந்தும் மக்களின் நோயைத் தீர்க்கும். அதுபோல இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் மக்களுக்கு இன்

நியமையாது, அவர்களுடைய அறியாமை நோயைப் போக்க வல்ல ஐந்து ஒழுக்கங்கள் கூறப்பட்டுள்ளனவாதலால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர்வனப்புங் காதின் வனப்பும்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு. 1

வார்சான்ற கூந்தல்! வரப்புயர வைகலும்
நீர்சான்(று) உயரவே நெல்லுயரும்—சீர்சான்ற
தாவாக் குடியுயத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்
ஓவா துரைக்கும் உலகு. 2

குளந்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்து
உளந்தொட்டு உழுவய லாக்கி—வளந்தொட்டுப்
பாகு படுங்கிணற்றோ(டு) என்றிவ்வைம் பாற்படுத்தான்
ஏகும் சுவர்க்கத் தினிது. 3

புண்பட்டார் போற்றுவார் இல்லாதார் போகுயிரார்
கண்கெட்டார் காலிரண்டும் இல்லாதார்—கண்கண்பட்டு
ஆழ்ந்து நெகிழ்ந்தவர்க் கீந்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து. 4

பஞ்சப் பொழுதகத்தே பாத்துண்பான் காவாதான்
அஞ்சா துடைபடையுள் போந்தெறிவான்—எஞ்சாதே
உண்பதுமுன் ஈவான் குழவி பலிகொடுப்பான்
எண்பதின் மேலும்வாழ் வான். 5

---

# III. வரலாறு

## 1. நள வெண்பா

நளனது வரலாற்றை வெண்பாவால் கூறும் நூலாதலால் இதற்கு நளவெண்பா என்று பெயர் வந்தது. இதனைப் பாடியவர் **புகழேந்திப் புலவர்** ஆவார். வெண்பாக்களைப் பாடுவதில் சிறந்தவ ராதலால் இவர் "வெண்பாவிற் புகழேந்தி" என்று புகழப்பட்டுள்ளார். இவருடைய பாடல்களில் எளிமையும், தெளிவும், பொருளாழமும், நயமும் நிறைந்திருக்கும். கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்கள் வாழ்ந்த காலத்திலேயே இவரும் வாழ்ந்தார் என்று சொல்லப்படுகின்றது. மள்ளுவ நாட்டைச் சேர்ந்த முரணை என்ற நகரில் இருந்து ஆண்ட சந்திரன் சுவர்க்கி என்னும் அரசன் புகழேந்திப் புலவரை ஆதரித்தான். இவர் வைணவ மதத்தைச் சார்ந்தவர் ஆவார்.

[நளன், புட்கரன் என்னும் சிற்றரசனுடன் சூதாடித் தன்னுடைய நாடு நகரங்கள் முதலிய எல்லாவற்றையும் தோற்றுவிட்டான்.]

### நளன் தமயந்தியுடன் நகர் விடுத்து நீங்குதல்

மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத்தான் போனாற்போல்—தன்கால்
பொடியாடத் தேவியொடும் போயினான், அன்றே
கொடியானுக்(கு) அப்பார் கொடுத்து. 1

### நளன் செல்லும் காட்சியைக் கண்ட நகர மக்கள் கூற்று

" ஆருயிரின் தாயே, அறத்தின் பெருந்தவமே,
பேரருளின் கண்ணே, பெருமானே,—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங் "கென்றார் தம்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று. 2

### அதற்கு நளன் கூறும் விடை

"வேலை கரையிழந்தால், வேதம் நெறிபிறழ்ந்தால்,
ஞால முழுதும் நடுவிழந்தால்,—சீலம்
ஒழிவரோ செம்மை உரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர்." 3

**நளன் தன்னுடைய மனைவிமக்களுடன் நகரைவிடுத்துச் சிறிது தொலைவு நடந்து சென்றவுடன், அவனுடைய மக்கள் கூற்று**

*சந்தக் கழற்றா மரையும் சதங்கையணி*
*பைந்தளிரும் நோவப் பதைத்துருகி,—"எந்தாய்,*
*வடந்தோய் களிற்றாய் வழியான தெல்லாம்*
*கடந்தோமோ" என்றார் கலுழ்ந்து.* 4

**அதுகேட்டு வருந்திய நளன் தமயந்தியினிடம் கூறுதல்**

*"காதல் இருவரையும் கொண்டு கடுஞ்சுரம்போக்(கு)*
*ஏதம் உடைத்திவரைக் கொண்டுநீ—மாதராய்,*
*வீமன் திருநகர்க்கே மீள்" என்றான், விண்ணவர்முன்*
*தாமம் புனைவாளைத் தான்.* 5

**தமயந்தி அதனை மறுத்து, மக்களை மட்டிலும் தனது தந்தையின் நகருக்கு அனுப்பலாம் என்றாள். அதுகேட்ட நளன் மக்கட் செல்வத்தின் சிறப்பைக் கூறுதல்**

*பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்(று)*
*என்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்*
*புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்*
*மக்களையிங் கில்லா தவர்.* 6

*சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும்*
*என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னம்*
*குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்ச்*
*சிறுகுதலை கேளாச் செவி.* 7

**தனது தந்தையின் நகருக்கு வருமாறு தமயந்தி நளனை அழைத்தாள். நளன் மறுத்தான். அதன்பின் தமயந்தி கூறுதல்**

*செங்கோலாய் உன்றன் திருவுள்ளம் ஈதாயின்*
*எங்கோன் விதர்ப்பன் எழில்நகர்க்கே—நம்கோலக்*
*காதலரைப் போக்கி அருள்என்றாள் காதலருக்(கு)*
*ஏதிலரைப் போல எடுத்து.* 8

**நளன் அதற்கு இசைந்து அப்பொழுது அங்கிருந்த ஓர் அந்தணனைப் பார்த்துக் கூறுதல்**

*பேதை பிரியப் பிரியாத பேரன்பின்*
*காதலரைக் கொண்டுபோய்க் காதலிதன்—தாதைக்குக்*
*காட்டுநீ என்றான் கலங்காத உள்ளத்தை*
*வாட்டுநீர் கண்ணிலே வைத்து.* 9

### அப்பொழுது மக்கள்

தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்தாள்
இந்து முகத்தை யெதிர்நோக்கி—எந்தம்மை
வேறாகப் போக்குதிரோ என்றார் விழிவழியே
ஆறாகக் கண்ணீர் அழுது. 10

### தமயந்தி வருந்துதல்

அஞ்சனந்தோய் கண்ணில் அருவிநீர் ஆங்கவர்க்கு
மஞ்சனநீ ராக வழிந்தோட—நெஞ்சுருகி
வல்லிவிடா மெல்லிடையாள் மக்களைத்தன் மார்போடும்
புல்லிவிடா நின்றாள் புலர்ந்து. 11

### அந்தணன் மக்களை அழைத்துச்செல்லுதல்

இருவர் உயிரும் ஒருகையால் வாங்கி
ஒருவன்கொண் டேகுவான் ஒத்து—வருமறையோன்
கோமைந்த னோடிளைய கோதையைக்கொண் டேகினான்
வீமன் நகர்க்கே விரைந்து. 12

## 2. குசேலோபாக்கியானம்

குசேல+உபாக்கியானம்=குசேலோபாக்கியானம். குசேலன்= பொலிவற்ற ஆடையை உடுத்தவன். இஃது அந்தணர் ஒருவரது பெயர். உபாக்கியானம்=கிளைக்கதை. பாகவதத்துள் காணப்படும் கிளைக்கதை இது. இந்நூலை இயற்றியவர் **தேவராச பிள்ளை** என்பவர் ஆவார். இவர் தொண்டை நாட்டில், வல்லூர் என்னும் ஊரில், பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவருக்கு ஆசிரியராக விளங்கியவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஆவார்.

குசேலர் என்பவர் ஓர் ஏழை அந்தணர். அவர் தமது இளமைப் பருவத்தில் கண்ணனுடன் சேர்ந்து சாந்தீப முனிவர் என்பவரிடம் கல்வி பயின்றார். பிற்காலத்தில் அவருக்கு மக்கட் செல்வம் பெருகியது. தமது வறுமையைப் போக்கிக் கொள்வதற்காக அவர் கண்ணனைக் காண முடிவு செய்தார்.

[குசேலர் கண்ணனைக் காணத் துவாரகை சென்றார்; கண்ணனது அரண்மனை வாயிலில் நின்றார்; துவாரபாலர் வாயிலாகத் தம் வருகையை உணர்த்தினார். துவாரபாலர் கண்ணனை அடைகின்றனர்.]

சிந்தையுள் மகிழ்ச்சி பொங்கச் சிரமிசைக் கரங்கள் கூப்பிச்
சந்தமார் நிலத்தின் வீழ்ந்து தாழ்ந்தெழீஇக் குடந்தம் பட்டு
முந்துதா ளையுமோ டுக்கி முன்னர்நிற் பாரை நோக்கி
வந்தகா ரியமென் னென்றான் வகுத்துரை யாடலுற்றார். 1

## துவாரபாலர் விண்ணப்பம்

மாமறைத் தலைவ போற்றி மதிக்குல விளக்கே போற்றி
காமரிந் திரன்முன் னானோர் காண்பதற் கரியாய் போற்றி
தாமரைக் கண்ணாய் போற்றி தரியலர் ஏறே போற்றி
தோமறு செல்வம் வாய்ந்த துவாரகைக் கிறைவா போற்றி. 2

ஆதிநாள் ஐய நின்னோ(டு) அருங்கலை கற்று ளானும்
போதவுஞ் சிறந்த நட்புப் பூண்டுகொண் டவனுங் கந்தை
மேதகக் கொண்ட நீரான் மெய்ம்மறை யவர்கு லத்தான்
கோதறு குணத்தின் மிக்கான் குசேலனென் றியம்பி னானே. 3

வற்றியென் பெழுந்த யாக்கை மாதவ னின்மேல் வைத்த
பற்றினை யெம்ம னோரோ பகுத்தறிந் தளக்க வல்லார்
இற்றைநாள் வந்து வாயில் இருக்கின்றா னெதிர்ந்த போரில்
வெற்றிகொள் கழற்கால் வேந்தே விண்ணப்ப மிதுவே
[யென்றார். 4

## அதுகேட்ட கண்ணன்

என்றலும் உவகை விம்ம எழில்முக மலர்ச்சி காட்டப்
பொன்றலில் கருணை பொங்கிப் பொழிதர விரைவி
[னிற்சென்(று)
இன்றுநம் வாயில் வந்த இருந்தவத் தலைவன் தன்னை
மன்றவிங் கழைப்பீர் என்று வாய்மலர்ந் தருளி னானே. 5

## அவ்வளவில் துவாரபாலர் குசேலரை அடைந்து

நின்னுடைய வரவு ரைத்தேம் நிருபனுக் கப்போழ் துற்ற
பன்னருங் களிப்பை யாமோ பகர்ந்திட வல்ல மைய
முன்னமங் கிருந்த இன்ப முழுவது மறந்து நிற்றான்
நன்னர்நெஞ் சுடைய நீரார் நட்பினிற் சிறந்த துண்டோ. 6

தாயது வருகை கேட்ட தனியிளங் குழவி போன்று
நேயமிக் குடைய னாகி நெஞ்சினுள் உவகை பூப்பப்
போயழைத் திடுமின் இன்னே போயழைத் திடுமின் இன்னே
போயழைத் திடுமின் இன்னே எனவிரை பொருளிற்
[சொன்னான்.

இலக்கணம் இன்மை நோக்கி இதற்குமேல் சொற்று னல்லன்
மலக்குறும் பறுத்து யர்ந்த மாதவத் தலைவர் ஏறே
பலப்பல சொல்லி யென்னைப் பாணித்தல் கரும மன்று
நலக்கநீ விரைவின் எய்தா விடினவ னண்ணு மிங்ஙன். 8

### அது கேட்ட குசேலன் அரண்மனைக்குட் சென்று கண்ணனைக் காணல்

வருந்துமோர் மிடியன் சேமவைப்பெதிர் கண்டாற் போலும்
அருந்துண விழந்தோன்விண்ணோர் அமுதெதிர் கண்டாற் போலும்
பரிந்துவெப் புழலு வோன்கற் பகமெதிர் கண்டாற் போலுஞ்
சரிந்தபற் றினன்மெய் யாசான் தனையெதிர்கண்டாற் போலும்.
எண்ணனைக் கிலங்கு மார்பம் ஈத்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம் வலமிட முறக்கொண் டானை
மண்ணனைத் தும்பு ரக்கும் வாசுதேவனை மணக்கும்
கண்ணனைத் துளவத் தாமக் கண்ணனைக் கண்ணிற் கண்டான். 10

### 3. பாஞ்சாலி சபதம்

பாண்டவர்களின் மனைவியாகிய பாஞ்சாலி துரியோதனனது சபையில் செய்த சபதத்தை விரிவாகக் கூறிய நூலே பாஞ்சாலி சபதம் ஆகும். அதைப் பாடியவர் நம் நாட்டுத் தேசீய கவியாகிய **சி. சுப்பிரமணிய பாரதியார்** ஆவார். பாரதியாரைத் தமிழ் நாடு நன்கு அறியும். அவருடைய பாடல்களில் வீரமும், உணர்ச்சியும், நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும், இலக்கியச் சுவையும் நன்கு காணப் படும். இவர் இற்றைக்குச் சற்றேறக்குறைய முப்பது ஆண்டு களுக்கு முன் வாழ்ந்தவர் ஆவார்.

[துரியோதனனுடன் ஆடிய சூதாட்டத்தில் தருமர் எல்லா வற்றையும் தோற்றுவிட்டார். துரியோதனன் பாஞ்சா லியைத் தனது சபைக்கு அழைத்துவரச் செய்து துகிலு ரிந்தான். கண்ணன் அருளால் அவள் தனது மானத் தைக் காப்பாற்றிக் கொண்டாள். அப்பொழுது சினங் கொண்டான் வீமன்.]

### வீமன் செய்த சபதம்

வீமன் எழுந்துரை செய்வான்—இங்கு
விண்ணவ ரானை பராசக்தி யாணை;
தாமரைப் பூவினில் வந்தான்—மறை
சாற்றிய தேவன் திருக்கழல் ஆணை ;

மாமக ளைக்கொண்ட தேவன்—எங்கள்
மரபுக்குத் தேவன் கண்ணன்பதத் தாணை ;
காமனைக் கண்ணழ லாலே—சுட்டுக்
காலனை வென்றவன் பொன்னடி மீதில். 1
ஆணையிட் டிஃதுரை செய்வேன் :—இந்த
ஆண்மையி லாத்துரி யோதனன் றன்னை
பேணும்பெ ருங்கன லொத்தாள்—எங்கள்
பெண்டுதி ரௌபதியைத் தொடை மீதில்
நாணின்றி "வந்திரு" என்றான்—இந்த
நாய்மக னாந்துரி யோதனன் றன்னை,
மாணற்ற மன்னர்கள் முன்னே, என்றன்
வன்மையி னால்யுத்த ரங்கத்தின் கண்ணே. 2
தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன்—தம்பி
சூரத்துச் சாதனன் தன்னையு மாங்கே
கடைபட்ட தோள்களைப் பிய்ப்பேன்—அங்குக்
கள்ளென ஊறுமி ரத்தங் குடிப்பேன்
நடைபெறும் காண்பி ருலகீர் !—இது
நான்சொல்லும் வார்த்தையென் றெண்ணிடல் வேண்டா !
தடையற்ற தெய்வத்தின் வார்த்தை—இது
சாதனை செய்க, பராசக்தி, என்றான். 3

### அருச்சுனன் சபதம்

பார்த்தனெ ழுந்துரை செய்வான் ;—இந்தப்
பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்
தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு—எங்கள்
சீரிய நண்பன் கண்ணன்கழ லாணை
கார்த்தடங் கண்ணி யெந்தேவி—அவள்
கண்ணிலும் காண்டிய வில்லினு மாணை ;
போர்த்தொழில் வித்தைகள் காண்பாய்,—ஹே !
பூதல மேஅந்தப் போதினில், என்றான்.

### பாஞ்சாலி சபதம்

தேவிதி ரௌபதி சொல்வாள்—'ஓம்'
தேவிப ராசக்தி யாணை யுரைத்தேன்:
பாவிதுச் சாதனன் செந்நீர்—அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை யிரத்தம்,

மேவியி ரண்டும் கலந்து—குழல்
மீதினிற் பூசிந றுநெய் குளித்தே
சீவிக்கு ழல்முடிப் பேன்யான் ; இது
செய்யுமுன் னேமுடி யே'னென் றுரைத்தாள். 5

## 4. ஆசிய ஜோதி

எட்வின் ஆர்னல்டு என்னும் ஆங்கில அறிஞர், புத்தர் பெருமானின் வாழ்க்கை வரலாற்றை "ஆசிய ஜோதி" (The Light of Asia) என்ற நூலில் எழுதியுள்ளார். அந்நூலில் உள்ள வரலாற்றை ஒருவாறு தழுவி, **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள்** "ஆசிய ஜோதி" என்ற தலைப்பில் பாடல்களாகப் பாடியுள்ளார். அவர் பாடிய 'மலரும் மாலையும்' என்னும் கவிதைத் திரட்டில் இப்பகுதியும் ஒன்றாகும். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் திருவிதாங்கூர் நாட்டைச் சேர்ந்த சுசீந்திரத்தை அடுத்துள்ள தேரூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர். நெடுங்காலம் ஆசிரியராக இருந்து பணியாற்றிய இவர் இதுபொழுது ஓய்வுபெற்று வாழ்ந்து வருகின்றார். இவருடைய பாடல்கள் எளிமையும், ஆழ்ந்த கருத்துக்களும் அமைந்தவை.

### புத்தரும் ஏழைச் சிறுவனும்

புண்ணிய மூர்த்தி புத்தமா முனிவன்
உண்மையை உணர்ந்திவ் வுலகினில் என்றும்
அழியா இன்பம் அடையும் அவாவினால்
மன்னர் வாழ்வையும் மறுத்தவ னாகித்
தந்தையை மறந்து தனயனைத் துறந்து
மங்கை யசோதை மதிமுகம் நீத்து
நள்ளிர வதனில் நன்னகர் நீங்கி
உண்ணும் உணவும் உறக்கமு மின்றி
இரவும்-பகலும் இடைவிடா தெங்கும்
நடந்து மெலிந்து நலிவுற் றொருநாள்
வேனில் வெயிலில் வெந்தெரி கானலில்
கைகால் தளர்ந்து கண்களும் மூடி
மூச்சும் அடங்கி முகமும் வெளிறி
உயிரும் உடம்பில் ஊச லாட
விஞ்சிய மயக்கால் வீழ்ந்து கிடந்தனன். 1

மயங்கி விழுந்து கிடந்த புத்தரைக் கண்ட ஓர் இடைச் சிறுவன் தாழ்ந்த குலத்தினனாதல்பற்றி, தன் கலயத்தில் பால் கறந்து அவருக்குக் கொடுக்கத் தயங்கினான். பிறகு அவன் ஆட்டின் பாலை நேராக அவரது வாயிலேயே கறந்து விட்டான். அப்பொழுது,

நிலத்திற் கிடந்த ஐயன்-மெல்ல
நிமிர்ந்து தலை தூக்கிக்
“கலத்தினி லேகொஞ்சம்—பாலைக்
கறந்து தருவாய்” என்றான். 2

“ஐயையோ! ஆகா” தென்றான்—சிறுவன்
“அண்ணலே, யானும்உனைக்
கையினால் தீண்டவொண்ணா—இடையன்ஓர்
காட்டு மனிதன்” என்றான். 3

உலகம் புகழ் பெரியோன்—இந்த
உரையினைக் கேட்டந்நாள்
அலகில் கருணையினால்—சொன்ன
அமுத மொழி இதுவாம். 4

“இடர்வரும் போதும்—உள்ளம்
இரங்கி டும்போதும்
உடன்பிறந் தவர்போல்—மாந்தர்
உறவு கொள்வ ரப்பா. 5

ஓடும் உதிரத்தில்—வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும்—சாதி
தெரிவ துண்டோஅப்பா. 6

எவர்உடம் பினிலும்—சிவப்பே
இரத்த நிறமப்பா
எவர்விழி நீர்க்கும்—உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா. 7

பிறப்பினா லெவர்க்கும்—உலகில்
பெருமை வாராதப்பா
சிறப்பு வேண்டுமெனில்—நல்ல
செய்கை வேண்டுமப்பா. 8

நன்மை செய்பவரே—உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே—அண்டித்
தீண்ட வொண்ணாதார்.” 9

நிலத்துயர் ஞானி—இவை
நிகழ்த்தி, “என் தம்பீ,
கலத்தினி லேகொஞ்சம்—பாலைக்
கறந்து தா” என்றான். 10

ஆயர் சிறுவனும்—கலத்தில்
அளிக்க வாங்கியுண்டு
தாயினும் இனியன்—கொண்ட
தளர்ச்சி நீங்கினனே. 11

## 5. மனோன்மணீயம்

இந்நூல் செய்யுள் உருவில் அமைந்த ஒரு நாடக நூல். இதனை இயற்றியவர் பேராசிரியர் **பெ. சுந்தரம் பிள்ளை** என்பவர் ஆவார். இவர் 1855-ஆம் ஆண்டு திருவிதாங்கூரைச் சேர்ந்த ஆலப்புழையில் பிறந்தவர். இவரது தந்தையார் பெருமாள் பிள்ளை என்பவர்; தாயார் மாடத்தி என்பவர். இவர் திருவனந்தபுரத்தில் பேரரசர் கல்லூரியில் அறிவுநூற் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். இவர் இவ்வுலக வாழ்வை 1897-ஆம் ஆண்டில் நீத்தார். சீவகன் என்னும் பாண்டிய அரசனின் மகள் மனோன்மணியாவாள். அவள் சேர அரசனாகிய புருடோத்தமனைக் கனவில் கண்டு அவனையே மணக்க விரும்பினாள். சீவகனின் அமைச்சனாகிய குடிலன் என்பவன் வஞ்சகன். அவன் தனது தந்திரத்தால் சீவகனுக்கும் புருடோத்தமனுக்கும் போர் நிகழுமாறு செய்து விட்டான். சீவகன் தன்னுடைய படை வீரர்க்குக் கூறும் வீரவுரையே ஈண்டுப் பாடமாக அமைந்துள்ளது.

### நான்காம் அங்கம்

### முதற் களம்

**இடம்:** படைபயில் களம். **காலம்:** மாலை.

**ஜீவகன்**.................................................வீரர்காள்,
நீடுபோர் குறித்திவண் நின்றோர் தம்முள்
யாரே யாயினுஞ் சீராந் தங்கள்
உயிருடம் பாதிகட் குறுமயர் வுன்னிச்

சஞ்சல மெய்துவோர் உண்டெனிற் சாற்றுமின்.
வஞ்சக மில்லை. என் வார்த்தையி துண்மை.
மானமோ டிவ்வரையிம் மாநக ரதனுட்
சேமமா யின்றிருத் திடுவம். திண்ணம்.
உத்தம மாதர்கள் உண்டுமற் றிங்கே
யெத்தனை யோபேர். இவர்க்கவர் துணையாம்.

**படைகள்.** இல்லை ! இல்லையிங் கத்தகைப் புல்லியர்!

**ஜீவ.** குறைவெனக் கருதன்மின் எம்புகழ்க் கூறு
சிறிதா மெனவுனிச் செப்பினேம் அதனற்
பிறிதுநீர் நினையீர் பேசுமின் உண்மை.

**படைத்தலைவர்.** இல்லையெம் மிறைவ! இந்நா டதனுள்
இல்லையத் தகையர்.

**யாவரும்.** இலையிலை ! இலையே !

**ஜீவ.** நல்லதப் படியேல், நாமே நுஞ்சுய
நாட்டினல் லுரிமைபா ராட்டும் பெரிய
மேன்மையு மதனல் விளைபுக ழதுவும்
மறக்கிலம். பொறுக்குமின். வம்மின்! விஜய
இலக்குமி காத்திருக் கின்றுள் ! அன்றியும்
ஒலிக்குநும் ஜயபே ரிகைகேட் டலதுமற்(று)
ஒய்கிலள் நோன்புநந் தாய்மனேன் மணியே.

**படைவீரர்.** மனேன்மணிக்கு ஜே ! ஜே ! ஜே !

**யாவரும்.** இளவரசிக்கு ஜே ! ஜே ! ஜே !

**ஜீவ.**

நந்தாய்தமர் நங்காதலர்
நஞ்சேய்பிறர் நாந்தாவுறை
நந்தேயமேல் வந்தேநனி
நொந்தாழ்துயர் தந்தேயிவண்
நிந்தாநெறி நின்றுரிவர்
தந்தாவளி சிந்தாவிழ,
அடிப்போமடல் கெடுப்போமுகத்
திடிப்போங்குடல் எடும்போமிடுப்
பொடிப்போஞ்சிர முடைப்போம்பொடி
பொடிப்போம்வசை துடைப்போமுயிர்

குடிப்போம்வழி தடுப்போம்பழி
முடிப்போமினி நடப்போம்நொடி,
என வாங்கு,
பெருமுர சதிரப் பெயருமின்
கருமுகி லீர்த்தெழு முருமென வார்த்தே.

[படைகள் முரசடித்து நடக்க, படைப்பாணர் பாட யாவரும் போர்க்களம் நோக்கிச் செல்கின்றனர்.]

# IV. சிறு நூல்கள்

## 1. திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி

ஒரு பாட்டின் அந்தத்தில் உள்ள சீரோ அசையோ அடுத்த பாட்டின் ஆதியில் வருமாறு பாடப்படும் நூலுக்கு **அந்தாதி** என்று பெயர். அந்தம்+ஆதி=அந்தாதி. அந்தத்தை ஆதியாக உடைய நூல். பத்து+பத்து= **பதிற்றுப்பத்து**. இந்நூலில் ஒவ்வொரு வகை விருத்தத்திற்கும் பப்பத்துப் பாடல்கள் வீதம் பத்து விருத்த வகையில் நூறு பாடல்கள் அமைந்துள்ளன வாதலால் இது பதிற்றுப்பத்தந்தாதி என வழங்கப்படுகிறது. கரி வலம் வந்த நல்லூர் என்னும் ஊர் மருவிக் **கருவை** என வழங்கப்படுகிறது. 'திரு' என்பது மங்கல அடைமொழியாகும். இந்நூல் கரி வலம் வந்த நல்லூரில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானைத் துதித்துப் பாடப்பட்ட நூலாகும். இதற்குக் குட்டித் திருவாசகம் என்றும் ஒரு பெயர் உண்டு.

இதனைப் பாடியவர் **அறிவீரராம பாண்டியர்** ஆவார். இவர் நைடதம் என்னும் நூலையும் பாடியுள்ளார். இவர் 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கருதப்படுகின்றது.

நடித்தேன் பொய்க்கூ(டு) எடுத்தவமே
நன்னாள் கழிய இந்நாளில்
படித்தேன் உனது திருநாமம்
பண்டை வினையைப் பற்றுத்தேன்
பிடித்தேன் பிறவிக் கடல்நீந்தப்
பெரிய புணையா வுனதடியை
முடித்தேன் உள்ளத் தெண்ணமெல்லாங்
கருவை வாழும் **முன்னோனே**

**முன்னைப்** பிறவித் தவப்பயனே
முழுவதும் அறியா மூடனிவன்
என்னக் கருத்தில் இரங்கியோ
யாதோ அறியேன் இரவுபகல்
கன்னற் பாகில் கோற்றேனில்
கனியில் கனிந்த கவிபாட
அன்னத் தொகுதி வயற்கருவை
ஆண்டான் என்னை **ஆண்டதுவே.** 2

**ஆண்ட** குரவன் ஆவானை
அல்லற் பிறவி அறுப்பானை
வேண்டும் பதவி தருவானை
வெளிவீட் டின்பம் அளிப்பானைத்
தூண்டல் செய்யா மணிவிளக்கைத்
தொழில்மூன் றியற்றும் தொல்லோனைக்
காண்டற் கரிய பேரொளியைக்
களாவின் நிழற்கீழ்க் **கண்டேனே.** 3

**கண்ட** கண்கள் புனல்பாயக்
களிப்பாய் உள்ளங் கரையழிய
விண்ட மொழியு நாக்குழற
விம்மி மேனி மயிர்பொடிப்பப்
பண்டை வசம்போய்ப் பரவசமாய்ப்
பரமா னந்தத் தெளிநறவம்
உண்டு தெவிட்டா அருள்புரிந்தான்
கருவை வாழும் **உரவோனே** 4

**உரகா** பரணத் திருமார்பும்
உமையொப் பனையாள் இடப்புறமுஞ்
சிரமா லிகையும் புரிசடையுஞ்
செய்ய வாயுங் கறைமிடரும்
வரஃதா பயமு மழுமானும்
வயங்கு கரமு மலரடியுங்
கருவா புரியான் வெளிப்படுத்திக்
காட்சி கொடுத்து நின்றானே. 5

## 2. நால்வர் நான்மணி மாலை

நால்வகை மணிகளைக்கொண்டு அழகுபெறத் தொடுக்கப் பெற்ற மாலை போல நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை, கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், நேரிசை ஆசிரியப்பா ஆகிய நால்வகைப் பாக்களை அழகுபெற வரிசையாக அமைத்துப் பாடப்பட்டது. ஆதலால் இந்நூல் நான் மணி மாலை என வழங்கப்படுகிறது. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்னும் சைவசமய குரவர் நால்வரைச் சைவர்கள் 'நால்வர்' என்று குறிப்பிடுவர்.

இந்நூலைப் பாடியவர் சிவப்பிரகாச சுவாமிகள் என்பவர் ஆவார் இவர் துறைமங்கலம் என்னும் ஊரின்கண் இற்றைக்குச் சற்றேறக்குறைய 150 ஆண்டுகட்குமுன் வாழ்ந்து வந்தார். இவர் வீர சைவர். நன்னெறி, சோண சைல மாலை முதலிய நூல்களையும் பாடியுள்ளார்.

### நேரிசை வெண்பா

### (சம்பந்தர்)

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவால்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் தண்டை
வெறித்தண் கமலமே வீடு. 1

### கட்டளைக் கலித்துறை

### (அப்பர்)

வீட்டிற்கு வாயில் எனுந்தொடை சாத்துசொல் வேந்தபொது
ஆட்டிற்கு வல்லன் ஒருவற்கு ஞான அமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமுன் னல்கினுமென்
பாட்டிற்கு நீயும் அவனுமொப் பீரெப் படியினுமே. 2

### அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

### (சுந்தரர்)

படியிலா நின்பாட்டில் ஆரூர னனிவிருப்பன்
பரமனென்ப(து)
அடியனேன் அறிந்தனன்வான் தொழுமீசன் நினைத்தடுத்
கொண்டு மன்றித் [தாட்
தொடியுலா மென்கைமட மாதர்பால் நினக்கர்கத் .
தூது சென்றும்
மிடியிலா மனைகள்தொறும் இரந்திட்டும் உழன்றமையால்
விளங்கு மாறே. 3

### நேரிசை ஆசிரியப்பா

### (மாணிக்க வாசகர்)

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனு மாரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த(து) என்குவி ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங்(கு) ஒருகால் ஓதிற்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே.

## 3. பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி

இப்பகுதியைப் பாடியவர் பாரதியார். அவரைப்பற்றி முன்பே படித்தீர்கள்.

பொழுது புலர்ந்தது யாம்செய்த தவத்தால்
புன்மை யிருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
யெழுந்து விளங்கிய தறிவெனும் இரவி;
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றேம்!
விழிதுயில் கின்றனை யின்னுமெந் தாயே!
வியப்பிது காண்! பள்ளி யெழுந்தரு ளாயே. 1

மதலையர் எழுப்பவும் தாய்துயில் வாயோ?
மாநிலம் பெற்றவள் இஃதுண ராயோ?
குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ?
கோமகளே, பெரும் பாரதர்க் கரசே!

விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதுங் காணாய் !
இதமுற வந்தெமை யாண்டருள் செய்வாய் !
ஈன்றவ ளேபள்ளி யெழுந்தரு ளாயே ! 2

## 4. இளந்தமிழருக்கு

இப்பாடப் பகுதியைப் பாடியவர் நமது அரசியல் அவைக்களப் புலவராகிய **நாமக்கல் இராமலிங்கம்** பிள்ளையவர்கள் ஆவார். மறுமலர்ச்சிப் புலவர்களுள் இவரும் ஒருவராவார். இவருடைய பாடல்கள் மக்களுடைய உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பும் தன்மை வாய்ந்தவை; காவியச்சுவை அமைந்தவை.

அன்பினோடு அறிவுசேர்ந்த ஆண்மைவேண்டும் நாட்டிலே
அச்சமற்ற தூயவாழ்வின் ஆற்றல் வேண்டும் வீட்டிலே
இன்பமான வார்த்தைபேசி ஏழைமக்கள் யாவரும்
எம்முடன் பிறந்தபேர்கள் என்றஎண்ணம் வேண்டுமே
துன்பமான கோடிகோடி சூழ்ந்துவிட்ட போதிலும்
சோறுதின்ன மானம்விற்கும் துச்சவாழ்வு தொட்டிடோம்
என்பதான நீதியாவும் இந்தநாட்டில் எங்கணும்
இளந்தமிழா, என்றும்நின்று ஏடெடுத்துப் பாடுவாய். 1

ஓடிஓடி நாட்டிலெங்கும் உண்மையைப் பரப்புவாய்
ஊனமான அடிமை வாழ்வை உதறித்தள்ள ஓதுவாய்
வாடிவாடி அறம்மறந்து வறுமைபட்ட தமிழரை
வாய்மையோடு தூய்மைகாட்டும் வலிமைகொள்ளச் செய் [குவாய்
கூடிக்கூடிக் கதைகள்பேசிச் செய்கையற்ற யாரையும்
குப்பையோடு தள்ளிவிட்டுக் கொள்கையோடு நின்றுநீ
பாடிப்பாடித் தமிழின்ஓசை உலகமெங்கும் பரவவே [செய்
பார்த்தயாரும் வார்த்தைகேட்டுப் பணியுமாறு சேவை 2

தமிழனென்ற பெருமையோடு தலைநிமிர்ந்து நில்லடா
தரணியெங்கும் இணையிலாவுன் சரிதைகொண்டு சொல் [லடா
அமிழ்தமென்ற தமிழினோசை அண்டமுட்ட உலகெலாம்
அகிலதேச மக்களுங்கண் டாசைகொள்ளச் செய்துமேல்
கமழ்மணத்தின் தமிழில்மற்ற நாட்டிலுள்ள கலையெலாம்
கட்டிவந்து தமிழர்வீட்டில் கதவிடித்துக் கொட்டியே
நமதுசொந்தம் இந்தநாடு நானிலத்தில் மீளவும்
நல்லவாழ்வு கொள்ளச்சேவை செய்துவாழ்க நீண்டநாள். 3

## 5. பாரசீகத் தனிப்பாடல்கள்

ஈண்டுள்ள பாடல்களைப் பாடியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் ஆவார். அவரைப்பற்றி முன்பே படித்தீர்கள்.

'புயலே யனைய கொடையாளர்
புவன மடங்காப் புகழுடையார்
இயலும் கல்விக் கிணையில்லார்'
எனவே தத்தம் முன்னோரின்
செயலும் குணமும் சிறப்பும்அனு
தினமும் மிகவே போற்றிடுவீர்
வயலைப் பயிர்செய் யாதுபழ
வைக்கோல் கிண்டிப் பயனெதுவோ. 1

ஆழி சூழும் உலகாளும்
அரச ணுகை வேண்டுமெனில்
வாழும் வாழ்வில் உன்னையும்நீ
மறந்து வாழ வேண்டுமடா
ஏழை யாகி எளியவரின்
எளிய ணுகை வேண்டுமடா
தோழ ணுகி யாவர்க்கும்
தொண்ட ணுகை வேண்டுமடா. 2

# V. பல் சுவை

## 1. சிலேடைக் கவி

### சங்கைச் சலேடை வெண்பா

நித்திலத்தாற் சோறடுபொன் னீர்மையரும் பாவவரும்
சித்திரப்பா வைக்கூட்டுஞ் சிங்கையே—அத்திரத்தால்
சோர விலங்கையினுன் சோரவென்ற வாளிதொட்ட
பார விலங்கையினுன் பற்று.

### கலைசைச் சலேடை வெண்பா

நாவலர்தம் புத்திரரும் நண்ணும் பிரமரமுங்
காவியங்கள் ஆயுங் கலைசையே—தூவெள்ளைக்
கோட்டுக் குழையார் கொழுங்கயற்கண் மெல்லியலாங்
கோட்டுக் குழையார் குடி.

## 2. சீட்டுக் கவி

ஏடாயி ரங்கோடி எழுதாது தன்மனத்
தெழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்கு மோலை
சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசே கரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
செழியன்எதிர் கொண்டு காண்க ;
பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
பற்றிக் கொலாத கோணம்
பறவாத கொக்குஅனற் பண்ணுத கோடைவெம்
படையில் தொடாத குந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாத சடிலம்
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்கும்
துதிக்கவர விடல்வேண் டுமே.

## 3. அம்மானை

ஈசன் பசுவாகி ஏமனொரு கன்ருகி
வீசுபுக ழாரூரின் வீதிவந்தார் அம்மானை
வீசுபுக ழாரூரின் வீதிவந்தார் ஆமாயின்
காசளவு பாலும் கறவாதோ அம்மானை
கன்றை யுதைகாலி கறக்குமோ அம்மானை.

# VI. வருணனை

### நாடு

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்னுட்டம் போலும் தகைமைத்தே, சாகசஞ்சூழ்
நன்னுட்டின் முன்னுட்டும் நாடு. 1

## மலை

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
 முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண் டோடும்
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
 கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை யிடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்
 தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவில் ஈசர்
 வளம்பெருகுந் திரிகூட மலையெங்கள் மலையே. 2

## தென்றல்

பொங்கரின் நுழைந்து வாவி
 புகுந்துபங் கயந்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை
 மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு
 குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும்
 அறிவன்போல் இயங்கு மன்றே. 3

## ஆறு

தாதுகு சோலை தோறுஞ் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணற் றடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கள் தோறும்
ஓதிய வுடம்பு தோறும் உயிரென உலாய தன்றே. 4

## மகளிர் பாடிய விதம்

காவியங் கண்ணும் மூடா
 கவரிதழ் தானும் கோடா
வாவியங் கமலம் அன்ன
 வதனமும் நுதலும் ஏரு
தூவியந் தோகை நல்லார்
 சுவரின்மேல் எழுதி வைத்த
ஓவியம் பாடிற் றென்னப்
 பாடினர் உருக யாரும். 5

# குறிப்புரை

---

## வாழ்த்து

1. காலன் - இயமன். வேதன் - பிரமன். தந்தி - யானை. ஆரமுத மான தந்தி - அரிய அமுது போன்ற தெய்வயானை அம்மை. கிளை - சுற்றத்தார். மாள - இறக்க.

2. மன் - நிலைபெற்ற. துன்பமாகிய வலை: உருவகம். மருங்கு - பக்கம். போனகம் - உணவு.

3. கன்னி - மரியம்மை. காசினி - பூமி. வான்கதி - விண்ணுலகக் கதி. பரித்தியாகம் - பலி. உபாசனு மூர்த்தி - வழிபடு தெய்வம். அஞ்சலித்தல் - சிரமேல் கரந்தூக்கிக் கைகூப்பித் தொழுதல்.

4. முக்காலம்: இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய முக்காலம். இதயம் + ஆசனம் = இதயாசனம். பிறப்பு + இறப்பு = பிறப்பிறப்பு. மதி - அறிவு.

5. வடி - கூர்மை, தீட்டுதல். இளமதியம் - பிறைச்சந்திரன். கடி - மணம். கமழ் - வீசும். கண்ணி - தலைமாலை. குழை - குண்டலம். களிற்றுரிவை - யானைத்தோல். எழில் - அழகு. இலங்கி - விளங்கி. பொடி - திருநீறு. பொழில் - சோலை. புனிதனுர் - தூய்மை வாய்ந்த ஈசனுர்.

6. ஊன் - உடம்பு. ஆர் - நிறைந்த. பெண்ணையாற்றின் தென்பால் அமைந்த திருவெண்ணெய் நல்லூர். ஆள் - அடிமை.

7. வாமனன் - திருமாலின் பத்து அவதாரங்களுள் ஒன்று: குறுகிய உருவத்துடன் அமைந்த அவதாரம். நம்பி - ஆண் பிள்ளைகளிற் சிறந்தவன். நம்பீ: விளி. குழல் - தலைமயிர். காகுத்தன்: இராமனின் வேறு பெயர். அஞ்சனம் - மை, வண்ணன் - நிறத்தை உடையவன். பரிபவம் பேச - அற்ற.

8. மருத்துவன் - வைத்தியன். மாளாத - குறையாத. மருத்துவன் வாளால் அறுத்துச் சுட்டாலும் நோயாளன் அவனிடம் அன்பு கொள்வான். அது போலக் கடவுள் துயர் தந்தாலும் அவரது அருளையே எதிர் நோக்கி இருப்பார் ஆழ்வார்.

## வினாக்கள்

1. அருணகிரிநாதர் முருகனை எவ்வெவ்வாறு விளிக்கின்றார் ?
2. இராமலிங்க சுவாமிகள் எதனை ஆற்றேன் என்கிறார் ?
3. ஏசுநாதர் செய்த பரித்தியாகம் யாது ?
4. உமறுப்புலவர் போற்றும் கடவுளின் பண்புகள் யாவை ?
5. மண்ணினில் மதி மறந்தவர் யாவர் ?
6. பூவணத்துப் புனிதரின் திருவுருவச் சிறப்பை வரைக.
7. சிவபெருமானுக்குரிய மாலை, போர்வை ஆகியவை யாவை ?
8. கடவுள் எவ்வெவ்வாறு ஆனவர் என்று சுந்தரர் பாடுகின்றார் ?
9. வெண்ணெய் நல்லூர் எங்குள்ளது ?
10. கண்ணனை எவ்வெவ்வாறு யாசோதை விளிப்பதாக ஆழ்வார் பாடுகின்றார் ?
11. "பரிபவம் பேசத் தரிக்கல்லேன்:" இஃது யார் கூற்று ? பரிபவம் பேசுபவர் யாவர் ? யாரைப்பற்றி ?
12. நோயாளனின் தன்மை யாது ?
13. ஈசன் துயர் தந்தாலும் ஆழ்வார் அவனருளையே பார்த்திருப்பார். இதற்குக் காட்டப்பட்ட உவமை யாது ? விளக்குக.
14. பிரித்துக் காட்டுக:—ஆரமுதம், முக்காலம், பிறப்பிறப்பு கடியேறு, உனதருள்.
15. புணர்த்திக் காட்டுக :—பொடி + ஏறு; நிலன் + ஆனாய்; அருள் + துறை; வருக + இங்கே ; இவன் + எனக்கு ; உனது + அருள்.
16. ஆரமுதே : இஃது உவமையா, உருவகமா ? என் ? விளக்குக.

# II· அறவுரை

## 1. திருக்குறள்

**வெகுளாமை :** அஃதாவது சினத்தைச் செய்வதற்குக் காரணம் ஒருவனிடத்து உளதாயவிடத்தும் சினத்தைக் காட்டாமை.

1. சினம் செல் இடத்து என மாற்றுக. காப்பான் காப்பான் - சினம் எழாமல் தடுப்பானே அருளால் தடுப்பானுவான். அல் இடத்து - பலியாத இடத்து.

2. உவகை - மகிழ்ச்சி. சினத்தின் - சினமேயல்லாது. பிற பகையும் உளவோ என மாற்றுக.

3. பொருள் என்று - தனது வலிமையை உணர்த்துகின்ற ஒரு குணம் என்று. கேடு - அவ்வலிமையை இழத்தல். பிழையாதற்று - தப்பாதவாறு போலத் தப்பாது.

4. இணர் - சுடர். தோய்வன்ன - தோய்ந்தால் ஒத்த - இன்னு - தீங்கு. வெகுளாமை புணரின் நன்று எனக் கூட்டுக புணரின் - கூடுமாயின்.

5. கற்பவை - கற்கப்படும் நூல்களை. கசடு - பழுது. அதற்குத்தக - அக்கல்விக்குத்தக. 'அவை சொல்லும் நெறியின் கண்ணே' என்பதை வருவிக்க.

6. என்பவர் - என்று உயர்த்துச் சொல்லப்படுவார். கல்லாதார் முகத்தில் கண்ணிலர்; புண்ணுடையர் எனல் வேண்டும்.

7. மணற்கேணி—மணலின்கண் கேணி. தொட்டனைத்து - தோண்டிய அளவிற்றாக. 'அதுபோல' என்பதனை வருவிக்க. உவமையையும் பொருளையும் இணைக்கும் உவம உருபு ஈண்டின்மையால் இஃது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

8. 'கற்றவனுக்கு' என்று முதற்கண் வருவிக்க. ஆல் இரண்டிடங்களிலும் அசை. சாந்துணையும் - இறக்குமளவும். என் - என் கருதி.

9. கேடில் - அழிவில்லாத. விழுச் செல்வம் - சீரிய செல்வம். மற்றையவை - மணி, பொன் முதலியவை. மாடு-செல்வம்.

10. பிணிக்கும் - கட்டும். கேளார்-பகைவர். வேட்ப - நட்பினை விரும்புமாறு.

11. சொல்லை - தாம் சொல்லக் கருதிய சொல்லை. சொல்லைப் பிறிதோர்சொல் வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து அச் சொல்லைச் சொல்லுக என மாற்றிப் பொருள் காண்க.

12. வல்லன் - வல்லனாய். அஞ்சான் அவனை - அவைக்கு அஞ்சாதவனாயினான் யாவனோ அவனை. இகல் - மாறுபாட்டின் கண்.

13. நிரந்து - கோவையாக, வரிசையாக. ஞாலம் - உலகம் கேட்கும் - ஏற்றுக் கொள்ளும்.

14. மாசு - குற்றம். சில - சிலவாய சொற்களை. தேற்றாதவர் - அறியாதார். காமுறுவர் - விரும்புவர்.

15. கற்றது - கற்று வைத்த நூலை இணர் - கொத்தின். கண்ணே. ஊழ்த்தும் - மலர்ந்தும். நாறா - மணம் வீசாத,

## 2. நாலடியார்

1. உறங்கும் என்பது உறக்கும் என விகாரமாயிற்று. உறக்கும் துணையதோர் ஆலம் வித்து - சுருங்கிய அளவினதாகிய ஆலம் விதை. இறப்பு - மிகுதியாக. வான் சிறிதா- வானம் சிறிதென்னும்படியாக.

2. கேண்மை - நட்பு. நந்தும் - வளரும். வைகலும் - நாள் தோறும். தேயும் - குறையும். தொடர்பு - நட்பு.

3. புரை - குற்றம். ஆர்க்கும் - ஒலிக்கும். அணி - அழகு. பேர்க்குதல் மாற்றுதல்.

4. ஒரீஇ - நீக்கி. கெழீஇக்கொளல் - தழுவிக் கொள்ளுதல். மெய்யாது + ஆக = மெய்யாதாக—உடம்பின் கண் இருக்க. நாய் தன் அன்பிற்கு அறிகுறியாக வாலைக் குழைக்கும்.

5. பகர்வர் - சொல்வர். வற்றிய ஓலைக்கே ஒலியுண்டு ; பச் சோலைக்கு ஒலியில்லை. அதுபோலக் கற்றோர் சொல்லார்; மற்றையோர் சொல்வர் எனக் கொள்க.

## 3. சிறு பஞ்ச மூலம்

1. வனப்பு - அழகு. உகிர் - நகம். செயிர் - குற்றம். நூற்கியைந்த சொல் - நூலுக்கு ஏற்புடைய சொல்.

2. வார் - நீட்சி. சான்ற - மிகுந்த. கூந்தல் - கூந்தலையுடைய பெண். ஈண்டு விளி. தாவா - கெடாத. கோ - அரசன். ஓவாது - இடைவிடாமல்.

3. தொட்டு - தோண்டி. கோடு - மரக்கொம்பு. சேர்த்து - சேர்ப்படுத்தி.

4. போற்றுவார் - காப்பாற்றுவோர், நெகிழ்ந்தவர் - தளர்ந்தவர்.
5. பாத்து - பிரித்துக் கொடுத்து. எறிவான் - கலக்குவான். எஞ்சாது - மிச்சமில்லாமல். குழவி - குழந்தை. பிறர் பொருட்டாகக்குழந்தையைக் கூடப் - பலி கொடுக்கத் தயங்காதவன்.

## வினாக்கள்

1. சினங்காப்பான் யாவன் ?
2. சினத்திற் பகையும் உளவோ ; இவ்வாறு கூறியமை என் ?
3. நிலத்தறைந்தான் கைபிழையாதது போன்றது எது ?
4. எவ்வாறு கற்க வேண்டும் ? கற்றபின் எவ்வாறு நிற்க வேண்டும் ?
5. கண்ணுடையர் என்போர் யாவர் ?
6. 'தொட்டனைத்தூறும்' என்னும் - குறட்பாவில் - அமைந்துள்ள அணி யாது ?
7. மாடல்ல மற்றையவை ;என் ? விளக்குக.
8. சொல் எத்தகையதாக இருத்தல் வேண்டும் ?
9. எவ்வாறு ஒரு சொல்லைச் சொல்லுதல் வேண்டும் ?
10. யாரை இகல் வெல்ல முடியாது ? என் ?
11. விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்: என் ?
12. பல சொல்லக் காமுறுவர்: யாவர் ?
13. இணருழ்த்து - நாறு - மலரனையர் : யாவர் ? எவ்வாறு ? விளக்குக.
14. தக்கார் கைப்பட்டால் அறப்பயன் சிறிதாயினும் பெரிதாகும் : எதுபோல ?
15. பிறை, சந்திரன்: இவற்றின் தன்மைகள் யாவை ?
16. புரை தீர்ந்தாரின் பண்பு யாது ?
17. புரை தீர்ந்தாரிடம் வெறுப்பன செய்தல் கூடாது : என் ?
18. யானை, நாய் : இவற்றின் பண்புகள் யாவை ?
19. எத்தகையாரின் நட்பைக் கொள்ளுதல் வேண்டும் ? எத்தகையாரின் நட்பைக் கொள்ளுதல் கூடாது ? என் ?

20. கற்றறிந்த நாவினுர் சொல்லார் : ஏன் ?

21. வற்றிய ஓலை, பச்சோலை: இவற்றின் தன்மைகள் யாவை ? அவற்றைக்கொண்டு ஆசிரியர் விளக்கியவை யாவை ?

22. எவை வனப்புகள் அல்ல ? வனப்பு எது ?

23. ஓவாது உரைக்கும் உலகு: உலகு உரைப்பவை யாவை ?

24. எத்தகையான் இனிதே சுவர்க்கத்திற்கு ஏகுவான் ?

25. கடைபோக வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து: எத்தகையார் ?

26. எண்பதின் மேலும் வாழ்வான் யாவன் ?

27. அறவுரைப் பகுதியில் வந்துள்ள உவம உருபுகளுள் நான்கினைப் பொறுக்கி எழுதுக.

28. எடுத்துக்காட்டு உவமையணியின் இலக்கணம் யாது ? விளக்குக.

29. நாறுமலர் ; கோடிட்ட சொல்லுக்கு இலக்கணக் குறிப்பு வரைக.

30. நிழல் பயந்தா அங்கு: ஈண்டு எவ்வளபெடை உள்ளது ? ஏன் ?

31. கெழீஇக் கொளல் வேண்டும்: ஈண்டு எவ்வுயிரளபெடை உள்ளது ?

32. புணர்த்திக் காட்டுக : — சினம் + காப்பான் ; மணல் + கேணி; சோர்வு + இலன்; பசுமை + ஓலை; கோ + உயரும் ; குடி + உயரும் ; நெல் + உயரும்.

# III. வரலாறு

## 1. நள வெண்பா

1. சிறை - சிறகு, புன் - அற்பமான, பொடி-புழுதி, ஆட-முழுக, கொடியான்: புட்கரன், பார் - பூமி.

2. உயிர்களுக்குத் தாய்போன்றவன் நளன். வார்த்து - சொரிந்து, கழுவா நின்று - கழுவி நின்று.

3. வேலை - கடல், நெறி - வழி, பிறழ்ந்தால் - மாறினல், நடு - நடு நிலைமை, சீலம் - ஒழுக்கம், திறம்பா - மாறுபடாத.

4. சந்தம் - அழகு. கழல் ஆண்களுக்குரிய காலணி; சதங்கை பெண் களுக்குரியவணி. தாமரை-தாமரை போன்ற அடி, தளிர்-தளிர் போன்ற அடி, எந்தாய் - எம் தந்தையே. களிறு - ஆண்யானை, கலுழ்ந்து - அழுது.

5. கடுஞ்சுரம் - கடுமையான பாலை நிலம், ஏதம் - துன்பம். தமயந் தியின் தந்தை வீமன். விண்ணவர் - தேவர், தாமம் - மாலை. விண்ணவர்முன் தாமம் புனைந்தவள் தமயந்தி.

6. அடிசில் - சோறு, அளையும் - துழாவும், தாமரை மலர் போன்ற கை. நாறும் - மணம் வீசும், செய்ய - சிவந்த.

7. தோய்ந்தாலும் - கற்றுணர்ந்தாலும், கோ - உயர்ந்த, குதலை - குதலைச் சொற்கள்; குழந்தைகள் பேசும் திருந்தாத சொற்கள். கேளா - கேளாத.

8. கோன் - அரசன், கோலம் - அழகு, காதலர் - மக்கள், கணவன். ஏதிலர் - அயலார்.

9. பேதை - பெண், பிரிய - பிரிக்கவும், தாதை - தந்தை: வீமன். உள்ளம் - மனம்.

10. பயந்தாள் - பெற்றவள், இந்து - சந்திரன், இந்து முகம் - சந் திரன் போன்ற முகம்; உவமைத்தொகை. போக் குதிரோ - செலுத்துகிறீர்களோ.

11. அஞ்சனம் - மை, அருவி போல பெருகும் நீர். மஞ்சன நீர் - முழுகச் செய்யும் நீர். வல்லி - கொடி, வல்லி விடா - கொடி யின் மென்மைத் தன்மை நீங்காத. புல்லி - தழுவி, புலர்ந்து - வாடி.

12. மறையோன் - அந்தணன், கோமைந்தன்-இள வரசன், கோதை- பெண். இருவர் உயிரை ஒருவன் கொண்டு செல்வதுபோல மறையோன், மக்கள் இருவரையும் கொண்டு சென்றான்.

## 2. குசேலோபாக்கியானம்

1. மிசை : ஏழாம் வேற்றுமை உருபு, சந்தம்-அழகு, ஆர் - பொருந்திய, தாழ்ந்து - வணங்கி, எழீஇ - எழுந்து, குடந்தம் பட்டு - வழிபட்டு, தானை - ஆடை.

2. மறை - வேதம், போற்றி - துதிக்கின்றோம், மதிக்குலம் - சந்திர வம்சம், காமர் - அழகிய, கண்ணன் தாமரை மலர் போலும் கண்களை யுடையவன். தரியலர் - பகைவர், ஏறு - ஆண் சிங்கம், தோம் - குற்றம், அறு - இல்லாத.

3. போதவும் - மிகவும். மேதக - சிறப்பாக, நீரான் - குணத்தை உடையவன், கோது - குற்றம், இயம்பினன் - சொன்னன்.

4. யாக்கை - உடம்பு, பற்று - அன்பு, பகுத்து - பிரித்து, வேந்தன் ஈண்டு கண்ணன்.

5. உவகை - மகிழ்ச்சி, விம்ம - பூரிக்க, எழில் - அழகிய, பொன்றல் - அழிதல், இருந்தவத்தலைவன் - பெரிய தவத்தைச் செய்த தலைவன், மன்ற-நிச்சயமாக, வாய் மலர்ந்தருளினன்-கூறினன். மலர்ந்தருளுதல் என்பது உபாசார வழக்கு.

6. நிருபனுக்கு - அரசனுகிய கண்ணனுக்கு, பன்னரும் - சொல்ல முடியாத. ஐய : அண்மை விளி. நன்னர் - நல்ல, நீரார் - குணமுடையார், நட்பினில் - நட்பைக் காட்டிலும்.

7. குழவி - குழந்தை, நேயம் - அன்பு, இன்னே - இப்பொழுதே.

8. "விரைசொல் அடுக்கே மூன்றுவரம் பாகும்" என்பது தொல்காப்பியச் சூத்திரம். விரைசொல் மூன்று முறையே அடுக்கி வருதல் வேண்டும் என்பது விதி. மலம் - பாசம், குறும்பு - பகை, பாணித்தல் - தாமதித்தல், கருமம் - காரியம் நலக்க - நன்மை விளைய, இங்ஙன் நண்ணும் - இவ்விடம் வருவான்.

9. மிடியன் - தரித்திரன், சேம வைப்பு - சேமித்து வைக்கப் பட்ட நிதி. பரிந்து - வருந்தி, வெப்பு - வெயில், உழலுவோன் - வருந்துவோன், சரிந்த - கழிந்த, பற்று - ஆசை.

10. எண் - நினைக்கும், மதிப்புக்குரிய, வண்ணன் - நிறமுடையவன், திகிரி - சக்கரம், புரக்கும் - காக்கும். கள் நனை - தேனினல் நனைந்த, தாமம் - மாலை.

## 3. பாஞ்சாலி சபதம்

1. விண்ணவர் - தேவர். தாமரைப் பூவினில் வந்தவனும் வேதம் சாற்றியவனும் பிரமன். சாற்றிய - சொல்லிய. காமன்-மன்மதன். தமது நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்ட

நெருப்பினல் சிவபிரான் மன்மதனை எரித்துச் சாம்பலாக்கினர் என்பது புராண வரலாறு. அழல் - நெருப்பு. மார்க்கண்டனுக்காகச் சிவபிரான் இயமனை உதைத்து வென்ருன் என்பது புராண வரலாறு.

2. ஆண்மை - ஆண் தன்மை, வீரம். கனல் - நெருப்பு, நாண் - வெட்கம், மாண் - சிறப்பு, யுத்தரங்கம் - போர்க்களம். கண்: ஏழாம் வேற்றுமையுருபு.

3. மாய்ப்பேன் - அழிப்பேன், கடைபட்ட - கடைந்தெடுத்தாற் போன்றிருக்கின்ற, காண்பிர் - பார்ப்பீர்கள்.

4. பார்த்தன் - அருச்சுனன், தீர்த்தன் - தூய்மையானவன், கார் - கரிய, தடம் - அகன்ற, கண்ணி - கண்களையுடையவளாகிய. அருச்சுனனுடைய வில்லின் பெயர் காண்டீவம். பூதலம் - பூமி.

5. செந்நீர் - இரத்தம், ஆக்கை - உடம்பு, மேவி - சேர்த்து, குழல்- கூந்தல்.

## 4. ஆசிய சோதி

1. அவா - ஆசை, தனயன் - மகன். மதி முகம் - சந்திரன் போன்ற முகம்: உவமைத் தொகை. நள்ளிரவு - நடு இரவு, நலிவுற்று - துன்பமுற்று. வெளிறி - வெண்மை நிறம் அடைந்து, பசந்து.

3. அண்ணல் - பெருமை பொருந்தியவன்.

4. அலகு - அளவு.

5. இடர் - துன்பம்

6. உதிரம் - இரத்தம்

7. உவர்ப்பு - ஒருவகைச் சுவை - உப்பு

9. நன்மைக்கு எதிர்ச்சொல் தீமை.

11. ஆயர் சிறுவன் - இடைச்சிறுவன்.

## 5. மனோன்மணீயம்

சாற்றுமின் - சொல்லுங்கள், சேமம் - பாதுகாவல், திண்ணம் - நிச்சயம், புல்லியர் - அற்பர். விஜய இலக்குமி - வெற்றித் திருமகள். தமர் - சுற்றத்தவர், சேய் - குழந்தை, நந்தா - கெடாமல், நனி - மிகவும், நிந்தா நெறி - நிந்தித்தலாகிய வழி, தந்தாவளி - பல்வரிசை, சிந்தா விழ - கீழே விழும்படி, அடல் - வலிமை, வசை - பழி, பெயருமின் - புறப்படுங்கள், முகில் - மேகம், ஈர்த்து - இழுத்து, உரும் - இடி, ஆர்த்து - ஒலித்து.

## வினாக்கள்

1. நளனுக்கும் புட்கரனுக்கும் காட்டப்பட்டுள்ள உவமைகள் யாவை?
2. நளன் புட்கரனுக்கு நாடு கொடுத்துப்போன செய்திக்குக் காட்டப்பட்டுள்ள உவமையைப் பொருத்திக் காட்டுக.
3. நகர மக்கள் நளனிடம் கொண்ட அன்பு எவ்வாறு புலப்படுகின்றது?
4. நகர மக்களுக்கு நளன் கூறிய விடை யாது?
5. மக்கள் நளனிடம் கூறியது யாது?
6. மக்களின் கூற்றினைக் கேட்ட நளன், தமயந்தியிடம் கூறியவை யாவை?
7. மக்கட் செல்வத்தின் சிறப்பினை வரைக.
8. ஏதிலரைப்போல் தமயந்தி கூறியவை யாவை?
9. மக்கள் இருவரையும் அந்தணன் கொண்டு சென்ற காட்சியை ஆசிரியர் எவ்வாறு உவமித்துள்ளார்?
10. கண்ணனின் முன்பு துவாரபாலர் எவ்வாறு நின்றனர்?
11. துவார பாலர் எவ்வாறு கண்ணனைத் துதித்தனர்?
12. துவார பாலர் கண்ணனிடம் செய்த விண்ணப்பம் யாது?
13. துவார பாலர் உரைகேட்ட கண்ணனின் நிலையை வரைக.
14. "நன்னர் நெஞ்சுடைய நீரார் நட்பினில் சிறந்த துண்டோ": விளக்குக.
15. தாயது வருகை கேட்ட தனியிளங் குழவி போன்றவன் யாவன்? எப்பொழுது? விளக்குக.
16. "போயழைத்திடுமின்" என்று கண்ணன் மும்முறையே கூறினான்: ஏன்? விளக்குக.
17. கண்ணனைக் கண்ட குசேலரின் நிலையை ஆசிரியர் எவ்வாறு வர்ணிக்கிறார்?
18. மணக்கும் கண்ணனைத் துளவத் தாமக் கண்ணன்: பொருள் எழுதுக.
19. கண்ணனை ஆசிரியர் எவ்வாறு வர்ணித்துள்ளார்?
20. குசேலோபாக்கியானம்: சொற்களைப் பிரித்துக் காட்டி விளக்குக.
21. வீமன் எவ்வெக் கடவுள்களின் மீது ஆணையிட்டான்?

22. வீமன் செய்த சபதம் யாது?

23. "ஆண்மையிலாத் துரியோதனன்": துரியோதனனுக்கு "ஆண்மையிலா" என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது ஏன்?

24. அருச்சுனன் செய்த சபதம் யாது?

25. அருச்சுனன் எவற்றின் மீது ஆணையிட்டான்?

26. பாஞ்சாலி செய்த சபதத்தை விளக்கி வரைக.

27. புத்தர் பிரான் எல்லாவற்றையும் துறந்து ஏன் வெளியே சென்றார்?

28. புத்தர் பிரான் எவற்றைத் துறந்தார்?

29. புத்தர் மயங்கிக்கிடந்த நிலையை ஆசிரியர் எவ்வாறு வர்ணிக்கின்றார்?

30. இடைச்சிறுவன் தன் கலயத்தில் பாலைக் கறந்து கொடுக்க ஏன் மறுத்தான்?

31. இடைச்சிறுவனின் உரைகேட்ட புத்தர் கூறிய அமுத மொழிகள் யாவை?

32. மக்கள் உடன் பிறந்தவர் போல் எப்பொழுது உறவு கொள்வர்?

33. பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை என்பதை விளக்கப் புத்தர் காட்டிய உண்மைகள் யாவை?

34. மேற்குலத்தினரும் கீழ்க்குலத்தினரும் யாவர்?

35. "என் வார்த்தை யீதுண்மை:" சீவகனின் வார்த்தை யாது?

36. "இவர்க்கு அவர் துணையாம்:" யாருக்கு யார் துணையாவர்? விளக்குக.

37. "இந்நாடதனுள் இல்லையத்தகையர்:" எத்தகையர் நாட்டில் இல்லை?

38. "விஜய இலக்குமி காத்திருக்கிறாள்:" இடஞ்சுட்டி விளக்கம் தருக.

39. சீவகனின் வீரவுரையைச் சுருக்கி வரைக.

40. பிரித்துக் காட்டுக:— ஆருயிர், மெல்லிடை, சிரமிசை, கோதறு, பகுத்தறிந்து, இருந்தவத்தலைவன், பன்னரும், இளங்குழவி, கண்ணனைத்துளவம், தந்தாவளி.

41. புணர்த்திக் காட்டுக:— பசுமை + தளிர்; கடுமை + சுரம்; வழிந்து + ஓட; கழல் + கால்; தவம் + தலைவர்; மலம் +

குறும்பு ; கண் + அழல் ; நள் + இரவு ; நீண்ட + ஒண்ணு ; முரசு + அதிர.

42. திறம்பா : இஃது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், எவ்வாறு ?

43. தொடர் இலக்கணம் கூறுக :—ஆருயிர், பேரருள், தாமரைக்கை, செய்யவாய், கலங்காத உள்ளம், இந்துமுகம்.

44. "நன்னர் நெஞ்சுடைய நீரார் நட்பினிற் சிறந்த துண்டோ :" ஈண்டு அமைந்துள்ள அணியினைப் புலப்படுத்தி விளக்குக.

45. "விண்ணவர் முன் தாமம் **புனைவாளை**த்தான் :" ஈண்டு' "புனைவாள்" என்று எதிர் காலத்தில் கூறியது சரியா, எவ்விலக்கணம் பற்றி இது சரியாகும் ?

# IV. சிறு நூல்கள்

## 1. திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி

1. கூடு-உடம்பு, அவமே - வீணாக, பண்டை வினை-பழவினை ; பிறவியாகிய கடல் : உருவகம். புணை-தெப்பம், கருவை-கரிவலம் வந்த நல்லூர்.

2. இரவு பகல் ; இரவும் பகலும் : உம்மைத்தொகை, கன்னல்-கரும்பு, கோல் தேன்-கொம்புத்தேன், இல் : உவம உருபு, தொகுதி-கூட்டம்.

3. குரவன்-ஆசிரியன், அல்லது - துன்பம், தொழில் மூன்று : ஆக்கல், அளித்தல், அழித்தல். தொல்லோன்-பழமையானவன். களா : ஒருவகை மரம். ஆவான், அறுப்பான், தருவான், அளிப்பான், தொல்லோன் : இவை வினையாலணையும் பெயர்கள்.

4. விண்ட-பேசிய, பரவசம்-கடவுள் வசம், நறவம்-தேன். ஆனந்தம் தேனாக உருவகம் செய்யப்பட்டுள்ளது. உரவோன்-வலிமையை உடையவன்.

5. உரகம்-பாம்பு. கருவையில் கோயில் கொண்டருளிய அம்மையின் பெயர் ஒப்பனையம்மை. சிர மாலிகை-தலைமாலை. கறை-நஞ்சு தங்கிய கறை, மிடறு-கழுத்து, வரதாபயம்-வரதக்கை.

## 2. நால்வர் நான்மணி மாலை

1. பொய்கை - குளம். சம்பந்தர் பார்வதியம்மையினிடம் ஞானப்பால் உண்ட வரலாறு ஈண்டுக் குறிப்பிட்டபட்டுள்ளது. தண்டை; குழந்தைகளின் காலணி. வெறி - மணம், தண் - குளிர்ந்த கமலம் - தாமரை மலர் போன்ற திருவடி.
2. தொடை - பாடல், சொல் வேந்த - நாவுக்கரசரே, சூடர் நோய் - சூலை நோய். சிவபிரான் நாவுக்கரசருக்குச் சூலை நோய் கொடுத்து ஆட்கொண்ட வரலாறு ஈண்டுக் குறிப்பிடப்பட்டுள்ளது.
3. ஆரூர - சுந்தரரே, தொடி - வளை. சிவபிரான் சுந்தரரின் மனைவியாகிய பரவையாரின் கோபத்தைத் தணிப்பதற்காகத் தூது நடந்த வரலாறு ஈண்டுக் குறிப்பிடப்படுகின்றது. மிடி - வறுமை, உழன்றமையால் - வருந்தியதால்.
4. விளங்கிழை - ஒளிவீசும் அணியினை அணிந்த பார்வதியம்மை. ஈண்டு அன்மொழித் தொகை; ஆரணம் - வேதம்' வாதவூர் அண்ணல் - மாணிக்க வாசகர், வாசகத் தேன் - திருவாசகமாகிய தேன், நெக்கு - நெகிழ்ந்து, தொடு - தோண்டப் பெற்ற. கேணியில் நீர் ஊறுவது போல.

## 3. பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி

1. புலர்ந்தது - விடிந்தது, புன்மை - அற்பமான, கணம் - கூட்டம், இரவி -சூரியன் அறிவு சூரியனாக உருவகம் செய்யப்பட்டுள்ளது. துயில்கின்றனை - தூங்குகின்றாய்.
2. மதலையர் - குழந்தைகள், குதலை மொழி - குழந்தைகளின் திருந்தாத சொல், ஈன்றவளே - பெற்றவளே.

## 4. இளந்தமிழருக்கு

1. ஆற்றல் - வலிமை, துச்ச வாழ்வு - அற்ப வாழ்வு.
2. ஊனம் - இழிவு, சேவை - தொண்டு.
3. தரணி - பூமி, இணை - ஒப்பு, கமழ் - வீசுகின்ற.

## பாரசீகத் தனிப்பாடல்கள்

1. புயல் மேகம், புவனம் - பூமி, அனுதினமும் - நாள்தோறும். வயலைப் பயிர் செய்யாது பழ வைக்கோலைக் கிண்டினால் பயனில்லை. அதுபோலப் பழம் பெருமையைப் பேசுவதாற் பயனில்லை என்றவாறு.

2. ஆழி - கடல். தன்னலங் கருதாது, ஏழைகளின் நண்பனாக வாழ்ந்து தொண்டு செய்யவேண்டும் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

## வினாக்கள்

1. அந்தாதியின் இலக்கணத்தை வரைக.
2. பிறவிக்கடல் நீந்த அந்தாதியின் ஆசிரியர் பிடித்த தெப்பம் எது ?
3. ஈசன் ஆண்டு அருள் செய்ததற்குக் காரணங்களாக எவை இருக்கலாம் என்று அந்தாதி ஆசிரியர் கூறுகின்றார் ?
4. அந்தாதி ஆசிரியர், தம் பாடலின் சிறப்பை எவ்வாறு கூறுகின்றார் ?
5. களாவின் நிழற்கீழ்க் கண்ட ஈசனின் தன்மைகள் யாவை ?
6. ஈசனைக் கண்ட ஆசிரியரின் நிலையை விளக்குக.
7. கருவாபுரியான் வெளிப்படுத்திய காட்சியை ஆசிரியர் எவ்வாறு வர்ணிக்கிறார் ?
8. சம்பந்தருடைய வரலாற்றைப் பத்து வரிகளுக்குள் வரைக.
9. ஈசன் நாவுக்கரசரை எவ்வாறு ஆட்கொண்டார் ?
10. சுந்தரரின் பாட்டில் ஈசன் விருப்புடையவன் என்பதற்கு ஆசிரியர் காட்டிய எடுத்துக் காட்டுகள் யாவை ?
11. வேதத்தினும் திருவாசகம் சிறந்தது என்பதற்கு ஆசிரியர் கூறிய காரணத்தை வரைக.
12. மதலையர் எவ்வாறு பாரத மாதவைப் பள்ளியிலிருந்து எழுப்புகின்றனர் ? விளக்கி வரைக.
13. நாட்டிலும் வீட்டிலும் வேண்டப் படுபவை யாவை ?
14. மக்களுக்கு எத்தகைய எண்ணம் வருதல் வேண்டும் ?

15. இளந்தமிழருக்கு ஆசிரியர் கூறும் அறவுரைகளைத் தொகுத்தெழுதுக.

16. முன்னோரின் சிறப்புகளை மக்கள் எவ்வாறு போற்றுகின்றனர் என்று ஆசிரியர் கூறுகின்றார்?

17. "வயலைப் பயிர் செய்யாது பழ வைக்கோல் கிண்டிப் பயனெதுவோ": இவ்வடியினால் ஆசிரியர் விளக்கும் கருத்தினைப் புலப்படுத்துக.

18. உலகாளும் அரசனாக வேண்டுமெனில் செய்ய வேண்டுவன யாவை?

19. தொடர் இலக்கணம் கூறுக:—நன்னாள், இரவு பகல், கருவை ஆண்டான், விளங்கிழை பகிர்ந்த, மலர்வாய், மணற்கேணி.

20. கரிவவம் வந்த நல்லூர் என்னும் பெயர் கருவை என வந்துள்ளது: இஃது எவ்விலக்கணத்தின்பாற் படும்?

21. பிறவிக்கடல்: இஃது உருவகம்: எவ்வாறு? விளக்குக.

22. அறுப்பானை: இது வினையாலணையும் பெயர்: எவ்வாறு?

23. உரகாபரணம்: பிரித்துக் காட்டுக. இஃது என்ன சந்தி?

24. மொழியோ: ஈண்டு வினாப்பொருளைத் தந்த உறுப்பு எது?

# V. பல்சுவை

1. நித்திலம் - முத்து, அடு - சமைக்கின்ற, பொன் - இலக்குமியும் ஆம். நீர்மை - தன்மை, பொன் நீர்மையர் சித்திரப் பாவைக்கு ஊட்டும் எனப் பிரிக்க. சித்திரப் பாவைக்கு - வண்டலம் பாவைக்கு பாவலர், சித்திரப் பாவைக் கூட்டும் எனப்பிரிக்க. சித்திரப்பா - சித்திரகவி, அத்திரம் - அம்பு, சோர - நிறை அழிய, இலங்கையினன் - இராவணன், சோர - சோர்வ டையுமாறு. வென்றவாளி - வெற்றி கொண்ட திருமாலாகிய அம்பு, தொட்ட - தொடுத்த, பார வில் அம் கையினன் என்று பிரிக்க. பாரவில் - பருத்த மேரு மலையாகிய வில், பற்று - பற்றுமிடம். பற்றுமிடம் சிங்கையாகும் என முடிக்க. சிங்கை: விக்கிரம சிங்க புரம் என்பதன் மரூஉ.

2. நாவலர் தம் புத்திரர் காவியங்கள் ஆயும் கலைசை என்றும், பிரமரமும் காவிநண்ணும் அம் கள் ஆயும் கலைசை என்றும் கூட்டுக. ஆயும் - ஆராயும், கலைசை : தொண்டை நாட்டிலுள்ள திருப்பதிகளுள் ஒன்று. காவி - நீலமலர், (கா - சோலை, வி - மலர்) பிரமரம் - வண்டு, நண்ணும் - தங்கியுள்ள, அம்-அழகிய, கள் - தேன், கோடு + குழையார் = கோட்டுக்குழையார்- வெள் ளிய சங்குக் குண்டலத்தை உடையவர், கொழும் - வளமுள்ள மெல்லியலாம் - மெல்லிய தன்மையை உடையவளாகிய, கோட் டுக்கு - பூங்கொம்பு போன்ற பார்வதிக்கு, உழையார் - பக்கத் தில் இருப்பவர், குடி - குடியிருக்கும் இடம், குடியிருக்கும் இடம் கலைசை என முடிக்க.

3. கவிஞர் பிறவிக்குருடர் ஆதலால் எல்லாவற்றையும் தமது மனத் திலேயே எழுதிப் படித்தார் என்று கூறப்பட்டுள்ளது. சேது - இராமேசுவரம். சேடாதிபன் - பாம்புகளுக்கரசனாகிய ஆதிசே டன், செழியன் - பாண்டியன். கந்தருவம், கந்துகம், கோணம், கொக்கு, கோடை, குந்தம், பாடலம், மா, சடிலம், கிள்ளை என்பன குதிரையைக் குறிக்கும் வேறு சொற்கள் ஆகும். கந்தருவம் - இசை, கந்துகம் - பந்து, கோணம் - கூன்வாள், கொக்கு: ஒரு பறவை, குந்தம் - எறிகோல், பாடலம்-பாதிரிப்பூ, மா - மாமரம், சடிலம் - சடை, கிள்ளை - கிளி.

4. ஈசன் - சிவபிரான், எமன் - இமயன். சிவபிரான் பசுவாகவும், இயமன் கன்றாகவும் மனுச் சோழனின் செங்கோலைச் சோதிக்கத் திருவாரூரின் வீதியில் வந்தனர் என்பது வரலாறு. சிவபிரான் மார்க்கண்டனுக்காக இயமனைக் காலால் உதைத்த வரலாறு இறுதியடியிற் குறிக்கப்பட்டுள்ளது. காலி - பசு.

## வினாக்கள்

1. சிங்கையின் சிறப்பினை வரைக.
2. சித்திரப்பாவைக்கூட்டும் சிங்கை : இரண்டு விதமாகப் பிரித்துப் பொருள் எழுதுக.
3. வென்ற வாளி : இச்சொற்றொடர் யாரைக் குறிக்கும்? ஈண்டுள்ள வரலாறு யாது?
4. காவியங்கள் ஆயும் : இத்தொடரை மூன்று வகையாகப் பிரித்துப் பொருள் எழுதுக.
5. மெல்லியலாங் கோட்டுக்குழையார் : பிரித்துப் பொருள் எழுதுக.
6. சீட்டுக் கவியின் இலக்கணம் யாது?
7. அந்தகக்கவி வீரராகவ முதலியார் செழியனிடம் கேட்டது யாது?
8. அம்மானையின் இலக்கண்ம் யாது?
9. ஆரூரின் வீதியில் வந்தார் யாவர்? எந்த எந்த உருவுடன்?
10. கன்றை உதை காலி கறக்குமோ : ஈண்டுள்ள கதைக் குறிப்பையும், நயத்தையும் புலப்படுத்துக.
11. புணர்த்திக் காட்டுக:—பாவைக்கு + ஊட்டும்; கயல் + கண்; கோடு + குழையார்; புகழ் + ஆரூர்; காசு அளவு.
12. பிரித்துக் காட்டுக:—பொன்னீர்மையர், பாவலர், பார விலங்கையினன், காவியங்கள், சேடாதிபன்.

# IV. வருணனை

1. காமர் - அழகிய, கயல் - மீன், காவி - நீல மலர், முகை - மொட்டு, நெகிழ - விரிய, தளை - கட்டு, பூமடந்தை - பூமி தேவி, நாட்டம் - கண், சாகரம் - கடல்.

2. திரை - அலை, புனல் - தண்ணீர், கழங்கு - கழற்சிக்காய், சிற்றில் - சிறுவீடு, கிம்புரியின் - பூண்களையுடைய, கொம்பு - யானைத் தந்தம், வடிக்கும் - நெடுந்தூரம் சென்று மணக்கும், வழங்கு - கொடுக்கின்ற. குறும்பலவின் அடியில் ஈசர் குற்றாலத்தின் கண் அமர்ந்துள்ளார்.

3. பொங்கர் - சோலை, வாவி - குளம், பங்கயம் - தாமரை, கடி - மணம், கொங்கு - தேன், தேரும் - ஆராய்கின்ற.

4. தாது - மகரந்தப் பொடி, உகு - சொரிகின்ற, போது, மலரும் பருவத்தில் உள்ள மொட்டு. பொய்கை - நீர் நிலை, பூகம் - பாக்கு.

5. காவி - நீலமலர், கவர் - இரண்டுபட்ட, கமலம் - தாமரை, வதனம் - முகம், நுதல் - நெற்றி, தூவி - மயிலிறகின் அடிப் பகுதி, தோகை - மயில். நல்லார் - பெண்கள், ஓவியம் - சித் திரம்.

## வினாக்கள்

1. நிடத நாட்டின் வளப்பத்தினை வரைக.
2. நிடத நாடு பூமி தேவியின் கண்போல் இருந்தது: உவமையை விளக்கிக் காட்டுக.
3. குற்றால மலையின் சிறப்பினைத் தொகுத்து வரைக.
4. தென்றல் எவ்வெவ்விடங்களில் பரவி வந்தது?
5. அங்கங்கே கலைகள் தேரும் அறிவன் போல் இயங்கும்: எது? உவமையை விளக்குக.
6. ஆறு எவ்வெவ்விடங்களில் உலவியது?
7. ஆற்றுக்கும் உயிருக்கும் உள்ள உவமைப் பொருத்தத்தினை வரைக.
8. மகளிர் எவ்வாறு பாடினர்?
9. தொடரிலக்கணம் கூறுக:—செந்தேன், பூமடந்தை, நன்னாடு, தோகை நல்லார், சண்பகக் காடு.
10. பிரித்துக் காட்டுக:—தன்னாட்டம், நன்னாடு, முன்னாட்டும், தூவியந் தோகை.

# உரை நடை

## பொதுப் பிரிவு

---

## 1. என் சரித்திரம்

(மகா மகோபாத்தியாய தாட்சிணாத்திய கலாநிதி டாக்டர் உ, வே. சாமிநாதய்யரவர்கள்)

### மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் முன் முதல் நாள்

அக்காலத்தில் பிள்ளையவர்கள் மாயூரத்தில் திருவாவடு துறை ஆதீனத்துக்குரிய கட்டளை மடத்தை அடுத்து மேல் பாலுள்ள வீட்டில் இருந்து வந்தனர். நாங்கள் அவ்வீட்டிற் குச் சென்றோம்.

அப்போது அங்கே பிள்ளையவர்களுடைய தவசிப் பிள்ளை ஒருவர் வந்தார். அவரிடம் என் தகப்பனார் பிள்ளையவர்களை நாங்கள் பார்க்க வந்திருக்கும் செய்தியைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டனர். அவர் அங்ஙனமே போய்ச் சொல்லப் பிள்ளையவர்கள் நாங்கள் இருந்த இடத்திற்கு வந்தனர்.

### முதற் காட்சி

அப்புலவர் பெருமான் வரும்போதே அவருடைய தோற் றம் என் கண்ணைக் கவர்ந்தது. ஒரு யானை மெல்ல அசைந்து நடந்து வருவதைப்போல் அவர் வந்தார். நல்ல வளர்ச்சி யடைந்த தோற்றமும், இளந் தொந்தியும், முழங்கால் வரை யில் நீண்ட கைகளும், பரந்த நெற்றியும், பின்புறத்துள்ள சிறிய குடுமியும், இடையில் உடுத்தியிருந்த தூய வெள்ளை ஆடையும் அவரை ஒரு பரம்பரைச் செல்வரென்று தோற்றச் செய்தன. ஆயினும் அவர் முகத்திலே செல்வர்களுக்குள்ள பூரிப்பு இல்லை; ஆழ்ந்து பரந்த சமுத்திரம் அலையடங்கி நிற்பது போன்ற அமைதியே தோற்றியது. கண்களில் எதை யும் ஊடுருவிப் பார்க்கும் பார்வை இல்லை; அலட்சியமான பார்வையும் இல்லை; தம் முன்னே உள்ள பொருள்களில் மெல்ல மெல்லக் குளிர்ச்சியோடு செல்லும் பார்வைதான் இருந்தது.

அவருடைய நடையில் ஓர் அமைதியும், வாழ்க்கையில் புண்பட்டுப் பண்பட்ட தளர்ச்சியும் இருந்தன. அவருடைய தோற்றத்தில் உத்ஸாகம் இல்லை; சோம்பலும் இல்லை; படபடப்பில்லை ;சோர்வும் இல்லை. அவர் மார்பிலே ருத்திராட்சக் கண்டி விளங்கியது.

பல காலமாகத் தவம்புரிந்து ஒரு தெய்வ தரிசனத்திற்குக் காத்திருக்கும் உபாஸகனைப்போல் நான் இருந்தேன். அவனுக்குக் காட்சியளிக்கும் அத்தெய்வம்போல அவர் வந்தார். என் கண்கள் அவரிடத்தே சென்றன. என் மனத்தில் உத்ஸாகம் பொங்கி அலை எறிந்தது. அதன் விளைவாக ஆனந்தக் கண்ணீர் துளித்தது. அத்துளி இடையிடையே அப்புலவர் பிரானுடைய தோற்றத்தை மறைத்தது. சுற்றிலுமுள்ள எல்லாவற்றையும் விலக்கிவிட்டு அவரது திருமேனியில் உலவிய என் கண்கள் அவர் முகத்திலே பதிந்து விட்டன.

**'வந்த காரியம் என்ன?'**

அவர் வந்தவுடன் நின்றுகொண்டிருந்த எங்களை உட்காரும்படி சொன்னார். அந்தத் தொனியிலும் அமைதியைத்தான் நான் உணர்ந்தேன். எல்லாம் சாந்த மயமாக இருந்தன. அவரும் அமர்ந்தார்; என் தகப்பனாரைப் பார்த்து, "நீங்கள் யார்? வந்த காரியம் என்ன?" என்று விசாரித்தனர்; அவ் வார்த்தைகள் அன்புடன் கலந்து வெளிவந்தன.

"நாங்கள் பாபநாசத்திற்குப் பக்கத்திலுள்ள உத்தமதானபுரத்திலிருந்து வருகிறோம். தங்களைப் பார்க்கத்தான் வந்தோம். இவன் என் குமாரன். தமிழ் படித்து வருகிறான். சில பேரிடம் பாடம் கேட்டிருக்கிறான். சங்கீதமும் அப்பியாசம் செய்திருக்கிறான். தமிழைத் தவிர வேறு ஒன்றிலும் இவன் புத்தி செல்லவில்லை. எப்போதும் தங்கள் ஸ்மரணையாகவே இருக்கிறான். ஆகையால் தங்களிடம் இவனை அடைக்கலமாக ஒப்பித்துவிட்டுப் போக வந்தேன்."

"உங்கள் பெயரென்ன?"

"என் பெயர் வேங்கடசுப்பன் என்பர். இவன் பெயர் வேங்கடராமன்" என்றார் என் தந்தையார்.



மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்

"வேங்கட சுப்பனென்பது நல்ல பெயர். வேங்கட சுப்ரமணியன் என்பதன் மரூஉ அது. திருவேங்கட மலையில் முருகக் கடவுள் கோயில்கொண்டிருக்கிறார் என்பதற்கு இந்த வழக்கு ஓர் ஆதாரம்."

அவர் பேச்சில் ஒரு தனி இனிமையை நான் உணர்ந்தேன். "சாதாரணமாகப் பேசும்போதே அருமையான விஷயம் வெளி வருகின்றதே!" என்று நான் ஆச்சரியம் அடைந்தேன்.

பிறகு பிள்ளையவர்கள் என்னைப் பார்த்து, 'நீர் யார் யாரிடம் என்ன என்ன நூல்களைப் பாடம் கேட்டிருக்கிறீர்?" என்று வினவினர். நான் மெல்ல என் வரலாற்றைச் சொன்னேன். சடகோபையங்காரிடம் படித்தது முதல் செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் காரிகைப் பாடம் கேட்டது வரையில் விரிவாக எடுத்துரைத்தேன்.

"இவருக்கு இசையில் எந்த மட்டும் பயிற்சி உண்டு?" என்று என் தந்தையாரை நோக்கி அவர் கேட்டார். சங்கீதத்தை இசையென்று அவர் சொல்லியதை நான் கவனித்தேன்.

தாம் எனக்குச் சங்கீதத்தை முறையாகக் கற்பித்து வந்ததை என் தந்தையார் தெரிவித்தார். அப்பால் தாம் கனம் கிருஷ்ணையரிடம் குருகுல வாசம் செய்து சங்கீதம் கற்றதையும் சொன்னார்.

"இந்த ஊரிலுள்ள கோபால கிருஷ்ண பாரதியாரைத் தெரியுமா?" என்று பிள்ளையவர்கள் கேட்டனர்.

"நன்றாகத் தெரியும். அவரும் கனம் கிருஷ்ணையரிடம் சிலகாலம் அப்பியாசம் செய்ததுண்டு."

### பரீட்சை

இவ்வாறு எங்கள் வரலாற்றை அறிந்துகொண்ட பின்பு அக்கவிஞர் பெருமான் என்னைப் பார்த்து, "நைடதத்தில், ஏதாவது ஒரு பாடலைச் சொல்லும்" என்றார். அந்த மகா வித்துவானுக்கு முன், காட்டுப் பிராந்தியங்களிலே தமிழறிவைச் சேகரித்துக்கொண்ட நான் எவ்வளவு சிறியவன்! எனக்குப் பாடல் சொல்லத் தைரியம் உண்டாகவில்லை. மனம் நடுங்கியது; உடல் பதறியது; வேர்வை உண்டாயிற்று; நாக்கு உள்ளே இழுத்தது. இரண்டு மூன்று நிமிஷங்கள்

இவ்வாறு நான் தடுமாறினேன். அப்பால் ஒருவாறு நைடதத்திலுள்ள "தழைவிரி கடுக்கை மாலை" என்னும் காப்புச் செய்யுளைக் கல்யாணி ராகத்தில் மெல்லச் சொன்னேன்; முதலடியை,

"தழைவிரி கடுக்கை மாலைத் **தனிமுதற் சடையிற்** சூடும்" என்று நான் சொன்னேன். பிள்ளையவர்கள் இடைமறித்து, "**தனிமுதல்** சடையிற் சூடும்" என்று சொல்லித் திருத்தினர். பலகாலமாகப் பிழைபட்ட பாடத்தை உருவேற்றி இருந்த எனக்கு அந்தப் பாடமே முன்வந்தது. என் நடுக்கம் அதிகமாயிற்று. ஆனாலும் பாடல் முழுவதையும் சொல்லி முடித்தேன். நான் அதைச் சொல்லும்போதே அவர் முகத்தையும் கவனித்தேன். "நான் சொல்வதில் அவருக்கு வெறுப்பு உண்டாகுமோ?" என்று பயந்தேன். நல்ல வேளையாக அவர் முகத்தில் அத்தகைய குறிப்பு ஒன்றும் தோற்றவில்லை. எனக்கும் சிறிது ஊக்கம் உண்டாயிற்று.

"இன்னும் ஒரு பாடல் சொல்லும்" என்றார் அவர். நான் நைடதத்தின் சிறப்புப் பாயிரமாகிய, "நிலவுபொழி தனிக் கவிகை" என்னும் பாடலைச் சாவேரி ராகத்தில் சொன்னேன். அந்த இரண்டு செய்யுட்களையும் மீண்டும் சொல்லிப் பொருள் கூறும்படி கூறினர். நான் பாடல்களைச் சொல்லிப் பொருள் கூறத் தொடங்குகையில் நாக்குத் தழுதழுத்தது.

"தைரியமாகச் சொல்லும்" என்று அக்கவிஞர்பிரான் கூறினர். நான் இரண்டு செய்யுட்களுக்கும் பொருள்கூறி முடித்தேன்.

"நிகண்டு பாடம் உண்டோ?" என்று அவர் கேட்டார். நான் "பன்னிரண்டு தொகுதியும் பாடம் உண்டு" என்று கூறவே சில சில பாடங்களைச் சொல்லச் சொல்லிக் கேட்டு விட்டு, "நிகண்டை மனனம் செய்வது நல்லதே. இக்காலத்தில் அதை நெட்டுருப்பண்ணும் வழக்கமே போய்விட்டது. சொன்னால் யாரும் கேட்பதில்லை" என்றார்.

### சந்தேகப் பேச்சு

அப்போது என் தந்தையார், "இவனைத் தங்களிடம் ஒப்பித்துவிட்டேன். எப்போது இவன் பாடம் கேட்க வரலாம்?" என்று கேட்டார்.

அப்புலவர் பெருமான் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். அவர் எதையோ யோசிக்கிறார் என்று எண்ணினேன்; "ஒரு கால் நம்மை ஏற்றுக் கொள்ள மாட்டாரோ?" என்று அஞ்சினேன். அவர் மெல்லப் பேசத் தொடங்கினார்:

"இங்கே படிப்பதற்கு அடிக்கடி யாரேனும் வந்தவண்ணமாகவே இருக்கிறார்கள். வரும்போது பணிவாக நடந்து கொள்ளுகிறார்கள். சில காலம் படித்தும் வருகிறார்கள். படித்துத் தமிழில் நல்ல உணர்ச்சி உண்டாகும் சமயத்திலே போய் விடுகிறார்கள். சிலர் 'ஊர் போய்ச் சில தினங்களில் வருகிறோம்' என்று சொல்லிப் போய்த் திரும்புவதே இல்லை. சில காலம் இருந்து படிப்பதாகப் பாவனை செய்து விட்டுப் பிரிந்து சென்று என்னிடம் படித்ததாகச் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். இப்படி அரைகுறையாகப் படிப்பதால் அவர்களுக்கு ஒரு பயனும் உண்டாவதில்லை; நமக்கும் திருப்தி ஏற்படுவதில்லை. இத்தகையவர்கள் இயல்பைக் கண்டு கண்டு மனம் சலித்து விட்டது. யாராவது பாடம் கேட்பதாக வந்தால் யோசனை செய்துதான் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது."

அவர் பேச்சிலே அன்பும் மேன்மையும் இருந்தன. ஆனால் அவர் கருத்து இன்னதென்று தெளிவாக விளங்கவில்லை. என் உள்ளத்திலே அப்பேச்சு மிகுந்த சந்தேகத்தை உண்டாக்கி விட்டது. அவர் தம்மிடம் வந்து சிலகாலம் இருந்து பிரிந்து போன மாணாக்கர் சிலர் வரலாற்றையும் சொன்னார். "இந்த விஷயங்களையெல்லாம் சொல்வதன் கருத்து என்ன? நம்மை ஏற்றுக் கொள்ள விருப்பம் இல்லை என்பதைக் குறிப்பாகத் தெரிவிக்கிறார்களோ? அப்படியிருந்தால் இவ்வளவு பிரியமாகப் பேசிக் கொண்டிருக்க மாட்டார்களே?" என்று நான் மயங்கினேன்.

## தவம் பலித்தது

என் தந்தையார் தைரியத்தை இழவாமல், "இவன் அவ்வாறெல்லாம் இருக்கமாட்டான். இவனுக்குப் படிப்பதைத் தவிர வேறு வேலை இல்லை. தங்களிடம் எவ்வளவு காலம் இருக்க வேண்டுமானாலும் இருப்பான். தங்களுடைய உத்தரவு இல்லாமல் இவன் எங்கும் செல்லமாட்டான். இதை நான் உறுதியாகச் சொல்லுகிறேன். இதற்கு முன் இவனுக்குட்

பாடம் சொன்னவர்களெல்லாம் இவனைத் தங்களிடமே கொண்டு வந்து சேர்க்கும்படிவற்புறுத்தினார்கள். பலகாலமாக யோசித்து அதிக ஆவலுடன் தங்களிடம் அடைக்கலம் புக இவன் வந்திருக்கிறான். இவனுடைய ஏக்கத்தைக் கண்டு நான் தாமதம் செய்யாமல் இங்கே அழைத்து வந்தேன். தங்களிடம் ஒப்புவித்து விட்டேன். இனிமேல் இவன் விஷயத்தில் எனக்கு யாதோர் உரிமையும் இல்லை" என்று கூறினார். அப்படிக் கூறும்போது அவர் உணர்ச்சி மேலே பேச ஒட்டாமல் தொண்டையை அடைத்தது. நானும் ஏதேதோ சொன்னேன்; வேண்டிக் கொண்டேன். என் வாய் குழறியது; கண் கலங்கியது; முகம் ஒளியிழந்தது.

அங்கிருந்தவர்கள் என் தந்தையார் வேண்டுகோளையும் எனது பரிவையும் உணர்ந்து இரங்கி, 'இந்தப் பிள்ளை இருந்து நன்றாகப் படிப்பாரென்றே தெரிகிறது. தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்," என்று கூறினார்கள்.

அக்கவிஞர்பிரானது முகம் மலர்ந்தது. ஒரு விதமான உறுதிக்கு அவர் வந்துவிட்டாரென்பதையும் அத்தீர்மானம் எனக்கு அநுகூலமாகத்தான் இருக்குமென்பதையும் அந்த முக மலர்ச்சி விளக்கியது.

"இவ்வூரில் பந்துக்கள் யாரேனும் இருக்கிறார்களோ? இவருடைய ஆகாரத்துக்காக ஏற்பாடு ஏதேனும் செய்திருக்கிறீர்களா?" என்று பிள்ளையவர்கள் கேட்டனர்.

இவ்வூரில் நண்பர்களும் பந்துக்களும் இருந்தாலும் அவர்கள் செல்வமுள்ளவர்களல்ல. அவர்களுக்குச் சிரமம் கொடுப்பது உசிதமாக இராது. தாங்களே ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றார் என் தந்தையார். பிள்ளையவர்கள் பல மாணாக்கர்களை வைத்துப் போஷித்துப் பாடம் சொல்லி வருகிறார் என்ற செய்தியைப் பலர் கூறக் கேட்டிருந்தமையின் இவ்வாறு எந்தையார் சொன்னார்.

பிள்ளையவர்கள் : "திருவாடுதுறையிலும் பட்டீச்சுரத்திலும் நான் தங்கும் காலங்களில் இவருடைய ஆகார விஷயத்தில் ஒரு குறையும் நேராமல் பார்த்துக் கொள்ளலாம். சைவராக இருந்தால் ஒரு கவலையும் இராது; என் வீட்டிலே சாப்பிடலாம். இந்த ஊரில் ஆகார விஷயத்தில் ஒன்றும்

செய்ய இயலாத நிலையில் இருக்கிறேன். அது பற்றி வருந்து கிறேன்.''

எந்தையார் : "அப்படியானால் இவ்வூரில் இருக்கும்வரை யில் இவன் ஆகாரச் செலவிற்கு வேண்டிய பணத்தை எப்படி யாவது முயன்று அனுப்பிவிடுகிறேன். இவனைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

பிள்ளையவர்கள்: "சரி, ஒரு நல்ல தினம் பார்த்துப் பாடம் கேட்க ஆரம்பிக்கலாம்.''

என் தவம் பலித்ததென்று நான் குதூகலித்தேன். அஸ்த மன சமயமாகி விட்டமையால் நாங்கள் மறுநாட் காலையில் வரு வதாக விடைபெற்றுக்கொண்டு எங்கள் விடுதிக்கு மீண்டோம்.

நாங்கள் போகும்போது எங்கள் மனத்தை அமிழ்த்திக் கொண்டிருந்த ஒரு பெரிய பாரம் நீங்கியது போல இருந்தது. என் தந்தையார் அடிக்கடி, "ஜாக்கிரதையாக இருப்பாயா? தேக சௌகக்கியத்தைக் கவனித்துக் கொள்வாயா? கடிதம் எழுதுவாயா? வருத்தப்படாமல் இருக்கிறாயா?'' என்று பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே வந்தார். என்னைத் தனியே விட்டுச் செல்வதற்கு அவர் உள்ளம் எவ்வளவு தத்தளித்த தென்பதை அவை விளக்கின.

# 2. தமிழன் கண்ட மலேயா

(வித்துவான் அ. மு. பரமசிவானந்தம். B. O. L. M. Litt.,
தமிழ்த்துணைப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.)

கடல் மேல் கலத்தகம்.
*21—5—48*

**கடிதம் !**

**அன்பின் செல்வி மங்கையர்க்கரசிக்கு,**

நலன் விழைவு. புதன்கிழமை அம்மாவும், தம்பியும், மாமாவும், தாத்தாவும், மற்றுமுள்ள நண்பர்கள் பலரும் என்னை வாழ்த்திக் கப்பலேற்றி அனுப்பினுர்கள். கலம் ஏறி வெளியூர் செல்வது நமக்குப் புதியதாகையால் அம்மா சற்று வருத்தமுற்ருர்கள் என்பதை முகக் குறிப்பால் அறிந்தேன். அனைவரும் கப்பலுள் வந்து சிறிது நேரம் தங்கிப் பிறகு தரைக்கு இறங்கிச் சென்ருர்கள். பல நண்பர்கள் வந்து வந்து கண்டு சென்ருர்கள். மாலை நான்கு மணிக்குக் கப்பல் புறப் பட்டது. கண்ணுக்குத் தெரியும் வரை அனைவரும் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தேன். பிறகு கடல் நடுவில் கலம் சென்றது. என் அறைக்குள் நான் சென்றேன். தனிமையை என்மனம் அப்போதுதான் உணரத் தொடங்கியது.

குழந்தாய்,

எனது அறையில் மற்ருெருவரும் உடன் இருந்தார். அவர் மலேயாவில் அரசாங்க மருத்துவராக இருக்கின்ருர் என அறிந்தேன். அவர் மிக நல்லவராக இருந்தார். அவருடன் நன்கு பழகினேன். மாலை இருட்டும் வரையில் நான் என் அறையிலிருந்தபடியே சென்னைக் கடற்கரையை அரிய தமிழ கத்தின் எல்லையை-உயரிய கோபுரங்களைக் கண்ணுற்றுக் கொண்டே சென்றேன். இருட்டவும், கரை மறையவும் சரி யாக இருந்தது. பிறகு உணவு கொண்டு படுத்துக் கொண் டோம். நல்ல உறக்கம் என்னை அணைத்துக்கொண்டது.

**கடற்காட்சியும் கடற்பிணியும்:**

மறுநாள் (20-5-48) காலை எழுந்து நாற்புறமும் நோக்கி னேன். பார்க்குமிடம் எங்கும் பரந்த கடல். எப்பக்கத்தும் கருங்கடல் காட்சி அளித்தது. எழுந்து என் காலைக் கடன்களை யெல்லாம் முடித்துக் கொண்டேன். அங்கங்கே வேண்டிய

வசதிகளைச் செய்ய பல அலுவலாளர்கள் இருந்தார்கள். தூய வெந்நீரில் மூழ்கினேன். வெந்நீர் எனக்குப் பழக்கமில்லை என்பது உனக்குத் தெரியும். என்றாலும் அந்தக் கடல் நிலை என்னை வெந்நீரை வேண்டுமாறு தூண்டிற்று. பிறகு பூரி கிழங்கு பலகாரம் கொண்டு வந்தார்கள். அதற்குள் கடற்பிணி என்னைப் பற்றிக் கொண்டது. சிறிது உட்கொண்டேன். உடனே அனைத்தையும் வாயிலெடுத்தேன். மயக்கமாகிப் படுத்துக் கொண்டேன். பிறகு பத்து மணிக்குக் கொஞ்சம் கஞ்சி உண்டேன். அன்று முழுவதும் மயக்கமாகவே இருந்தது. மாலை மறுபடியும் உப்புமா அருந்த வற்புறுத்தினார்கள். பயன் மறுமுறை வாயிலெடுத்ததுதான். இரவும் ஒன்றும் உட்கொள்ளாது அப்படியே படுக்கையில் புரண்டேன். என்னை மறந்து தூங்கினேன். இப்படி ஒரு நாள் கழிந்தது.

இன்று (21-5-48) சற்றுத் தெளிவடைத்தேன். காலைக் கடன்களைக் முடித்துக் கொண்டேன். சற்று உலாவினேன். காலையில் எலுமிச்சஞ்சாறு அருந்தினேன். இன்று என்னை 'வாந்தி' மயக்கம்' ஒன்றும் பற்றவில்லை. எனினும், என் அறையிலிருந்த மருத்துவர் ஒரே மயக்கமாக வாயிலெடுத்துக் கொண்டிருந்தார். என் பக்கத்து அறையில் ஒரு மணமான புதுக் குடும்பம் தங்கியிருந்தது. அந்த அம்மையார் கடற்பிணியால் பெரிதும் வருத்தமுற்றார்கள். அவர் சற்று என்னைப் போலத் தெளிவடைந்தவராய் எங்கள் அறைக்கு அடிக்கடி வந்து போனார். எங்களது அறைக்கு மூன்றாவது அறையில், ஓர் இளம் பெண் தனியாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். மலேயாவில் வாழும் தன் கணவரிடம் அவர் சென்று கொண்டிருந்தார். அவரைக் கடற்பிணி நலிவுறுத்தவில்லை.

**கடலின் தொன்மையும் வளமும்:**

சற்றுத் தெளிவடைந்தமையால் கப்பல் மேல் தளத்தில் ஏறி நாற்புறமும் நோக்கினேன். எங்கும் கருங்கடல் என்று எண்ணும்போது உள்ளத்துக்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகிறது தெரியுமா? இன்று நாம் வாழ்கின்ற மண்ணும் காண்கின்ற மலையும் எத்தனை கோடி ஆண்டுகள் இந்தக் கடலுள் மூழ்கிக் கிடந்தன! 'கல்தோன்றி மண் தோன்றாக்'கால முதற் கொண்டு—அதற்கு முன் கொண்டு இந்தக்கடல் இதே மாதிரி

அலைகளை வீசிக்கொண்டு, ஓய்வு ஒழிவு என்பதில்லாமல் இருக்கின்றதே. குழந்தாய்! இந்த உலகத்தில் முதலில் கடல்தான் உண்டாயிற்று. பிறகு பல கோடி ஆண்டுகள் கழித்துத்தான் நாம் வாழும் நிலம் உண்டாயிற்று. நம் நாட்டு வட எல்லையாகிய இமயம் கடலுக்குள் இருந்த காலம் ஒன்று உண்டு. ஆனால் அதை எண்ணும்போது மற்றொன்றும் என் உள்ளத்தே தோன்றி வருத்துகின்றது.

இமயம் கடலுள் இருந்த காலத்தே தெற்கே நமிழ் நாடு எவ்வளவு விரிந்து இருந்தது தெரியுமா? இதோ நான் செல்லுகின்ற கடலெல்லாம் நிலமாய் இருந்ததே. இன்றைய குமரி முனைக்குத் தெற்கே நாற்பத்தொன்பது தமிழ் நாடுகள் இருந்தனவே. மேற்கே மடகாஸ்கர் தொடங்கி, கிழக்கே நான் போகும் மலேயாவும் தாண்டி ஆஸ்திரேலியா வரையில் தமிழ் நாடு இருந்ததே. இதோ கலம் செல்லும் இந்த இடத்தில் எத்தனை தமிழர் வாழ்ந்தார்களோ! அந்த அரும் பெரு நாட்டைக் கடல் கொண்டதைக் குறித்து எண்ணுங்கால் உளம் நைகின்றது. செய்வது என்? இயற்கை விளையாட்டு அது! கடலுக்கும் தமிழ் மீது காதல் உண்டு போலும்!

**மக்கள் தோற்றம்:**

கடிதம் எழுதிக்கொண்டே கடலை எட்டிப் பார்த்தேன். பெரிய மீன் ஒன்று துள்ளிக் குதித்தது. மனிதனுக்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உண்டான உயிரினம் அல்லவா மீன்! மண்ணுக்கு முன் கடல் தோன்றிற்றல்லவா? அப்போது முதன் முதலாக கடற்பாசியைப் போன்ற குறையுள்ள உயிரினம் உலவி, பிறகு முழு உயிருள்ளதாக மீன்தான் தோன்றிற்று. எனவே, முதல் உயிரினமாகிய மீன் இனம் என் கண்ணுக்குப்பெருவிருந்தாயிற்று. மீன்பல வகைகளில் பெருகிற்று. மீனிலே இருந்து பலப்பல உயிரினம் தோன்றின. ஏன் இன்றைய மனிதன்கூட மீனிலிருந்து தோன்றினவன் தான் எனப் பல அறிஞர்கள் முடிவு கட்டியுள்ளார்கள். மனிதன் குரங்கிலிருந்து தோன்றினன் என்றால் உனக்குப் புரியும். ஆனல், குரங்கு எங்கிருந்து தோன்றிற்று? H. G. **வெல்ஸ்** போன்ற பேரறிஞர்கள் ஆய்வுக் கண்கொண்டு கண்டிருக்கிறார்கள். அனைத்துயிர்களுக்கும் முதலிடம் மீனும் கடற்பாசி

போன்ற முதல் உயிரினமும் என்பது அவர்கள் முடிவு. அவற்றின் தோற்றத்திலிருந்தே இன்றைக்கு நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் மனிதர் தோன்றி இருக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். இவற்றை யெல்லாம் ஆராய்வது உனக்கு விருப்பமாகவும் வேடிக்கையாகவும் இல்லையா? நீ இன்னும் அறிவு நிரம்பப் பெற்ற பிறகு அவை பற்றி எழுதிய நூல்களோடு பேசுவாய். அவை பலவற்றைஉனக்கு விளக்கும்.

**கப்பல் 'வாசனு':**

நாங்கள் செல்லுகின்ற கப்பல் தனிப்பட்டது. இத்துணைப் பெரிய கப்பலில் நாங்கள் பன்னிரண்டு பேர்தாம் செல்கின்றோம். கப்பற்பொறி ஏதோ பழுதுற்றதென்றும், ஆகவே, அதிகச் சுமை கூடாதென்றும், முதல் வகுப்புக்கென்று பன்னிருவரை ஏற்றிக் கொண்டாள் **'வாசனு'** கப்பலைப் பெண் பால் இனத்தில் சேர்த்துள்ளார்கள் என்பதை நீ அறிவாயா? தன்னைச் சார்ந்த மக்களைத் தாயெனப் பரிந்துகாத்து, விரும்பிய கரைக்குப் பாதுகாவலாகக் கொண்டு செல்லும் அவளைத் தாய் எனல் பொருந்தும். அவள் நடை மிக மென்மையாக அசைவாக—பெண் நடையாகத்தான் அமைகிறது. அவள் மிக மெதுவாகத்தான் செல்லுகிறாள். பொறுமைக்கு எல்லை காண வேண்டில் இவள் மடியில் அமர்ந்து செல்ல வேண்டும். கப்பலோட்டிகள் பொறிக் கேட்டால் மெள்ளச் செல்வதாகச் சொன்னார்கள். நான் அவள் பெண்மைத் தன்மையால் ஒல்கி ஒசிந்து மெல்லச் செல்கிறாள், என எண்ணுகிறேன். அந்த மென்மையில் தமிழ் மக்கள் வீரமும் காண்கின்றது. திரண்டு வரும் அலைகடலைச் செல்க என்று தள்ளித், தன் மடியிடைத் துயிலும் மக்களை ஏந்தி, அஞ்சா ஆண்மையோடு அலைகடலைத் தாண்டுவதைக் காணுங்கால் அவள் வீரம் தோன்றும்.

**மலையாளமும், மலேயாவும்:**

குழந்தாய், என்னோடு பன்னிருவர் பயணம் செய்கின்றனர் என்று எழுதினேனே! அவர்கள் யாரென்று அறிய நீ ஆசைப்படுகிறாயல்லவா? ஆம், நான் ஒருவன்நான் தமிழன். ஒருவர் பஞ்சாபி. மற்றவர் அனைவரும் மலையாளிகள். இதற்கு முன் கப்பலிலும்கூட இவ்வாறு மலையாளிகள் தாம் அதிகமாகச் சென்றார்களாம். மலையாளிகள் எல்லோரும் ஒருகால்

தமிழராய் இருந்தவர்கள் என்பது உனக்குப் புதிதாக இருக்கலாம். சேர, சோழ, பாண்டியரைப் பற்றியும் அந்த மூன்று தமிழ் அரசர்களும் தமிழ் நாட்டை ஆண்டதைப் பற்றியும் படித்திருக்கிறாயல்லவா? அவருள் சேரன் ஆண்ட நாடுதான் இன்று மலையாள நாடாக மாறிவிட்டது. 'சிலப்பதிகாரம்' உண்டாகிய நாடுதான் தற்கால மலையாள நாடு. ஆனால் அது பற்றி அங்கு நினைப்பவர் இலர். தமிழிலே இருந்து சிதைந்த மொழியானது இன்று வடமொழிச் சேர்க்கையைப் பெருவாரியாகப் பெற்றுத் தமிழிலிருந்து மாறிவிட்டது. எனினும் பல சொற்கள் தமிழாகவே உள்ளன.

மலையாளிகளுள் பலர் மலேயாவில் உள்ளனராம். கப்பற்றலைவர் வேடிக்கையாகச் சொன்னார். 'மலையாளிகளாகிய நீங்கள் பெரும்பாலராக மலேயா சென்று, மலையாளிகளின் எண்ணிக்கையைப் பெருக்கி, மலேயாவும் மலையாளமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவே என்று பேசி விடுவீர்களோ'? என்றார் அவர். அனைவரும் சிரித்தோம். மலையாளிகள் எங்கெங்கு பொருள் வருவாய் உண்டோ, அங்கெல்லாம் செல்வதைப் பற்றிப் பேசிக்கொண்டோம் 'கால்டுவெல்' பல ஆண்டுகளுக்கு முன் தமிழரை அவ்வாறு சொல்லி விட்டுச் சென்றார். எங்கே பொருள் அதிகம் உண்டோ, வருவாய் உண்டோ அங்கே தமிழரைக் காணலாம் என்றுஅவர் கூறியுள்ளார். ஆனால், அஃது இன்று மலையாளிகளுக்குப் பொருந்தும். நீ உன் விடுதியிலேயே வேலை பார்ப்பவரும் மேற்பார்வையாளரும் மலையாளப் பெண்கள் என்று கூறி இருக்கிறாய். சென்னையில் மலையாளிகளை எந்த இடத்திலும் காணலாமே. ஒரு வேளை மலேயாவிலும் அப்படித்தானோ என்றுகேட்டேன். இல்லை என்றார்கள். ஒரு சில ஆண்டுகளாகத்தான் அவர்கள் கூட்டம் கூட்டமாக மலேயா செல்கிறார்களாம். அவர்கள் பெரும்பாலும் தோட்டங்களில் வேலை பார்க்கிறார்களாம்.

கடல் மேல் கலம் அசைந்து கொண்டிருக்கிறது. இன்னும் நான் நிறைந்த தெளிவை அடையவில்லை. ஆகவே இன்று இதோடு என் எழுத்து முடிகின்றது. நாளை நிகழ்ச்சிகளை விளக்கமாக எழுதுகிறேன்.

அன்புள்ள தந்தை,

**அ. மு. பரமசிவானந்தம்.**

# 3. நல்லார் இணக்கம்

(திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் பி. ஏ., பி. எல்., தமிழாராய்ச்சித் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்.)

தமிழ் நாடு தழைத்தோங்கியிருந்த காலத்தில் கோப் பெருஞ் சோழன் என்னும் மன்னவன் சோழ நாட்டை ஆண்டு வந்தான். காவிரிக் கரையில் அமைந்த உறையூரைத் தலைநக ராகக் கொண்டு செங்கோல் ஓச்சிய அவ்வளவன் புலவர் பாடும் புகழுடையவனாய் விளங்கினான்.

அக்காலத்தில் பாண்டி நாட்டிலமைந்த பிசிர் என்னும் சிற்றூரில் புலமை சான்ற ஆந்தையார் ஒருவர் இருந்தார். அவரைப் பிசிராந்தையென்று அன்பர்கள் அழைத்தார்கள். கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும்; வேறு வேறு நாட்டிலும், வேறு வேறு குலத்திலும் பிறந்தவராயினும் ஒத்த உணர்ச்சியுற்றமையால்உயரிய நண்பராயினர். சோழ மன்னன், உறையூரில் அரசு வீற்றிருந்தான். ஆந்தை, பாண்டி நாட்டுப் பழம்பதியாகிய பிசிர் ஊரில் வாழ்ந்தார். அரசர் கோமான் வளவர் குலத்திற் பிறந்தவன். ஆந்தை ஆதன் குடியிற் பிறந்தவர். சோழன் பெருஞ் செல்வம் படைத்தவன். ஆந்தை அறிஞர்க்கு அணியாய வறுமை பூண்டவர். இங்ஙனம் குலத் தாலும், நலத்தாலும், பிறவற்றாலும் வேறுபட்ட அரசனும் ஆந்தையும் உண்மைக் கேண்மைக்கோர் உயரிய சான்றாக விளங்கினர். இருவர் நண்பராதற்கு ஒருவரோடொருவர் நெருங்கிப் பலகாற் பழகுதல் வேண்டற்பாலதன்றென்றும், ஒத்த உணர்ச்சியே நட்பென்னும் உரிமையைப் பயக்கு மென்றும் தமிழ்மறை அருளிய வாய்மைக்கு அரசனும், ஆந்தையும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தார்கள்.

கோப்பெருஞ் சோழன் தன்பால் வைத்த தலையாய அன்பின் திறமறிந்த ஆந்தையார், ஒரு நாள் மாலைப்பொழுதில் ஆகாய வழியே விரைந்து சென்ற ஓர் அன்னத்தை நோக்கிப் பகர்ந்த அழகிய மொழிகள் நேயம் நிறைந்த அவன் நெஞ்சின் நீர்மையை நன்குணர்த்துவனவாம். வளமார்ந்த குமரித் துறையில் அயிரைமீன் அருந்தி மாலைப்பொழுதில் தன்மனை நோக்கிச் சென்ற ஓர் அன்னத்தைக் கண்ட ஆந்தையார், 'அன்னமே! அன்னமே!! வளமார்ந்த குமரித்துறையில்

நீ அயிரை மீன் அருந்தி வடமலையிலுள்ள உன் மனையை நோக்கி ஏகுவாயாயின் ஒன்று சொல்வேன் கேள்! நீ செல்லும் வழியில் சோழநாடு அமைந்திருக்கின்றது. அந்நாட்டின் தலை நகராய கோழி என்னும் உறையூரில் ஓங்கி உயர்ந்த அழகிய மாளிகையில் சோழ மன்னன் வாழ்கின்றான். அவ்வரண் மனையின் வாயில் காப்போனைக் கண்டு அஞ்சாது நேராக மாளிகையின் உள்ளே நீ சென்றால் கோப்பெருஞ் சோழன் என்னும் எனது கோமானைக் காண்பாய். அவன் முன்னே நின்று, 'வளவனே, நான் பிசிர் என்னும் ஊரிலுள்ள ஆந்தை யின் அடியுறை என்று சொல்வாயாயின், மனமகிழ்ந்து அன்பார்ந்த நின் பேடை அணிதற்குரிய நல்லணியை அம் மன்னன் உனக்கு நயந்தளிப்பான்' என்று உரைத்த அருமை சான்ற மொழிகளில் அரசனும், அப்புலவரும் உயிர் நண்பராய் அமைந்திருந்த தன்மை நன்கு விளங்கும்.

நெடுங்காலம் உறந்தையில் வாழ்ந்து மன்னுயிரைக் காத்து வந்த மன்னவன், முதுமை வந்துற்ற பொழுது தன்னுயிர்க்கு உறுதுணையாய தவம்புரியக் கருதி நாடும் செல்வமும் துறந்து கானகம் சேர்ந்தான். இவ்வாறு சோழன் அருந்தவம் புரியப் போந்தான் என்று அறிந்த ஆந்தையார் தாமும் உற்றார் உற வினரை நீத்துச் சோழன் இருந்த சூழலை நோக்கி நடந்தார். ஆருயிர் நண்பராகிய ஆந்தை தம்மைத் தேடிவருதல் ஒருதலை என்றுணர்ந்த அரசன் தன் அருகிருந்த சான்றோரை நோக்கி, 'அன்பரே! என் உயிர்க்குயிராய் உள்ளவன், தென்னவன் நாட்டில் அமைந்த பிசிர் என்னும் சிற்றூரில் உள்ளான். செல்வச் செழுமையுற்று நான் வாழும் காலத்தில் அவன் வாரா திருப்பினும், இவ்வல்லற் காலத்து ஈங்கு வாராது ஆங்கு நில்லான்' என்று அறிவுறுத்தி ஆவி சோர்ந்தான்.

காடும் நாடும் காலினாற் கடந்து ஆந்தையார் சோழன் தங்கியிருந்த சூழலை வந்தடைந்த பொழுது, அவன் ஆவி துறந்தானென்று அறிந்தார். அந்நிலையில், அன்பனைப் பிரிந் திருக்க ஆற்றாத ஆந்தையார் உண்ணா நோன்பினை மேற் கொண்டு உயிர் துறந்தார்.

இவ்வாறு ஒத்த உணர்ச்சியுடையார், உயரிய நண்பராய் வாழும் உண்மைக்கு ஒரு சான்று காட்டினார் கவியரசர் கம்பர்.

வானர நாட்டு வேந்தனாகிய சுக்கிரீவனும், இலங்கை வேந்தன் தம்பியான விபீஷணனும் பலவகை வேற்றுமையுற்றவர். முன்னவன் வானர நாட்டிற் பிறந்தவன். பின்னவன் இலங்கை நாட்டிற் பிறந்தவன். முன்னவன் வெண்ணிறம் வாய்ந்தவன். பின்னவன் கருநிறம் வாய்ந்தவன். எனினும் இருவரும் ஒத்த உணர்வுடையவராய் இருந்தமையால் உள்ளம் ஒன்றி உயரிய நண்பராயினர்.

> "தொல்லருங் கால மெல்லாம் பழகினும் தூய ரல்லார்
> புல்லலர் உள்ளந் தூயார் பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே
> ஒல்லைவந் துணர்வும் ஒன்ற இருவரும் ஒருநா ளுற்ற
> எல்லியும் பகலும் போலத் தழுவினர் எழுவிற் றோளார்"

என்றார் கவியரசர்.

முன்பு ஒருவரை யொருவர் கண்டு அறியாத அரிக்குல வேந்தனும், அரக்கர் குல அறிஞனும் அறம் நிரப்பிய மனத்தினர் ஆதலாலும், தம் பிறப்பினால் வந்த புன்மை திருமாறு அறநெறியாக நின்ற அஞ்சன வண்ணனோடு உறவு பூண்டமையாலும் இருவர் உணர்வும் ஒன்றுபட்டதென்றும், அந்நிலையில் ஒருவரையொருவர் எதிர் பட்டமையால், பல நாட்பழகிய பான்மையாளர்போல் இருவரும் ஒருவரையொருவர் தழுவினர் என்றும் இனிதெடுத்துரைக்கும் கம்பர் கவியில் நட்பின் பான்மை நன்கிலங்குவதாகும்.

இன்பமும் துன்பமும் கலந்த இவ்வுலக வாழ்க்கையில் இன்பத்தை நிறைப்பதற்கும் துன்பத்தைக் குறைப்பதற்கும் இனிய துணைவர் வேண்டும் என்று அறிந்தோர் கூறுவர். இன்ப நிகழ்ச்சிகளைக் குறித்து நண்பருடன் நாம் கலந்து பேசுங்கால் நம் மனத்தில் மகிழ்ச்சி பெருகுகின்றது. துன்ப நிகழ்ச்சிகளை நண்பரிடம் சொல்லி ஆற்றுதலால் நம் மனத் துயர் மெல்ல மெல்லத் தேய்ந்து ஒழிகின்றது. இதனாலேயே இறைவனால் மாந்தர்க்கு அருளப் பெற்ற சிறந்த நலங்களுள் நட்பும் ஒன்றென்று உயர்ந்தோர் கருதுகின்றனர்.

இத்தகைய நண்பரைத் தேர்ந்து கொள்ளுதல் எளிதாகத் தோன்றினும் உண்மையில் அது மிக அரிது. பொருளாளரது கேண்மையால் ஒன்றும் பெறுதல் இலரெனினும், அன்னார் நண்பரென அயலார் தம்மை மதிப்பாரென்றெண்ணி அவரைச்

சூழ்ந்திருப்பர் பலர். இப் புன்மக்கள் போலிப் பெருமையாற் பொலிவெய்தக் கருதித் தம் உடலையும் உயிரையும் பொருளுடையார்க்கு அடியுறையாக்குவர். நட்பினலாய நற்பயனை ஒருவன் பெறல் வேண்டுமாயின் உணர்ச்சி ஒத்தவரோடு நேசம் கொள்ளுதல் அடுக்குமே யன்றிச் செல்வச் செருக்குற்றாரை நண்பரெனக் கருதுதல் சீரழிவிற்கே ஏதுவாகும். உணர்ச்சியால் ஒருமைப்பட்டோர் உலகில் ஒரு சிலரேயாவர் என்னும் உண்மை, "ஊரில் ஒருவனே தோழன்" என்னும் முதுமொழியால் உணரப்படும்.

இவ்வுலகில் வாழும் மக்களின் மனப்பான்மையை நன்குணர்ந்த கவிஞர், நண்பராகக் கொள்ளத்தக்கார் இன்னர் என வரையறுத்து வழிகாட்டியுள்ளனர். வேழம் போல் உயர்ந்தாரது கேண்மையை விரும்பாது, நாயனைய நல்லாரது நேசத்தைப் பெறல் வேண்டும் என்று நாலடியார் உணர்த்துகின்றது.

"யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்"

என்ற நாலடியின் கருத்து அறியத் தக்கதாகும்.

மாநிலத்தில் வாழும் விலங்குகளுள் வேழமே உருவத்தில் உயர்ந்ததாகும். 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்' என்னும் பழமொழியே அதன் அருமையை இனிது உணர்த்துகின்றது. இன்னோரன்ன நலங்களெல்லாம் அமைந்திருப்பினும் வேழத்தோடு பழகலாகாதென்று அறிந்தோர் கூறுவர். அவ்விலங்கினிடம் உருவும் திருவும் அமைந்திருப்பினும் குணநலம் காண்டல் அரிதாகும். சீற்றமும் மயக்கமும் அதன்பால் இயல்பாக அமைந்த சிறுமைகளாகும். காட்டில் வாழும் யானையை நாட்டிற் கொணர்ந்து கவளம் ஊட்டி ஏற்ற வகையிற் போற்றினலும், அவ்விலங்கின் தன்மை சிறிதும் மாறுபடுமாறில்லை. பசியறிந்து யானைக்கு உணவருத்திப் பேணும் பாகன் என்றேனும் அதன் வெம்மைக்கே இரையாவான். பன்னாட் பழகிய பாகன் என்றும் பாராது, நல்லுணவளித்த நண்பன் என்றும்

கருதாது, சீற்றம் உற்றபோது பாகனைச் சிதைக்கும் சிறுமை வேழத்தின் இயல்பாதலால் அவ்விலங்கின் தன்மை வாய்ந்த மாந்தரோடு பழகுதல் ஆகாதென்று ஆன்றோர் அருளிப் போந்தார். இவ்வுலகில் ஏற்றமும் தோற்றமும் வாய்ந்து இறுமாந்து வாழும் செல்வருடன் அல்லும் பகலும் பழகினாலும், அவர் குறிப்பறிந்து குற்றேவல் செய்தாலும், இடையறாது இச்சகம் பேசி இன்புறுத்தினாலும் அன்னார் வெகுளுங்கால் பன்னாட் பழகிய பான்மையாரைச் சிதைக்கச் சிறிதும் தயங்கார். பிறன் செய்த சிறு நன்மையைப் பெரு நன்மையாகக் கருதி, அவன் புரியும் தீமை அனைத்தும் பொறுத்தல் பண்புடையோர் செயலாகும். அவ்வாறன்றிப் பிறன் ஆற்றிய நன்மையனைத்தும் மறந்து, ஒரு சிறு தவறு கண்டவிடத்து ஒறுத்தல் இழிந்தோர் இயல்பாகும். செல்வச் செருக்குற்றோர் பிறர் தமக்குச் செய்யும் நன்மையை மறந்து தீமையையே நினைந்து சீற்றமுறும் தன்மையராதலின் அன்னார் இணக்கம் ஆகாதென்று ஆன்றோர் அறிவுறுத்தினர்.

வேழத்தை உயர்ந்த பொருளெனக் கருதி மதிக்கும் உலகம், நாயை மிக இழிந்த பொருளெனக் கருதி இகழ்கின்றது. தம் நிலையின் இழிந்த மாந்தரை நாய்கள் என்று பழிக்கும் பழக்கம் இந்நாட்டில் உண்டு. ஆயினும், அவ்விலங்கினிடம் ஓர் உயர்ந்த குணம் அமைந்திருக்கக் காணலாம். செய்ந்நன்றி அறிதல் என்னும் சீரிய அறத்தை உயிரினும் உயர்வாகப் போற்றும் பெருமை விலங்கினங்களுள் நாய்க்கே சிறப்பாக உரியதாகும். தெருக்களில் குறுக்கு மறுக்காகத் திரியும் நாய் பெரும்பாலும் மக்கள் தம் வீட்டினின்று கழித்தெறிந்த மிச்சிலையே உண்டு மகிழ்கின்றது. இங்ஙனம். கழித்த உணவை உண்டு களிக்கும் நாய், மிச்சிலிட்டாரைக் கண்டபொழுது உச்சி குளிர்ந்து,வால் குழைத்துத் தலை தாழ்த்து இன்முகங்காட்டி ஆர்ப்பரிக்கக் காணலாம். பகைவராலேனும் கள்வராலேனும்பிறவாற்றாலேனும் தனக்குணவிட்ட தலைவனுக்குத் தீங்கு நேருங்கால் அதனைத் தடுக்கும் முயற்சியில் தன்னுயிரையும் கொடுக்கும் உயரிய சீலம் நாயினிடம் உண்டு. ஆழ்நீரில் தவறிவிழுந்த தம் தலைவரைக் கவ்வியெடுத்துக் கரைசேர்த்துக் காத்த நாய்களின் கதை இந்நானிலத்தில் பலவாகும். தனக்கினிய தலைவன் நோய்வாய்ப்பட்டு வருந்துங்கால் நன்றி மற

வாத நாய் வெருட்டினும் போகாது, அவனருகே கிடந்து ஊண் உறக்கங் கொள்ளாது, கடைக்கண்ணால் அவனை நோக்கி நோக்கிக் கண்ணீர் உகுத்தலை நாம் கண்டிருக்கிறோம். இவ்வாறு திணைத்துணை நன்மை செய்யினும் பனைத்துணையாகக் கொள்ளும் பான்மை வாய்ந்த நாய், தலைவன் காரணமின்றித் தன்னைத் துன்புறுத்திய போதிலும் அவனருள் நினைத்து அகங்குழையும் தன்மை வாய்ந்ததென்று அறிஞர் கருதுகின்ரூர்கள். சீற்றமுற்ற தலைவன் தன் கரத்திலமைந்த கூரிய வேற்படையை எறிந்து வெந்துயர் விளைப்பினும் அவ்விலங்கு அவனை நோக்கி இன்முகங்காட்டி வால் குழைத்து நிற்கும். உடல் புண்ணுற்று எரியும்பொழுதும் உள்ளம் நன்றியறிந்து மகிழ்தலை நாயினிடம் நன்கு காணலாம். "கொன்றன்ன இன்னு செயினும்அவர் செய்த ஒன்று நன்று உள்ளக் கெடும்" என்னும் பொய்யா மொழியின் வழி நின்று, புரவலன் செய்த பெருந்தீமையை அறவே மறந்து, அவன் ஆற்றிய நன்மையை நினைந்து இன்புறும் சால்பு ஏற்றமுடையதன்ரூே? ஆகவே ஏற்றமும் தோற்றமும் இன்றி, எளியராய் இவ்வுலகில் வாழும் மக்களுள், நாயின் நற்குணம் வாய்ந்தோர் உண்டென்றும், அன்னர் "ஒரு நன்றி செய்தாரை உள்ளத்தில் வைத்து" அவரிழைக்கும் தீமையெல்லாம் பொறுத்து நலமே புரிவரென்றும், அத்தகைய எளியார் கேண்மையே கொள்ளத் தக்கதென்றும் ஆன்ரூேர் அருளிய உண்மையை அறிந்து ஒழுகுவோர் நலமார்ந்த நட்பின் சுவை யுணர்ந்து இன்புற்று வாழ்வர்.

# 4. கடமைக்குப்பின் உரிமை

(தொகுத்தோன்)

பழம்பெரு நாடாகிய பாரத நாட்டில் நாம் வாழ்கின்றோம். பாரத நாட்டின் பண்பாட்டைப் பாரோர் பாராட்டுகின்றனர். பகைவர்கள் பலருடைய படையெடுப்புகளுக்கு இலக்காகியும் நம் நாடு சிறப்புஞ் சீர்மையும் குன்றுமல் மிளிர்கின்றது. அலெக்சாந்தர் தம் ஆற்றலைக் காட்டிய நாள் முதல் ஆங்கிலேயரின் ஆதிக்கம் முடியும் வரையில் தன்னிலை திரியாத் தனிப் பெருமையுடன் விளங்குவது நம் நாடாகும். அசோகரின் அமைதி மிக்க ஆட்சியையும், அக்பரின் அருமந்த ஆட்சியையும், கரிகாலனின் காவற் சிறப்பையும், செங்குட்டுவனின் செங்கோற் சிறப்பையும் கண்ட நாடு நம் நாடு. இத்தகைய ஏற்றம் வாய்ந்த இந்திய நாட்டில் பிறக்கும் பேற்றினை நாம் பெற்றிருக்கின்றோம்.

நம் நாட்டின் வரலாற்றில் 1947-ஆம் ஆண்டு, ஆகஸ்டுத் திங்கள், பதினைந்தாம் நாள் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய நாளாகும். ஏன்? அயலவரின் ஆதிக்கம் அகன்ற நாள் அதுவே. நாம் நம் உரிமைகளை உணர்ந்த நாள் அதுவே. பேச்சுரிமையும், எழுத்துரிமையும் நமக்கு வழங்கப் பட்ட நாள் அதுவே. 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று பாரதியார் கூறிய கூற்றின் உண்மையை நாம் உணர்ந்த நாள் அதுவே.

நம் உரிமைகள் யாவை? தனித்தனியே செல்வத்தைச் சேர்த்தல், இந்நாட்டின் எல்லைக்குள் எங்கு வேண்டுமானாலும் செல்லுதல், உள்ளத்தின் உணர்ச்சியை அஞ்சாது வெளிப் படுத்தல், தேர்தல்களில் இருபத்தொரு வயது வந்தோர் ஓட்டுரிமை பெறுதல், யாவரும் கல்வி பெறுதல் முதலிய இன்னபல உரிமைகள் நமக்கு உள்ளன. இத்தகைய உரிமைகளின் பயனை ஒருவர் நுகருங்கால் பிறருடைய உரிமைகள் பறிக்கப்படாமல் இருக்கின்றனவா என்று பார்த்தல் இன்றியமையாததாகும்.

இரவு இரண்டு மணிக்கு இசைத்தட்டிலிருந்து வெளிவரும் இன்னிசையை ஒலிபெருக்கியின் வாயிலாகக் கேட்டு இன்புறு

கின்றார் ஒருவர். அதே போழ்தில் அடுத்த வீட்டில், பகல் முழுவதும் பாடுபட்டுக் களைத்து உறக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றார் மற்றொருவர். இன்னிசை கேட்டு இன்புறும் உரிமை முன்னவருக்கு உண்டு. அதேபோல் பின்னவருக்கு இரவில் உறங்கும் உரிமையும் உண்டு. இந்நிலையில் பின்னவருடைய உறக்கத்திற்கு ஊறு உண்டாகும் விதத்தில் முன்னவர் தம் உரிமையைப் பெற நினைப்பது நீதியாகுமா?

உரிமைகளைப் பெற முயலுவோர் தமக்குரிய கடமைகளை மறத்தல் கூடாது. 'புறநானூறு' என்னும் பழந்தமிழ் நூலுள் மக்களுக்குரிய கடமைகள்,

“ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருசமமுருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே”

என்று வரையறுக்கப்பட்டுள்ளன. 'புதல்வரைப் பெற்றுப் போற்றி வளர்த்துவிடுவது தாயின் தலைசிறந்த கடமையாகும். மகனைக் கல்விகேள்விகளிற் சிறந்தவனாக்கி, அறிவூட்டி, ஆன்றோர்கள் சான்றோன் என்று அழைக்குமாறு செய்து, அவையத்து முந்தியிருக்குமாறு செய்வது தந்தையின் கடமையாகும். அம்மகனை வெற்றி வீரனாகச் செய்யும் பொருட்டு வேலைக் கூர்மையாக்கித் தருவது கொல்லரின் கடமையாகும். அம்மகனுக்கு நல்லொழுக்கப் பயிற்சிகளை அளித்து நற்குடி மகனாகச் செய்வது அரசனின் கடமையாகும். போர்க்களத்தில் பகைவர் படையினூடு அஞ்சாது புகுந்து, வாட்போரில் பகைவரை அழித்து, ஆண் யானையை வெட்டித் தள்ளி, வெற்றி வீரனாகத் திரும்புவது மகனது கடமையாகும். என்பது அப்பாட்டின் பொருளாகும். இப்பாடலை அருளியவர் பொன்முடியார் என்னும் புலவராவார். தாய், தந்தை, கொல்லர், அரசர், மகன் ஆகியோரின் கடமைகள் ஈண்டுக் கூறப்பட்டுள்ளன. எனவே, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கடமை உண்டு என்பதனை நாம் தெற்றென உணரலாம்.

நம் நாட்டுக்கொடியைக் கண்டவுடன் அதற்கு வணக்கம் செலுத்துவது நமது தலைக்கடமையாகும். கொடியை உற்று நோக்கினல் நமக்குத் தோன்றும் கருத்துக்கள் பலவாகும். கொடியின் தலைப்பில் அமைந்துள்ள காவி நிறம், நம் நாடு உரிமை பெறுவதற்காகப் பாடுபட்டு, தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகையாளர்களின் நினைவை உண்டாக்கும். அந்நினைவு, நம்மிடம் அமைந்துள்ள தன்னலம், அழுக்காறு, இன்னா செய்தல், வெஃகுதல், வெகுளல் முதலான தீய பண்புகளை அகற்றும் என்பது ஒருதலை. கொடியின் இடைப்பகுதியில் அமைந்துள்ள வெண்மை நிறம் அமைதியைக் குறிப்பிடும். நாம் கள்ளமற்ற உள்ளத்தினராய் வாழ்ந்து, நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்பதை அந்நிறம் நமக்கு அறிவுறுத்தும். ஆண்டுள்ள அசோகச் சக்கரம் அசோகர் காலத்து அமைதியான ஆட்சி நம் நாட்டில் நிலை பெற நாம் உதவ வேண்டும் என்று நம்மைத் தூண்டும். கொடியின் அடிப்பகுதியில் அமைந்துள்ள பசுமை நிறம் நம் நாட்டின் இயற்கைச் செல்வத்தை நமக்கு நினைவூட்டும். வற்றாத ஆறுகளும், வானளாவிய மலைகளும், செறிந்த காடுகளும், செழிப்பு மிக்க நிலமும் நம் நாட்டில் உள்ளன என்னும் எண்ணத்தை அப்பசுமை நிறம் நமக்கு உண்டாக்கும். இவற்றைப் பயன் படுத்துவது நமது கடமையாகும் என்ற உணர்ச்சி அப்பொழுது நமக்கு உண்டாகும். இக்கருத்தினை உட்கொண்டே வள்ளுவப் பெரியார்,

> "இலமென்(று) அசைஇ இருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும்"

என்று வாய்மலர்ந்தருளியுள்ளார். "யாம் வறியேம் என்று சொல்லி சோம்பியிருப்பாரைக் கண்டால் நிலமகளென்னும் நல்லாள் தனக்குள்ளே அவரது பேதைமையை எண்ணி இகழ்ந்து சிரிப்பாள்" என்பதே இக்குறட்பாவின் கருத்தாகும்.

பொதுக் கூட்டங்களிலும், பள்ளிக்கூடத்தில் நடைபெறும் கூட்டங்களிலும், பள்ளிக்கூடத்து நாட்கூட்டங்களிலும் நாட்டு வாழ்த்துப் பாடல் பாடப்படுகின்றது. நாட்டு வாழ்த்துப் பாடல் பாடப்படுங்கால் யாவரும் அதில் பங்கு

கொள்ள வேண்டும். குழு இசை ஆண்டு வெளிப்படுதல் இன்றியமையாதது. யாவரும் ஒன்று என்னும் எண்ணத்தை உண்டாக்கும் பண்பு குழுவிசைக்கு உள்ளது. எல்லோருக்கும் நாட்டுப்பற்றினை ஊட்டி ஒருமையெண்ணத்தை வளர்க்க அக் குழுவிசை பயன்படும்.

ஒருவர் தனித்து வாழ முடியாது. கூட்டங் கூட்டமாக வாழும் பண்பு விலங்குகளிடத்திலும், பறவைகளிடத்திலும் கூட அன்றோ காணப்படுகின்றது! ஒருவர் மற்றொருவரை அண்டித்தான் வாழ வேண்டும்; 'நானே வாழ வேண்டும்; உண்ண வேண்டும்; உடுக்க வேண்டும்' என்னும் எண்ணம் நாட்டைக் குலைத்துப் பாழ் படுத்தும். 'நாம் வாழ வேண்டும்; உண்ண வேண்டும்; உடுக்க வேண்டும்'' என்ற எண்ணமே நமக்கு வேண்டும்.

இன்று நம் நாடு குடியரசு நாடாகும். நம் நாடு ஜனநாயகக் குடியரசு என்று அழைக்கப்படுகிறது. இதன் முடிந்த பொருள் யாது? நம் நாட்டு அரசாங்கம் நம் நாட்டு மக்களாலேயே நம் நாட்டு மக்களின் பொருட்டு நடத்தப்படுகின்றது என்பதே இதன் முழுப் பொருளாகும். இன்று நம்மை நாமே ஆளுகின்றோம்; அந்நியர் அல்லர். நம் நாட்டு அரசாங்கம் நன் முறையில் நடத்தப்படுவது நம்மையே பொறுத்திருக்கின்றது. ஒவ்வொருவரும் 'அரசாங்கம் நம்முடையது' என்ற எண்ணத்துடன் தத்தம் கடமைகளைத் தவறாது செய்தல் வேண்டும். பொதுப் பொருள்களைக் காப்பாற்றுதல் மக்களின் கடமையாகும். தெருக் குழாய்த் தண்ணீர் வீணே சென்று கொண்டிருந்தால் அதை உடனே மூடுவது, தெருவைச் சுத்தமாக வைப்பது, ஊரின் சுகாதாரத்தில் நாட்டம் செலுத்துவது, பொதுப் பூங் காக்களையும், பொது நிலையங்களையும் சுத்தமாக வைத் திருப்பது, புகை வண்டிகளிலும், மோட்டார்களிலும் பயணம் செல்லுங்கால் பயணச் சீட்டுகளைத் தவறாமல் வாங்குவது, புகை வண்டிகளில் மூட்டை முடிச்சுகளை வழிகளில் வையாமல் அவற்றுக்குரிய இடங்களில் வைப்பது, படுத்துக் கொண்டிருப்போர் சினவாமல் எழுந்தமர்ந்து நிற்போர்க்கு இடங்கொடுப்பது, புகைவண்டியிலும் ஏனைய பொது ஊர்தி களிலும் வயது முதிர்ந்தோர், பெண்டிர், குழந்தைகள் முதலியோர் அமர்வதற்கு முதலிடம் கொடுப்பது, ஒருவர்பின்

ஒருவராக வரிசைப்படி நிற்கின்ற 'கியூ வரிசை' முறையைப் பின்பற்றுவது முதலிய இன்ன பல ஒழுக்கங்கள் யாவும் மக்களின் கடமைகள் ஆவன. இவற்றை ஒவ்வொருவரும் பின்பற்றினால் அரசாங்கத்தால் எளிதில் ஆக்க வேலைகளில் ஈடுபட முடியும்.

நேர்மையுடன் நடத்தல் நம் கடமைகளுள் மிகச் சிறந்ததாகும். ஒருவர் வாழ்க்கையில் தன்னலம் என்பது குறுக்கிட்டால் அவர் நேர்மை தவறி நடத்தல் திண்ணம். பிறரை ஏமாற்றும் எண்ணம் எவர் மனத்திலும் தோன்றுதல் கூடாது. நம் நாட்டுப் பெரியார் ஒருவர் அண்மையில் இங்கிலாந்திற்குச் சென்றிருந்தார். அவர் ஒரு பெருஞ் செல்வர். அவர் அந் நாட்டு மக்களின் பண்பினைச் சோதிக்க விரும்பினார். எனவே அவர், நூற்றுக்கணக்கான பவுன்களின் மதிப்புள்ள இங்கிலாந்து நோட்டுகளைக் கொண்ட பணப்பை ஒன்றை எடுத்துக் கொண்டார்; பொதுமக்கள் செல்லும் மோட்டாரில் ஏறினார்; வேண்டுமென்றே பணப்பையை மோட்டாரில் வைத்தார். பணப்பையை எடுத்துக் கொள்ள மறந்து விட்டவர் போல அதனை விடுத்து இறங்கிச் சென்றுவிட்டார். அப் பணப்பையில் அவரது இங்கிலாந்து முகவரி இருந்தது. மறு நாள் அவரது முகவரிக்கு ஒரு தபாற் பொதி வந்து சேர்ந்தது. அதைப் பிரித்துப் பார்த்தார் அவர். என்னே வியப்பு! அவர் மோட்டாரில் விடுத்து வந்த பணப்பை அத் தபாற் பொதியில் இருந்தது. அவர் எண்ணி வைத்திருந்த பவுன் நோட்டுகள் ஒன்றுகூடக் குறையாமல் அப்பையில் இருந்தன! ஈதன்றோ ஒழுக்கம்! இன்ன பல வகைகளில் அவர் சோதனைகள் செய்து அந்நாட்டு மக்கள் ஒழுக்கத்திற் சிறந்தவர்கள் என்ற உண்மையைக் கண்டு கொண்டார். மேலே காட்டப்பட்ட நிகழ்ச்சி உண்மையாக இருப்பின் என்? இல்லாதொழியின் என்? மக்கள் எவ்வாறு ஒழுக வேண்டும் என்பதனை இது நமக்குக் காட்டுகிறதன்றோ? இத்தகைய ஒழுகலாறு நம்மனோரிடத்தில் இருத்தல் வேண்டும்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

என்பது பொய்யா மொழியன்றோ?

ஒழுக்கம் உருப்பெறும் இடம் பள்ளிக்கூடமேயாகும். நல்லன நினைத்தல், நல்லன பேசுதல், நல்லன செய்தல் என்பன வற்றை மாணவர்கள் தம் கடமைகளாகக் கொள்ள வேண்டும். தாய் மொழிப்பற்றும், தாய் நாட்டுப் பற்றும் மாணவர்க்கு இருத்தல் வேண்டும். பள்ளிக்கூடக் கட்டுப் பாடுகளுக்கு அடங்கி நடத்தல், ஆசிரியர்க்குக் கீழ்ப்படிதல் முதலிய பண்புகளை மாணவர் கைக்கொள்ளுதல் வேண்டும். நன்முறைப் போட்டி, தோல்விகளைச் சினவாமல் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை, குற்றங்களை ஒப்புக்கொள்ளும் பெரும் பண்பு முதலியவை மாணவர்களிடம் அமைந் திருத்தல் வேண்டும். "எல்லோரும் ஒரு குலம்; எல்லோரும் எல்லோரும் ஓரினம்" என்ற உணர்ச்சியும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்த மனப்பான்மையும் மாணவர்களி டம் குடிகொண்டிருந்தால் நாடு நலமுற்று விளங்கும். தற்கால மாணவர்களே பிற்காலக் குடிமக்களாவர். பிற்கால இந்தியா விற்கு ஏற்றம் கொடுக்கும் பொறுப்பு தற்கால மாணவர் களிடமே உள்ளது. இப்பொறுப்பினை மாணவருலகம் உணர்ந்து ஏற்றவாறு நடக்க வேண்டும். அவர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போரிட வேண்டும்; ஆனால் கடமைகளை மறக்கவே கூடாது.

# 5. அன்னைக்கு

(டாக்டர் மு. வரதராசனார், M. A., M. O. L., Ph. D.,
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.)

அன்புள்ள அம்மா,

உன் கட்டளைப்படியே இதுவரையில் நடந்தேன். இன்று நடக்க முடியவில்லை.

"தமிழர்கள் உணர்ச்சி அளவில் ஊக்கம் மிகுந்தவர்கள்; வாய்ச்சொல் அளவில் வீரம் மிகுந்தவர்கள். இந்த இரண்டும் மட்டும் பெற்றவர்களால் ஒரு நாடு முன்னேற்றம் அடைய முடியாது. கடமை ஒழுங்கு ஒன்று வேண்டும். இந்த ஒன்று மட்டும் இருந்து, மற்ற இரண்டும் இல்லாதிருந்தாலும் கவலையில்லாமல் தமிழ் நாடு எப்போதோ தலையெடுத்திருக்கும். நீ ஒரு தமிழன்; பழங்காலப் பிற்போக்குத் தமிழனாக இருந்து வாயால் மட்டும் விளங்காதே; உணர்வால் மட்டும் உயராதே, செயலால் சீர்படு" என்று எனக்கு எழுதிய கடிதத்தை மறந்துவிடவில்லை. என் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து முற்போக்குத் தமிழன்தான் என்பதைக் காட்டப்போகிறேன். பாடங்களை நன்றாகக் கற்று முதல் வகுப்பில் தேறப் போகிறேன். ஆனாலும். நேற்று வரையில் அமைதியாக இருந்ததுபோல், இன்று இருக்க முடியவில்லை. ஆகையால் சில திங்கள் கழித்து இதுபோல் கடிதம் எழுதுகிறேன்.

அம்மா ! நான் எப்படி இன்று அமைதியாக இருக்க முடியும் ? உலகமே அழுகின்றதே ! நான் மட்டும் புத்தக உலகத்தில் என்னை மறக்க முடியுமா ?

உலகம் கண்ணீர் விடுகின்றது; ஒரு வீடு, ஒரு நகரம் ஒரு நாடு கலங்கவில்லை ; உலகம் கலங்கி உருகுகின்றது. வீடு தோறும் இழவு, நகரந்தோறும் சாக்காடு நேர்ந்ததுபோல் இருக்கின்றதே ! ஒவ்வொருவர் முகமும் வாடிச் சுருங்கி விட்டதே!

அம்மா, இமயமலை தலைகீழாய்ப் புரண்டிருந்தாலும், இவ்வளவு பெரிய அதிர்ச்சி உண்டாயிருக்காது. பூகம்பம் உண்டானாலும், ஒவ்வொரு பகுதிதான் நடுங்கும். ஆனால் உலகத்தார் உள்ளமெல்லாம் அதிரும் அதிர்ச்சி இந்திய நாட்டிலே டில்லியிலே நடந்து விட்டதே!

வாழ்ந்த நாளிலும் எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒவ்வொருவித மாறுதலை ஏற்படுத்தும் ஆற்றல் அந்தத் தூய மெல்லிய உடலுக்கு இருந்தது. உணர்வற்று வீழ்ந்த நாளிலும் எல்லோரையும் ஒருசேரக் கலங்க வைக்கும் ஆற்றல் அந்த நல்லுடலுக்கு இருந்ததே!

புத்தர் வாழ்ந்தார்; அவர் வாழ்நாளில் லக்ஷக்கணக்கான மக்களின் வாழ்க்கையைத் திருத்த முடிந்தது. சாக்ரடீஸ் வாழ்ந்தர். அவருடைய வாழ்நாளில் பதினாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை விளைக்க முடிந்தது. ஏசு நாதரும் அவ்வாறே. ஆனல். வாழ்நாளிலேயே கோடிக் காணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை உண்டாக்கின வர் யார் அம்மா? காந்தியடிகள்—இந்தப் பெயரையும் நினைத்து தம் மனத்தையும் தொட்டுப் பார்க்கட்டும்! அவரு டைய பகைவரும் அவரிடமிருந்து கற்று வளர்ந்த புதிய முறைகள் சில உண்டு என்பதை உணர்ந்து கொள்வார்களே!

எல்லோரும் அரசியல் காந்தியை அறிவார்கள். அரசிய லில் அவர் பெருந் தலைவர் என்பதே பெரும்பாலோருக்குத் தெரிந்தது. ஆனல், இது முழு உண்மையல்ல; ஓரளவுதான் உண்மை. இன்னும் எண்ணிப் பார்த்தால், அவருடைய அரசி யல் கொள்கையில் கருத்து வேறுபட்டவர்கள் எங்கும் இருக்கின்றனர்கள். அவருடைய அரசியல் கொள்கைக்குச் செல்வாக்கு இருந்தாலும் உடன்படாமல் புறக்கணித்த தலைவர் களும் உண்டு; அறிஞர்களுமுண்டு; தொண்டர்களும் உண்டு.

ஆனலும், அவருடைய அரசியல் நெறியே இன்றுவரை யில் பெற்றுள்ள வெற்றிக்கெல்லாம் காரணம். அவருடைய அறிவுரையே இன்று பல தலைவர்கள் உயர்வுக்குக் காரணம்; பல அறிஞர்கள் பெருமைக்குக் காரணம்; இந்தியாவின் தலை நிமிர்ந்த வாழ்வுக்குக் காரணம்.

அம்மா, மறக்க முடியவில்லை. நம் வீட்டில் நாம் பல நாள் காநதியடிகளின் கொள்கைகளைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்த நாட்களை மறக்க முடியவில்லை. அரசியலில் அவர் சொல் வதில் இது மட்டும் சரி, அது சரியல்ல என்று வாதாடினேம். ஆனல், ஒவ்வொரு நாளும் அவருடைய தொண்டு வாழ் வையோ, இயற்கை நெறியையோ, சமயக் கொள்கையையோ, அற ஒழுக்கத்தையோ, கடமை ஒழுங்கையோ முடிவில் குறிப் பிட்டு, அங்கே ஒப்பற்ற நிலையை வணக்கத்தோடு போற்றி



காந்தியடிகள்

அடக்கத்தோடு அமைதி அடையவில்லையா? அவரை விடப் பெரிய அரசியல் அறிஞர்கள் இருக்கலாம். ஆனால் அவர் வாழ்ந்த வாழ்வைவிடச் சிறந்த வாழ்வை—தூய வாழ்வைக் குறிப்பிட வாய் இல்லாமல் அடங்கிவிட்டோம் அல்லவா?

''உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்'' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு தமிழன் எழுதிவிட்டுச் சென்றான். இந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக அந்த ஒரு குறளுக்கு எடுத்துக்காட்டு இல்லாமல் இருந்தது. காந்தியடிகள் வாழ்வுதான் ஒரே எடுத்துக்காட்டாக நின்றது. அன்று திருவள்ளுவர் உண்மையின் பெருமையினை உணர்ந்து உணர்வுலகத்தில் நின்று எழுதினார். எழுதிய அவரைப்பற்றியே தமிழகத்தில் பலருக்குத் தெரியாது.. ஆனால் அவர் உணர்ந்து எழுதிய கற்பனை அது. அந்த உண்மை கற்பனையாகவே நிற்கவில்லை; ஓர் அரிய வாழ்வாக மலர்ந்தது. அந்த மலர் வாடியது; சாம்பலானது. மத வெறியின் போர்வை போர்த்த அரசியல் வெறி அந்த அருமை மலரைக் கசக்கி எறிந்தது.

அந்த ஒரு குறள் மட்டும் என்ன? திருவள்ளுவரின் அறத்துப் பாலில் உள்ள ஒவ்வோர் எழுத்திற்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்த வாழ்க்கை அல்லவா அது?

எத்தனையோ நம்பிக்கைகள் எவ்வெவ்வாறோ தடுமாறும் நாட்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் வருகின்றன. ஆனால், அறம் என்ற ஒன்று உலகத்தை ஆளும் சட்டமாக இருக்கிறது என்பதை என்றும் தளரா நம்பிக்கையாகக் கொண்டு வாழ்ந்த வாழ்க்கை அன்று மாலை அடங்கிய அந்தப் பெரு வாழ்வு !

இன்றொன்றும் இந்த நேரத்தில் எனக்குத் தோன்றுகிறது. அடிகள் பெரியவர், ஒப்பற்ற தலைவர் என்பதை உலகமெல்லாம் உணர்ந்துவிட்டது உண்மைதான். ஆனால், அவருடைய கொள்கைகளின் பெருமையை உணர்ந்தவர்கள் எத்தனை பேர் அம்மா? அரசியலில் மட்டுமே அவர் இன்னவர் என்பதைப் பொதுமக்கள் உணர முடிந்திருக்கலாம். இயற்கை அறம், எளிமை, கடமை, ஒழுங்கு முதலியவற்றில், அந்த ஞாயிறு வீசிய ஒளியால் பயனடைந்தவர்கள் மிகமிகச் சிலரே என்று எண்ணுகிறேன். அப்பா ஒரு நாள் கூறியதுபோல், காந்தியடிகளின் உயர்ந்த கொள்கைகள் பொதுமக்கள் அறிவுக்கு எட்டாதவைகளே. பசியில்லாமல் உணவு விடுதிக்குச்

சென்று உண்பதுபோல், கலையுணர்வு இல்லாமல் சினிமாவுக்குச் சென்று காண்பதுபோல், அன்பு இல்லாமல் திருமணத்திற்குச் சென்று ஆரவாரம் செய்வதுபோல், நாகரிகத்தின் பெயரால் கொள்கைகளை உணராமல் வாயால் புகழும் மக்கள் மிகுதியாக இருக்கின்றனர்கள். அதனால் தான், அந்த தூய உடல் வாடிய அன்று இரவே, கொலையும் கொள்ளையும் தீயிடலும் துன்புறுத்தலும் தொடங்கச் சிலர்க்கு மனம் வந்தது. ஆனாலும் அவர்கள் துயரக்கோலத்தோடு கண்ணீர் வடித்தார்கள் என்பதைக் கேட்கும் போது. அந்தக் கொடுமைகளுக்கு அவர்கள் காரணமல்ல; நெடுங்காலமாக நிலவிவரும் வெறியே காரணம் என்று தெரிகின்றது.

அம்மா! என்னென்னவோ நினைவுக்கு வருகின்றது. தென்னாப்பிரிக்காவில் அவர் தொடங்கிய இயக்கத்திற்குத் தமிழ் மக்கள் துணையாக நின்று அவருடைய அன்பையும் பெற்றனர்கள். 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' என்னும் பழமொழியாலும், திருக்குறள் கருத்துக்களாலும் தமிழ் அவருடைய போற்றுதலைப் பெற்றது. தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் இல்லாதபோது அவரே தமிழாசிரியராக இருந்து தொண்டு செய்ததும் நினைவுக்கு வருகின்றது. இன்னொன்றை நினைக்கும்போது நெஞ்சம் நெக்குருகுகின்றது. தமிழர்களின் பண்பாடும், தமிழ் மொழியின் கருத்து வளமும் அவர் மனத்தைக் கவர்ந்தது போலவே, தமிழ் நாட்டு வறுமையும் அவருடைய கோலத்தையே மாற்றிவிட்டது. சேலத்திற்குத் தெற்கே தமிழ் மக்கள்-ஆண்களும் பெண்களும்-அரை நிர்வாணமாய் முழங்கால் வரையில் அரையாடை உடுத்து உழைப்பதைக் கண்ணால் கண்ட அன்று தானே; அடிகளின் தலைப்பாகையும் அகன்றது! நீண்ட அங்கியும் அகன்றது! பத்துமுழ வேட்டியும் அகன்றது! இவர்களுக்கு மானத்தை மறைக்கவும் கந்தல் போதவில்லை என்று கசிந்துருகித் தமிழ் நாட்டுக் குடியானவன் கோலத்தை அல்லவா அனறு முதல் மேற்கொண்டார்! அந்தக் கோலம் தானே உலகம் புகழ்ந்து வணங்கிய வறுமைத் திருக்கோலம்! அம்மா! ஏதோ எழுதினேன் ஆறுதல் பெற.

அன்புள்ள மகன்,

**எழில்**

# ஏனிந்தப் பஞ்சம்

(சிறுகதை)

(திரு. கு. இராஜவேலு. M. A.

தமிழ்த்துணைப் பேராசிரியர். அரசினர் கலைக் கல்லூரி சென்னை.)

இந்தச் சோகக் கதை நடந்து ஆண்டுகள் பலவாகி விடவில்லை. இது நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே துவக்க மாகியது; ஆறுவது மாதத்திலேயே கல்லறையில் அடக்கமும் எய்தியது. நாடு முழுவதும் பஞ்சம் பரவிய காலம். கொஞ் சமும் இரக்கமின்றி அஃது ஏழைகளைச் சூறையாடிய காலம். பெருஞ் செல்வர்களைக் கண்டு அஞ்சி நின்ற பஞ்சம், ஏனோ வஞ்சமில்லாத அவ்வேழைகள் மீது வஞ்சினங் கொண்டது!

* * *

மரங்களெல்லாம் மங்கல நாண் இழந்த மங்கையர் போல் இலையின்றி வாடின. பஞ்சத்தால் அடிபட்ட மக்கள் போல் குளங்களெல்லாம் காய்ந்து கிடந்தன. பாதையின் ஓரங்களிலே பிணங்கள் பல பருந்துக் கூட்டங்களால் பிளக்கப்பட்டு நாறிக் கிடந்தன. ஓநாய்கள் காடுகளில் உலவுவது போல் ஊர்களில் அச்சமின்றி உலவின. "பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்" என்னும் நன்மொழிக்கொப்ப, கலையறிவைப் பரப்பும் கல்லூரிகளெல்லாம் மூடிக்கிடந்தன. எலும்பும் தோலுமாய் உள்ள காவற்காரர்கள் ஓரிடத்திலேயே குந்திக் கிடந்தார்கள்.

வெப்ப மிகுதியால் வெறு நிலமும், உலைக்களத்திலிட்ட இரும்புபோல் காய்ந்தது. தெருவில் பருந்தும் ஓநாய்களும் தவிர வேறு நடமாடும் மனிதரையே காணோம். அந்த நாளில் ஒரு நடுப்பகல். பாழடைந்த அந்த நகரின் தெருவழியே ஓர் எலும்புக்கூடு நடந்து வந்தது. அதனுடைய கையிலே ஒரு கடப்பாரை. தலையிலே ஒரு சிறு முடிச்சு. முடிச்சுக்குள் ஒரு கால்படி அரிசி இருக்கும். காலையில் கதிரவன் உதயமாகு முன்னே, ஓநாயும் பருந்தும் உறங்கிக் கிடந்த வேளையிலே கையில் கடப்பாரையுடன் சென்ற அவ்வுருவம், கால்மைல் நடந்து சென்று ஓர் ஏரிக்கரையை அடைந்தது. ஏரி முழுவதும்

எறும்புப் புற்றுக்காகத் தேடி அலைந்த அவ்வுருவம், இறுதியில் ஒன்றைக் கண்டது. இன்பமுடன் உட்கார்ந்து, ஒற்றுமையுடன் உழைத்து, எறும்புகள் சேமித்து வைத்ததைக் கவர அவ்வுருவம் ஆவலுடன் தோண்டியது. இவ்வாறு நான் கைந்து புற்றுகள் தோண்டிப் பின்பு கிடைத்ததுதான் அக் காற்படி அரிசி. அலுத்து ஓய்ந்த கைகளுடன் அவ்வழியே நடந்து வந்து கொண்டிருந்தது அவ்வுருவம்.

சாலை ஓரத்தில் செத்துக்கிடந்த ஒரு பிணத்தை ஓநாய்கள் போட்டி போட்டுக்கொண்டு பிடுங்கித் தின்றன. இந்தப் பயங்கரமான காட்சியைக் கண்டது அவ்வுருவம். அச்சம் அடிவயிற்றில் தோன்றி, அங்கம் ஒவ்வொன்றையும் ஆட்டியது. எண்ணங்கள் எண்ணற்று எழுந்தன; கண்ணெதிரில் கிழிந்த பாயின்மீது கிடக்கும் தன் இன்ப மகனின் துன்ப உருவம் பளிச்சென்று தெரிந்தது. அன்னமில்லாது பன்னுட்கள் வாழ்ந் தான் அவன். ஒருநாள் ஜமீன்தார் வீட்டின் குதிரைக்காக அவருடைய ஆள் பசும்புல்லைக் கொண்டு சென்றான். அதைக் கண்டமக்கள் அவன் மீது பாய்ந்தனர். பசும்புல்லைப் பாதாம் அல்வாவைப் போல் உண்டனர். அப்புல்லுண்ட கூட்டத் திலே அவ்வின்ப மகனும் ஒருவன். அதன் பயனுகவே அவன் வயிறு வீங்கிப் படுத்துவிட்டான். தன் அன்பு மகனை எப்படி யாவது காக்க வேண்டுமென்று அவனது தாய்தான் எறும்புப் புற்றிலிருந்து தானியத்தைச் சேகரித்தவள். இரக்கமற்ற ஓநாய்களின் செய்கையைக் கண்டவள்; நடுங்கிய உள்ளத் துடன், மெல்ல ஓசையின்றி நடந்து வந்தாள்.

ஆனால், ஓநாய்கள் அவளைக் கண்டுவிட்டன. ஓலமிட்டுக் கொண்டே அவள்மீது பாய்ந்தன. அந்தோ! அயர்ச்சி மேலிட்ட அவளுடைய கைகள் எவ்வாறு ஓநாய்களுடன் போராடி வெற்றிபெறும்! கஞ்சிக்காகத் துடிதுடிக்கும் தன் ஆருயிர் மைந்தனை எவ்வாறு காப்பாற்றுவாள்? அவளுடைய அன்புள்ளம் என்னென்ன எண்ணியிருக்கும்? பேய் போய் அலறினள்; பெரு முழக்கம் செய்தாள். அவளுடைய அன் புள்ளம் ஆண்மையை அளித்தது. ஆயினும் என்ன? ஓநாய் ஒன்று! ஒன்றாய் இருந்தால் அஃது அஞ்சி ஓடும். ஆனல், துணையுடன் இருந்தன அவை. ஒன்று அவளுடைய கையைக்

கடித்தது; மற்றென்று காலைப்பிடித்து இழுத்தது; வேறென்று முதுகைக் கௌவியது. தூண்டிற் புழுவினைப் போலத் துடி துடித்தாள் அவள்.

இச்சமயத்தில் இருவர் அவ்வழியே வந்தனர்; ஓநாய்களுடன் போராடும் அப்பெண்ணுருவைக் கண்டனர்; விரைந்து வந்தனர். ஓநாய்களும் வெருவி ஓடின. என்ன ஆச்சரியம்! யார் உதவியும் இன்றி அவள் எழுந்தாள். ஆனால் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை. தள்ளாடி நடந்தாள். எப்படியோ வீடும் அடைந்தாள்.

'அப்பா' என்று தன் இன்ப மகனை, ஈனக் குரலில் அழைத்தாள் அவள். 'அம்மா' என்ற எதிரொலி ஒன்று மிக மென்மையாகக் கேட்டது. பரபரப்புடன் அடுப்பேற்ற எத்தனித்தாள்! ஆனால் விறகு? ஒரு கணம் தாமதித்தாள். தாயுள்ளமல்லவா? உடனே ஒரு தந்திரம் கண்டாள். கட்டியிருந்த ஒரே துணியை அவிழ்த்தாள். அடுப்பு எரிந்தது. நீரும் கொதித்தது. ஆனால் அவளால் உட்கார முடியவில்லை. அவளை அறியாமலேயே அவளது உடல் சாய்ந்தது. ஊர்ந்து வந்து உலையிலே அரிசியைப் போட்டாள். அவ்வளவுதான். பின் அவளுக்கு ஒன்றும் நினைவில்லை. ஓநாய்கள் அவளது உயிரை முன்பே உறிஞ்சி விட்டன. பாச மிகுதியால்தான் அவள் உயிருடன் வீடு வந்தாள். அன்பின் மேலீட்டால்தான் அவள் உலையிலும் அரிசியைப் போட்டாள். ஆனால் அவளுடைய பாசமும் அன்பும் இதற்கு மேல் அவளுக்குத் துணை செய்யுமா?

'அம்மா' என்றழைத்தான் அந்த நோயாளி மகன். பேச்சில்லை. மறுபடியும் 'அம்மா' என்றான். அப்பொழுதும் விடையில்லை. ஆனால் அவளுடைய கண்ணின் கடையிலிருந்து நீர் ஊற்றுப் போல் பெருக்கெடுத்தது. வடிந்த இரத்தமும் நிற்கும் நிலையிலிருந்தது. நகர்ந்தான் தனயன்; தாயின் குருதி வடியும் அங்கம் கண்டான்; அதனுடன் ஆடையற்ற அலங்கோலமும் கண்டான்; சட்டெனத் தன் இடுப்பில் கட்டியிருந்த கந்தையால் மூடினான்? "அம்மா! அம்மா!!"

மெதுவாகத் தாயின் கண்கள் விரிந்தன. ஆனால் வடியும் நீர் நிற்கவில்லை. கையைத் தூக்கி, அடுப்பில் வேகும் கஞ்சியைக் காட்ட எண்ணியது அன்புள்ளம். ஆனால் கையை

அசைக்க முடியவில்லை. அஸ்தமிக்கும் நிலையிலிருந்த அவள் கண் வேதனையுடன் மகனைப் பார்த்தபின்பு கஞ்சியின்மீது சென்றது. இவ்விதம் இருமுறை அவளுடைய கண்கள் பேசின. அவ்வளவுதான். அவளுடைய கண்கள் ஒரேயடியாக மூடிவிட்டன.

"அம்மா"வென்று அலறி வீழ்ந்தான் அண்டையிலிருந்த தனயன். கவனிப்பார் அற்ற அவனும் மறுநாள் தன் தாயின் உயிரைத் தேடப் புறப்பட்டுவிட்டான். அடுப்பிலே கஞ்சி யிருக்கிறது. ஆனால் அதைக் குடிக்க இப்பொழுது யார் இருக்கிறார்கள்?

இத்துன்ப வரலாறு அறிஞர்களைக் கலக்கியது. அவர்களை அறியாமலேயே அவர்களுடைய வாய் "தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் சகத்தினை அழித்திடுவோம்" என முணு முணுத்தது.

# 7. கப்பலோட்டிய தமிழன்

(திரு. ம. பொ. சிவஞான கிராமணியார், ஆசிரியர், தமிழ் முரசு.)

## குண நலன்கள்

அன்பும் அருளும், உழைப்பும் ஊக்கமும், கொடையும் வ. உ. சி. யிடம் ஒருங்கே அமைந்திருந்தன. நம் நாடு விடுதலை பெற வேண்டின் உடல், பொருள், உயிர் அனைத்தையும் தியாகம் செய்யச் சிலரேனும் முன் வரவேண்டும் என்பது அவரது கருத்து. 'உடல், பொருள், ஆவி; உடல், பொருள், ஆவி' என்ற பல்லவியை வீணாக எல்லோரும் பாடுகின்றனர். உண்மையில் உடலையும், பொருளையும், ஆவியையும் நாட்டின் பொருட்டு வருத்திக் கொண்டார் சிதம்பரப் பெரியார். 'வறுமையை நீக்கு', 'உரிமைக்குப் போரிடு,' 'சிறைக்குச்சிறிதும் அஞ்சாதே' என்பன அவர்தம் உபதேசங்கள்.

"எழுமை எழுபிறப்பும் உள்ளவர், தங்கள் விழுமந் துடைத்தவர் நட்பு" என்னும் பொய்யா மொழிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர், வ. உ. சி. சுதேசிக் கப்பல் கம்பெனியின் வளர்ச்சியில் ஊக்கங் காட்டி. உதவிய தூத்துக்குடி ஆறுமுகம் பிள்ளையின் பெயரைத் தம்பிள்ளைகளுள் ஒருவருக்கு வைத்தார். ராஜத்துவேஷக் குற்றத்திற்காகச் சிறைத் தண்டனை அடைந்ததன் காரணமாக இழந்துவிட்ட தமது வக்கீல் சன்னத்தைத் திரும்ப வாங்கிக்கொடுத்த நீதிபதி வாலஸ் துரையின் பெயரை மறவாது, தமது மற்றொரு புதல்வனுக்கு **வாலீஸ்வரன்** என்று நாமஞ் சூட்டினர். தமக்கு அவ்வப்போது வேண்டிய பொருளுதவி புரிந்துவந்த வேதியப் பப்பிள்ளையின் ஞாபகார்த்தமாகத் தமது மகளுக்கு **வேதவல்லி** என்ற பெயர் வைத்தார். இவ்வாறு பல்லாற்றலும் உதவி புரிந்த பலருக்கும் பிள்ளை தமது நன்றியைச் செலுத்தி யுள்ளார்.

சிதம்பரச் செம்மல் இல்வாழ்க்கையை இனிது நடாத்திய நாளில், தம்மை நாடிவரும் எளியவர்க்கு இல்லையென்னாது ஈந்து வாழ்ந்தார். ஈகையும், இரக்கமும் பிள்ளையவர்களிடம் பொலிந்து விளங்கின. பிறர் துன்பங் கண்டால் மனம் பொறார்.

'வறுமையால் வருந்துகிறேன்' என்று எவர் வாயினின்று கேட்பினும் தம் கைப்பொருளைத் தமக்கென வேண்டாது தாராள குணத்துடன் வழங்குவார். ஒரு நாள் ஒருவர் பிள்ளையவர்களை அணுகி, 'என் குழந்தையின் திருமணத்திற்கு நாள் வைத்து விட்டேன்; கையில் ஒரு காசும் கிடையாது. ஓராயிரம் ரூபாய் தேவையாயிருக்கும். எப்படியாவது கொடுத்துதவ வேண்டும்' எனக் கவி மூலமாய் வேண்டினார். பிள்ளை, அப்போது தம்மிடம் இருந்த ஓராயிரம் ரூபாயையும் உடனே கொடுத்து உதவி புரிந்தார்.

சிதம்பரனார் ஒழுக்கத்தில் சிறந்த உத்தமர். தற்புகழ்ச்சி ஆடம்பரம், பொறாமை, புறங்கூறல் ஆகிய தீ நெறிகள் அவர் நெஞ்சில் என்றும் இடம் பெறவில்லை. உண்மை உணர்தல், உணர்ந்த வழி நிற்றல், தீமையை எதிர்த்தல், பகைவருக்கும் அருளல் ஆகிய நன்னெறிகள் அவரிடம் நிரம்பி இருந்தன. மக்களிடையே தீநெறி போக்கி, நன்னெறி பரப்புவதற்கென்றே 'விவேக பாநு' என்ற மாதப் பத்திரிகை ஒன்றைச் சிறிதுகாலம் நடத்தினார். சிதம்பரனார் வேதாந்த மதத்தில் விருப்பங் கொண்டிருந்தார். **சுவாமி வள்ளிநாயகம்** என்பவர் வ. உ. சி. யின் பள்ளித் தோழர். வக்கீல் தொழில் நடத்தியபோது இவ்விருவரும் இணைபிரியாததோழர்களாகவே இருந்தனர். பின்னர் வள்ளிநாயகம் வக்கீல் தொழிலைக் கைவிட்டுக் காஷாயம் அணிந்து துறவியான போது, அவரையே தமது ஞான குருவாகக்கொண்டு சமய சாத்திரங்களைப் பயின்றார் வ. உ. சி.

தன்னல மறுத்தலும், பிறர் நலம் பேணுதலும் பிள்ளையவர்களின் பிறவிக்குணம். தம்முடன் சிறைப்பட்ட சிவாவைச் சிறையில் விட்டுத் தாம் மட்டும் ஜாமீனில் வெளிவர மறுத்ததும், சுதேசிக் கப்பல் கம்பெனியை விட்டு விலகிக் கொண்டால் லட்ச ரூபாய் தருவதாக அந்நியக் கம்பெனியார் கூறியதை ஏற்க மறுத்ததும் எதனால்? தன்னலமற்ற தன்மையாலன்றோ! இவர் தேசத்தின் பொருட்டுத் தம் கைப்பொருளையும் வருவாயையும் இழந்து, பரம ஏழையாக வாழ நேர்ந்த போதும் பிறர் நலம் பேணுதலை விட்டொழித்தாரில்லை.

துப்பாக்கி பிடித்த சிப்பாயைக் கண்டால் 'அப்பா' என்றோடித் தப்பாது தலை மறைத்துக்கொள்ளும் இயல்புள்ள



கப்பலோட்டிய தமிழன்

காலத்தில் - ' அடி அம்மா ! வெள்ளைக்காரனுக்கு விரோத மாமே !' என்று விதிர் விதிர்க்கும் காலத்தில், பிள்ளையவர் களின் பெயர் ஒன்றே வெள்ளையரிடையே பேரச்சத்தை உண்டாக்கிற்று. "பிள்ளையின் பிரசங்கத்தையும், பாரதி யாரின் பாட்டையும் கேட்டால், செத்த பிணம் உயிர்த்தெழும்; அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும். புரட்சி ஓங்கி எழும்" என, இவரைத் தண்டித்த நீதிபதி பின்ஹே கூறினரென்றால் சிதம்பரனாரின் வீரம் செப்புந் தரத்ததோ ?

வீரர்களின் வரலாற்றைக் கேட்பதிலும், அவர்களைப் போற்றிப் புகழ்வதிலும் சிதம்பரனாருக்கு விருப்பம் அதிகம். "பாம்பறியும் பாம்பின் கால்" என்ற பழமொழிக்கிணங்க, வீரக் கலையில் வித்தகரான சிதம்பரனார் தம்மையொத்த வீரர் களைப் போற்றிப் புகழ்ந்ததில் வியப்பென்ன இருக்கிறது ? சிதம்பரனார் சிறையிலிருந்த காலத்தில், பண்ணோடு கலந்து பாடக்கூடிய கிரிமினல் கைதிகளைக் கூட்டி வைத்து, **மதுரை வீரன், வீரபாண்டியக் கட்டபொம்மன்** ஆகிய இருபெரு வீரர் களின் வரலாற்றைக் கூறும் தெருக் கூத்து நூல்களைப் பாடச் சொல்லிக் கேட்பார். வரி வாங்க வந்த வெள்ளையரை எதிர்த்து,

> " வானம் பொழியுது, பூமி விளையுது
> மன்னனென் காணிக்கு கிஸ்தி ஏது ?"

என்று வல்லமை பேசிய கட்டபொம்மனின் வரலாறு பிள்ளை யவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அவர் தமது சுய சரிதையில்,

> " அருந்திறன் காட்டி ஆங்கில ரோடமர்
> பொருந்திய கட்ட பொம்மு நாயகன் "

எனக் கூறிப் பாஞ்சாலங் குறிச்சியானின் வீரத்தைப் பாராட்டு கின்றார். மற்றும்,

> " பாஞ்சால மன்னன் பண்புடன் அமர்ந்த
> பாஞ்சால நகர் பக்கத் துள்ளது "

என்ற வரிகளில், வீரபாண்டியக் கட்டபொம்மன் அரசாண் டதும், ' காகம் பறவாது கட்டபொம்மன் சீமையின் மேல் '

எனப் பெயர் பெற்றதுமான பாஞ்சாலங் குறிச்சி நகரத்தின் மதிட்புறத்துள்ளதே தாம் பிறந்த ஒட்டப் பிடாரம் என்று பெருமிதத்துடன் கூறுகிறுர்.

## தமிழ்த் தொண்டு

வீரச் சிதம்பரஞர் வெறும் அரசியல் வாதிமட்டுமல்ல ; சிறந்த கலைஞருமாவார். பேச்சுக்கலை, அவரது உடன் பிறப்பு; இலக்கியக்கலை, வ. உ. சி. யின் இணைபிரியாத் தோழன் ; காவியக்கலை, கப்பலோட்டிய தமிழனின் அல்லலைப் போக்கும் இல்லக் கிழத்தி. நாடகக்கலை, சிதம்பரஞரின் உள்ளத்தைக் கவரும் செல்வக் குழந்தை; வீரக்கலை, அவருக்கு மரபுவழி வந்த மதிப்பற்ற சொத்து. ஆம் ; கலைப் பண்புகளே குடும்பமெனக் கொண்டு வாழ்வு நடாத்திய கலைஞராவார் வ. உ. சி.

சிதம்பரம் பிள்ளை, தமிழிடம் மிக்க பற்றுக் கொண்டிருந் தார். ஓய்ந்த நேரங்களில் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்துவந்தார். வ. உ. சி. சங்க இலக்கிய, இலக்கணங்களில் வல்லவர்; உண்மை உரை காணும் உரம் பெற்றவர்; மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்.

வ. உ. சி. தமிழில் சொற்சுவை, பொருட்சுவை கனிந்த பாக்கள் பல இயற்றியுள்ளார். கோயமுத்தூர், கண்ணனூர் சிறைகளில் பிள்ளையவர்களின் கை, கல்லுடைத்ததோடு நிற்க வில்லை; கவிகளும் எழுதியது. சிறையிலிருக்கையில் தமக்குற்ற இன்னல்களைக் குறித்துத் தந்தைக்கும், தம்மைப் பிரிந்தமைக்கு வருந்த வேண்டாமென ஆறுதல் கூறி அன்னை, மனைவி, நண் பர்கள் முதலியோருக்கும் எழுதிய கவிகள், கேட்போரின் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தனவாகும். மற்றும் ஈகை, உண்மை முதலிய ஒழுக்கப் பாக்களும், பதி பசு பாசச் செயல்கள், கடவுள் உண்மை, கடவுளுக்குக் காவல் தொழிலை அளித்தல் முதலிய சமயப் பாக்களுமாகத் தனிப் பாடல்கள் பல இயற்றியுள்ளார். மற்றும், அவர் இயற்றிய 'மெய்யறிவு' 'மெய்யறம்' போன்ற நீதி போதனை நூல்கள்யாவும் பண்டைக் கால நீதி நூல்களுக்கு நிகரானவையாகும்.

பிள்ளையவர்கள் அநேகருக்குத் தமிழ்க் கல்வி போதித்து வந்தார். தாம் சொல்லிக்கொடுத்தவற்றை மறு நாள் ஒப்பு

விக்க வேண்டும். இன்றேல் வேறுபாடம் நடத்தமாட்டார். இவரிடம் பாடம் கற்றுக்கொள்வது எல்லோர்க்கும் எளிதல்ல. ராஜாஜி அவர்கள் சிதம்பரனரிடம் திருக்குறள் பாடங்கேட்ட போது அவரது நிபந்தனைகள் பிடிக்காமையால், "எனக்குப் பாடஞ் சொல்லித்தரும் பொறுமை தங்களுக்கில்லை: தங்களிடம் பாடம் கேட்கும் பொறுமை எனக்குமில்லை" எனக் கூறி விடை பெற்றுக்கொண்டாரம்! இவர் திருக்குறளைப் பெரும்பாலும் மணக்குடவர் உரைகொண்டே விளக்குவார். பரிமேலழகர் உரையில் காலத்துக்குப் பொருந்தாத கருத்துக்களைக் கண்டிப்பார். அவ்விருவர் உரையும் பொருந்தாவிடில் தம் உரையைச் சொல்லுவார். தமிழ்க் கல்வியில் ஆர்வமுடையோருக்கு உண்டி உதவியும் உறுபொருள் கொடுத்துங் கற்பிப்பார். இதற்கு சுவமி சகஜானந்தர் அவர்களே சான்ருவார்.

பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் பெயர்ப்பதில் பிள்ளையவர்கள் பெரிதும் ஊக்கங்காட்டி உழைத்து வந்தார். பிரசித்தி பெற்ற ஆங்கிலப் பண்டிதரான **ஜேம்ஸ் ஆலன்** அவர்களின் ஆங்கில நூல்களை 'மனம் போல் வாழ்வு', 'அகமே புறம்', வலிமைக்கு மார்க்கம்' என்ற பெயர்களுடன் தமிழில் வெளியிட்டுள்ளார். திருக்குறள்-அறத்துப் பாலை ஆங்கில மொழியில் பெயர்த்துள்ளார்.

செந்தமிழ் வல்ல சிதம்பரனர் அரிய தமிழ் நூல்கள் பலவற்றைத் தமிழ் மக்களுக்கு உதவுமாறு பதிப்பித்துள்ளார். அவை, திருக்குறள்-மணக்குடவர் உரை-அறத்துப்பால். தொல் காப்பியம் எழுத்து-சொல்-பொருள்- இளம்பூரணம்; இன்னிலை ஆகிய நூல்களாகும்.

தமிழ் மொழி வளர்ச்சியில் மட்டுமின்றி, தமிழ் வழிபட்ட தொழில் வளர்ச்சியிலும் கப்பலோட்டிய தமிழர் கருத்துடையவராயிருந்தார். மருத்துவத் துறையில், தமிழ் (சித்த) வைத்தியத்திற்கு முதலிடம் தரவேண்டுமென்பது பிள்ளையவர்களின் பேராவல். ஆங்கில மருத்துவர் கடைப்பிடித்து வரும் **எக்ஸ்ரே, ஆப்பரேஷன்** முதலிய நவீன முறைகளைத் தழுவி சித்த, வைத்தியம் புத்துயிர்பெற வேண்டுமென்று சமயம் வாய்த்த போதெல்லாம் வற்புறுத்தி வந்தார்.

"எனது நீண்டகால அனுபவத்தில் தமிழ் நாட்டின் சீதோஷ்ண நிலைக்கும், தமிழ் நாட்டினரின் சரீர இயற்கைக்கும் பொருத்தமான வைத்தியம் சித்த வைத்தியமே என்று யான் கண்டுள்ளேன். தமிழ்ச் சித்தர்கள் தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்து, வாழ்ந்து, நாட்டினுடைய நிலைமையையும் தமிழ் மக்களுடைய பழக்க வழக்க ஒழுக்கங்களையும் நேரில் அறிந்து வைத்தியம் செய்து, வைத்திய நூல்கள் எழுதிவைத்தவர்கள். ஆனபடியால், அவர்கள் வைத்தியம் தமிழ் நாட்டிற்கு மிகப் பொருத்தமாக இருக்கிறது. இன்னமும் தமிழ் வைத்திய நூல்களெல்லாம் பாக்களாகவே இருக்கின்றன. அவற்றை வசன நடையில் எழுதி வெளிப்படுத்துவதற்கும், தமிழ்ச் சித்த மாணவர்களுக்குத் தற்கால மேனாட்டு முறைப்படி ரண வைத்தியம் (Surgery) இன்னும் அதிகமாகக் கற்பிக்கும்படிக்கும், அரசாங்கத்தார் ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு பெரிய கிராமத்திலும், பல சிறிய கிராமங்களை ஒன்று சேர்த்து, அதன் மத்திய இடத்திலும் சித்த வைத்திய சாலைகளை அமைக்க ஸ்தல ஸ்தாபனங்கள் முன் வர வேண்டும்"

எனத் தமது நூலொன்றில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# * 8. புள்ளின வாழ்க்கை:

## காகமும் குயிலும்

(திரு. டி. வி. கிருஷ்ணன்)

காகத்தைப் பாராதவர் உங்களில் யாராவது உண்டா? இல்லை. நம் வீடுகளிலும் தோட்டங்களிலும் மிகச் சாதாரணமாக இது நடமாடுவதை நாம் பார்க்கிறோம். ஆனால் குயில் எளிதாகப் பார்க்கக்கூடிய பறவை அன்று. உங்களில் பலர் குயில் கத்துவதைக் கேட்டிருப்பீர்கள். ஆனால் எல்லோரும் இதைப் பார்த்திருப்பது சிறிது அரிதே. ஏனென்றால், குயில் காகத்தைப் போல் மனிதன் சஞ்சரிக்கும் இடங்களுக்கு அண்மையில் வர அஞ்சும். குயில்களை அடிக்கடி பழத்தோப்புகளில் பார்க்கலாம். இது மரங்களை விடுத்துக் கீழே வந்து தரையின்மேல் நடமாடுவது அரிது.

குயில் கூவுவதைச் சில மாதங்களில்தான் நாம் கேட்கலாம். இதன் குரலை ஏறக்குறைய கோடை காலத்தில் கேட்கலாம். மற்ற மாதங்களில் இஃது எங்கே இருக்கின்றது என நீங்கள் நினைக்கலாம். எல்லாக் காலங்களிலும் இது தோப்புகளிலும் சோலைகளிலும் வசிக்கின்றது. ஆனால் மாரிகாலத்தில் இது கூக்குரலிடாமல் இருக்கும். கோடை காலம் ஆரம்பித்ததும் மிக மகிழ்ச்சியுடன் தன்குரலை இது வெளிப்படுத்தும். அக்காலத்திலே தான் இது முட்டைகளை இட ஆரம்பிக்கும். ஆகவே, ஆண்டு முழுவதும் ஒரே இடத்தில் வசித்து வந்தாலும், இஃது இருப்பதைச் சில மாதங்களில் மட்டும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

இவ்விரண்டு பறவைகளும் ஏன் இப்பெயர்களுடன் வழங்கப்படுகின்றன என்று நினைத்துப் பார்த்தீர்களா? காகம் கா-கா என்று கத்துவதால் காகம் என்றும், குயில் கூ-கூ என்று கத்துவதால் குயில் என்றும் அழைக்கப்படுகின்றன. இவைகளின் குரல் சத்தத்திலிருந்து எது காகம், எது குயில் என்று எளிதில் சொல்லிவிடலாம். ஆனால் இவை தோற்றத்தில் எப்படி இருக்கும் தெரியுமா?

காகம் கருநிறத்துடன் இருக்கும். நாம் சாதாரணமாகக் காணும் காகத்தின் உடம்பு முழுவதும் கரியதாய் இராது.

---

* 16-7-52 அன்று திருச்சி வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்பட்டது.

கழுத்தில் மட்டும் சாம்பல் நிறம் இருக்கும். சில சமயங்களில் உடம்பு முழுவதும் கருநிறங்கொண்ட காகங்களையும் பார்க்கிறோம். இத்தகைய காகத்தை அண்டங் காக்கை என்று சொல்வதுண்டு. இது சாதாரணமாக வீட்டுக் காகங்களைவிடச் சற்றுப் பெரியதாக இருக்கும். இவ்விருவகைப் புட்களும் வெவ்வேறு விதக் காகங்களே தவிர வேறல்ல. காகங்களில் ஆண் பெண் வேற்றுமை அறிதல் கடினம்.

குயில் தோற்றத்தில் ஏறக்குறைய காகத்தைப் போலவே தான் இருக்கும். ஆனால் சில, சிறியனவாகவும், நீண்ட வால் உடையனவாகவும் தோன்றும். இத்தகைய குயிலின் அலகு மெல்லிய பசுமை நிறம் வாய்ந்தது. ஆண் குயில் மட்டும் உடம்பு முழுவதும் கருநிறம் கொண்டுள்ளது. பெண் குயிலோ வேறுபட்டு இருக்கும். இதன் உடம்பு மண்ணின் நிறமாக இருந்தாலும், அதில் வெள்ளைப் புள்ளிகளும் பட்டைகளும் இருக்கும். குயில் வெகு வேகமாகப் பறக்கக்கூடிய ஒரு பறவை.

இவற்றின் உணவு எது என்றும், இவை எவ்வாறு தம் உணவைப் பெறுகின்றன என்றும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா? காகத்தின் உணவு ஒரு பெரிய கதம்பமாகும். இறந்து போன எலி முதல் சூடான தோசை, வடை, மீன், நாம் எறிந்துவிடும் திண்பண்டங்கள் முதலிய பல விதமான பொருள்கள் இதற்கு ஆகாரமாகும். மனிதனைப்போல் ஒரு குறிப்பிட்ட விதமான ஆகாரம்தான் வேண்டும் என்று காகம் பிடிவாதம் செய்வதில்லை. கிடைத்ததை, நேர்மையாகவோ, கள்ளத்தனமாகவோ, பலாத்காரமாகவோ, ஏதோ ஒரு வழியில் அபகரித்துக்கொள்ளும். பட்டினி என்பது அதற்குத் தெரியவே தெரியாது. மேலும் பலவிதமான பூச்சி புழுக்களையும் இது தின்னும். செதில், வெட்டுக்கிளிகள், பயிர்களைச் சேதம் செய்யக்கூடிய பூச்சிகள் முதலியவற்றைப் பெருவிருப்புடன் இது தின்னும். கனிந்த பழங்களையும் காகம் உண்ணும். பார்த்தீர்களா காகத்தின் ஆகார வகைகளை! இப்படியானல் இது பட்டினியாக இருக்க எப்படி முடியும்? முடியவே முடியாது.

இவை மட்டும் அல்ல இதன் ஆகாரம். உயிருடன் இருக்கும் ஏனைய சிறிய பறவைகளையும், மிகச் சிறிய வேறு பிராணி

களையும் இது பிடித்துத் தின்னும். சிறிய பறவைகள் அகப்பட்டுக்கொண்டால், அவ்வளவுதான்! காகத்திற்கு ஒரு நல்ல விருந்தாகிவிடும். அதேபோல் பறவைக் குஞ்சுகள் அகப்படினும் இது மிக மகிழ்ச்சி யடையும். நம் வீடுகளிலேயே பார்க்கிறோம்-என்ன? சிறுகோழிக் குஞ்சுகளைச் சில சமயங்களில் காகம் பிடித்துக்கொண்டு போய்விடுகிறது. நம் வீட்டுக்குள்ளேயே வந்து-அதுவும் சிறிது நாம் கவனியாமல் இருந்தால்-சமையல் அறைக்குள்ளேயே வந்து பண்டங்களை அபகரித்துக்கொண்டு போய் விடுகிறது அல்லவா? இதனால் காகம் கொடியது என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அவ்வளவு கொடியது அல்ல காகம். காகத்தினால் அநேக நன்மைகள் நமக்கு ஏற்படுகின்றன, முக்கியமாக நாம் எறிந்துவிடும் பண்டங்களையும், இறந்துபோன பிராணிகளையும் எடுத்துச் சென்று தின்கிறது. இவ்விதம் நம் வீடுகளின் சுற்றுப்புறங்களைச் சுத்தம் செய்யும் தோட்டி வேலையைச் செய்கிறது காகம். இதனால் இன்னும் எவ்வளவு நன்மை உண்டாகிறது என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். விவசாயிகளுக்கு இதனால் ஏற்படும் நன்மைகள் பலவாகும். இது பலவிதமான பூச்சிகளையும் புழுக்களையும் தின்பதால்தான் இந்நன்மைகள் ஏற்படுகின்றன. திருட்டுத்தனத்தைக் கைக்கொண்டு, மிகத் திறமையாவும் தந்திரமாகவும் ஆகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் காகத்தை நம்முடைய ஒரு நல்ல நண்பன் என்றே கருத வேண்டும்.

மேலும் காகத்திற்கு இன்னும் ஒரு சிறந்த குணம் உண்டு. ஏதாவது நல்ல தின்பண்டத்தை ஒரு காகம் பார்த்துவிட்டால், தான் மட்டும் அதைத் தின்று வயிற்றை நிரப்பிக் கொள்வதில்லை. உடனே கா-கா என்று அதன் இனத்துட் பலவற்றை அழைத்து யாவும் ஒன்று சேர்ந்து சாப்பிடும். இத்தகைய குணம் சில பறவைகளுக்கே உண்டு. தன்னுடைய நன்மையை மட்டும் கருதாது, தன் இனத்தார் நன்மையையும் விரும்பும் காகம் கொடியது என்று நாம் சொல்லலாமா?

காகங்கள் கூட்டங்களாக வசிப்பவை. அந்தி நேரத்தில் பல காகங்கள் ஓரிடத்தில் கூடி, சிறிது நேரம்வரை பெரும் கூக்குரலிட்டுக் கொண்டு இருந்துவிட்டு, இருட்டியதும் சத்தமின்றி அடங்கி விடுவது நாம் காணக் கூடியது. தினமும் நெடுந்தூரத்

தில் இருக்கும் காகங்கள் மாலை நேரத்தில் குறிப்பிட்ட ஓர் இடத்திற்கு ஒவ்வொரு நாளும் பறந்து வந்து. இரவைக் கழித்துவிட்டுக் காலையில் இரைதேடப் பறந்துபோவது இவற்றின் ஒரு முக்கிய இயல்பாகும்.

குயிலின் உணவு எளியதாகும். பலவிதப் பழங்களையே இது விரும்பும். அவற்றுள் அரச மரம், ஆலமரம் ஆகிய மரங்களின் பழங்கள் முக்கியமானவை. இன்னும் பலவித நல்ல சதையுள்ள பழங்களையும் இது தின்னும். மேலும் சிறிய பூச்சிகளும் புழுக்களும் அகப்பட்டால் விட்டுவிடாது. ஆனால் இவை அவ்வளவு முக்கியமான உணவுப் பண்டங்கள் அல்ல.

குயிலினால் நாம் அடைகின்ற நன்மை ஒன்றே ஒன்றுதான் உண்டு. அதன் மாமிசம் மிகச் சுவையுள்ளது. ஆகையால் பலர் இதை உண்ண மிகவும் விரும்புவார்கள். அதற்காகக் குயில்களைப் பிடித்துத் தெருக்களில் கொண்டு வந்து விற்பதைச் சில சமயங்களில் பார்க்கலாம். குயிலினால் நமக்கு ஏதாவது நன்மை உண்டு என்றால் அதுவே தவிர வேறு கிடையாது.

இனி இவ்விரண்டு பறவைகளும் கூடு கட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் விதங்களைப் பார்ப்போம். காகம் ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதத்திற்குள் குஞ்சு பொரித்து விடும். அதாவது மாரிகாலம் தொடங்குவதற்கு முன்னமேயே குஞ்சுகள் வளர்ந்திருக்க ஏதுவாய், இது தன் கூட்டை மரங்களில் உயரமான பகுதிகளில்தான் கட்டும். கூடு பெரும்பாலும் இரண்டு கிளைகள் பிரியும் இடத்தில் அமைக்கப்படும். கூடு ஏறக்குறைய ஒரு சட்டியைப்போல் இருக்கும். சிறிய சுள்ளிகள், துணி, கயிற்றுத் துண்டுகள், பலவிதமான நார்கள், கிடைக்கக்கூடுமானால் மெல்லிய கம்பிகள் முதலியவற்றைக் கொண்டு காகம் தன் கூட்டைக் கட்டும். கூட்டின் உட்புறத்தில் நார்கள் பரப்பப்பெற்று மிருதுவாக இருக்கும். கூடு கட்டுவதில் ஆண் பெண் இரண்டும் பங்கெடுத்துக் கொள்ளுகின்றன.

காகம் நான்கு அல்லது ஐந்து முட்டைகளை இடும். முட்டை மெல்லிய நீலநிறம் உள்ளது. அதன்மேல் மண் நிறமுள்ள புள்ளிகளும் கோடுகளும் உள. முட்டை சுமார் ஒன்றரை அங்குல நீளமும், மூன்று அங்குலச் சுற்றளவும் கொண்டுள்ளது. முட்டைகள் இட்ட பிறகு ஆண் பெண் காகங்கள் மாறி மாறி அடைகாத்து வரும். பதினெட்டு நாட்களுக்குப்

பிறகு குஞ்சுகள் பொரிக்கப்படும். அப்பொழுது குஞ்சுகளுக்கு இறகுகள் இரா. கண்கள் மூடியபடியே இருக்கும். சில நாட்களுக்குப் பிறகே கண்கள் திறப்பதனால், குஞ்சுகள் பார்வையை அடைகின்றன. தாய் தந்தை இரண்டும் குஞ்சுகளுக்கு இரை கொண்டுவந்து தரும். ஏறக்குறைய மூன்று மாதங்களுக்குப் பிறகு இவை பறக்கத் தொடங்கும்.

ஆனால் சாதுவாகத் தோன்றும் குயில் கூடுகட்டிக் குஞ்சு பொரிக்கும் விஷயத்தில் எவ்வாறு இருக்கின்றது? காகம் கள்ளத்தனத்தில் கைதேர்ந்தது என்று முன் சொன்னேன் அல்லவா? ஆனால் அதனினும் கள்ளத்தனம் மிகுந்தது குயில். அது கூடு கட்டுவதே இல்லை. அப்படியானால் முட்டையிட்டுக் குஞ்சுகள் பொரிப்பது கிடையாதா என்று நீங்கள் கேட்கலாம். குயிலும் முட்டையிட்டுத்தான் தன்னுடைய இனத்தைப் பெருக்கிக் கொள்ளும். ஆனால் இந்த விஷயத்தில் குயில் நேர்மையாக நடந்து கொள்வதில்லை. அது கூடு கட்டுவதே இல்லை. வீணே பொழுது போக்கிவிட்டு, முட்டையிடும் காலத்தில் காகத்தின் கூட்டில் கள்ளத்தனமாகப் போய் முட்டைகளை இட்டுவிடும். ஏறக்குறைய பதினொரு முட்டைகள் வரை குயில் இடுவதுண்டு. ஆனால் எல்லா முட்டைகளையும் ஒரே கூட்டில் அது வைத்துவிடாது. ஒன்று இரண்டு முட்டைகளை வெவ்வேறு கூடுகளில் இடும். ஏன் ஒரே கூட்டில் எல்லா முட்டைகளையும் இடக்கூடாது என்று நீங்கள் கேட்கலாம். காகத்தின் முட்டைகளோடு இதன் முட்டைகளையும் அடைகாக்க ஏதுவாக இருக்குப்படி ஒன்று அல்லது இரண்டு முட்டைகளை இஃது இடுகின்றது. அடைகாக்கும் வேலை காகத்திற்குத்தான். குயில் எவ்வளவு தந்திரம் வாய்ந்தது பார்த்தீர்களா!

இதன் முட்டைகளும் ஏறக்குறைய காகத்தின் முட்டைகளைப்போலவே இருக்கும். ஆகையால் காகம் எல்லா முட்டைகளையும் தன்னுடையது என்று எண்ணி அவைகளை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். குஞ்சுகளும் வேறுபட்டுக் காணப்படா. இக்குஞ்சுகளுக்கும் காகம் இரை கொடுத்து வளர்த்து வரும். பறக்க முடிந்ததும் குயிலின் குஞ்சுகள் காகத்தின் கூட்டை விடுத்துப் பறந்து சென்றுவிடும். இவ்விதம் குயில் தன்னுடைய சுமையை எல்லாம் காகத்தின் தலையில் கட்டிவிட்டு, ஒரு கவலையுமின்றி மகிழ்ச்சியுடன் இன்பமாய்த் திரிந்து வரும். காகத்தைவிடத் தந்திரம் வாய்ந்தது குயில் என்று இப்பொழுது நீங்களே நன்கு தெரிந்து கொண்டீர்கள் அல்லவா!

# 9. ரூபாவதி

(திரு. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் B. A)

[சூரசேநவர்மன் என்பவன் சேர நாட்டரசன் ஆவான். அவன் சற்குண வழுதி என்னும் பாண்டி மன்னனை வென்று அவனது நாட்டையும் ஆண்டு வந்தான். புலவரொருவர் அச்சேரனைப் பாடிப் பரிசு பெற்றுச் சென்ற செய்தி நகைச் சுவையுடன் கூறப்படும் பகுதியே ஈண்டுப் பாடமாக அமைந்துள்ளது.]

## அங்கம்—3 : முதற்களம்

**இடம் :** பாண்டியன் அரண்மனை.

**காலம் :** காலை.

**பாத்திரங்கள் :** சேவகன், சூரசேந மகாராஜன், புலவர், சுசீலர் என்ற அமைச்சர்.

**சேவகன் :**—(அரண்மனை வாயிலிலிருந்து) ஓய்! நீ யார்?

**புலவர் :**—நாம் மகாவித்துவான் வித்தியசாகரப் புலவர். அரசன் மீது கவிபாடிப் போந்துளம். இதனை இறைவனிடம் தெரித்தி.

**சேவ :**—ஏ, புலவர், ராசாவுக்குத் தெரியப்படுத்தினால் நமக்கு என்ன கொடுப்பாய்?

**புல :**—எமக்கு மன்னவர் பெருமான் மகிழ் சிறந்து அளியா நிற்கும் பரிசில் நான்கிலொன் றீகுதும். பெறுதி!

**சேவ :**—ஏ, புலவர் அதென்ன? பெறுதி! பகுதி! விகுதி! அதெல்லால் இங்கே நம்மிடத்திலே இலக்கணம் படிக்காதேயும்! சொல்லும் நேரே! எவ்வளவு கொடுப்பீர்?

**புல :**—அதுதான் நாலிலொன்று தருவோம் என்று சொன்னேமே! தெரியவில்லையா?

**சேவ :**—சரி. புலவர்! மோசம் செய்யக் கூடாது. பார்த்துக்கொள்ளும். பத்திரம்!

(சேவகன் உள்ளே போகிறான்)

**புல. :**—சரிதான், போ. (தனக்குள்) எந்தப் பெரிய மனுஷன் வீட்டிலும் இந்தமாதிரி சிற்சில சேவகர்கள் இருந்து கொண்டு எம்போலியரைக் கண்டார் சீறத் தலைப்படுகின்றனர்.

(பாடுகின்று

வேலை யின்றிப்பல் வீதிதொ றுந்திரி
சீல முள்ளவிச் சேவகர் காவல்செய்
வேலை பெற்றுழி மேன்மைபெற் றோமெனச்
சால வுந்தம தன்மை திரிதலேன் ?

"சீ ! இவ்வரசன் என்னவோ மகா காவல் வைத்திருக்கின்ருன் ! முன்னிருந்த வள்ளல் சற்குண வழுதியோ எப்பொழுதும் தாராளமாய் அரண்மனைக்குட் போகலாம் என்று உத்தரவு செய்திருந்தான் ! இவனுக்கு நம்மை இன்னுந் தெரியாதே ! தெரிந்தால் இவனும் அவ்வாறு உத்தரவு செய்யக் கூடும்.

**சேவ** :—மகாராசா அவர்களுக்கு ஆயிரங் கோடி வந்தனம்.

**சூரசேநன்** :—அடா ! சேவகா ! என்ன சங்கதி ? சீக்கிரமாய்ச் சொல்லடா.

**சேவ**:—மகாராசா! அவர்களிடத்தில் யாரோ மகா வித்துவானும். வித்தியாசாகாரப் புலவராம். அவர் வந்திருக்கிருர், இது விஷயம் சமூகத்திற்குத் தெரியப்படுத்தினேன்.

**சுசீலன்** :—ஏ ! சேவகா ! நீ போய் அவரை உள்ளே வரச் சொல்.

(சேவகன் வெளியே போகிறுன்)

**சேவ்** : ஏ ! புலவர் ! போம் ! வரச் சொல்லி மகாராசா உத்த்ரவு செய்து விட்டார். சொன்னதை மறந்திடாதேயும் ! பத்திரம்!

(புலவர் உள்ளே போகிருர்)

**புல** :—சுசுபோக சுகுண மன்மதரூப மகாராஜா சூரசேநவர்மர் சமூகத்திற்கு : அடியேம் ககன மூதண்ட வேதண்ட பிரமாண்ட மெங்கனுங் கனபுகழ் படைத்த வுரவேம் : இமய முதல் ஈழம் வரை இவர்க்கு நிகர் எவருமிலை என்று சொல்லப் பெற்ற தகையேம் : கவிமதக் குஞ்சசரம். கல்விக் களஞ்சியம். ஆதல் பற்றி வித்தியாசாகரப் புலவரெனும் மேலான வயிதானம் உடையவராவேம் ; வந்தனந் தந்தனம் நூந்தனம் பெற்றேகவே !

**சூர** :— ஏ ! புலவரே ! என்ன மடமட வென்று உம்பாட்டிற்கு அடித்துக் கொண்டு போகிறீரே !

**புல** :—என்ன ! மகாராஜா அவர்கள் உத்தரவு தெரிய வில்லையே ! எமது பாட்டிற்காக எம்மை அடிக்கிறதா? தெரி யாது வந்து விட்டேன் ! மகாராஜாவே! பொறுத்தருள வேண் டும் ! (நடுங்குகின்றார்)

**சுசீ** :—ஓய். கத்தாதேயும். சும்மா இரும். ( அரசனைப் பார்த்து) இவர் நல்ல வித்துவான் ! சமூகத்திலே பேசியது தெரியவில்லை. அதனாலேயே தான் இப்படிப் பேசினார்! வேறொன்றும் இல்லை.

**சூர** :—எங்கே நாம் பாண்டியனோடு செய்த யுத்தத்தில் அடைந்த வெற்றியைப் பற்றிப் பாடிய கவியைச் சொல்லச் சொல்லும் சுசீலரே ! கேட்போம்.

**சுசீ** :—ஏ ! புலவரே ! டதறாமல், பயப்படாமல் தைரிய மாய், வேகமாகச் சொல்லாமல், நிறுத்திச் சொல்லும். நீர் மகாராஜா அவர்கள் பேரில் செய்த கவியை.

**புல** :—கொஞ்சம் கண் பார்த்துக் கொள்ள வேண்டும் !

**சுசீ** :—அதெல்லாம் யோசியாதேயும் ! கனகாபிஷேகம் செய்யச் சொல்லுகிறேன் ! கவியைச் சொல்லும்.

**புல** :—பள, பளா ! மிக வியந்தனம்.

**சுசீ** :—இதுதானே எமக்குக் கோபம் வருகிறது சொல் லும் என்றால் உடனே சொல்ல வேண்டாமா ?

**புல** ;—இதோ சொல்லுகிறோம். கேண்மின் (பாடுகின்றார்)

நிம்பமலர் மாலையை மலைச்சுசற் குணவழுதி
நிகரற்ற பாண்டிராச
னின்மகிமை யோராது மதிகெட் டெதிர்ப்பவவ
னிமிடத்தி னிற்றொலையவே
தும்பைமலர் வேய்ந்துயுத் தஞ்செய்து வென்றுசந்
தோடமுடன் வாகைமலருஞ்
சூடுநற் பாணர்நா டொறும் வந்து பாடிடத்
தோகையர்கள் வாழ்த் தெடுப்பச்
சம்பகங் கமழ்குழலி ஞற்போற் றுறுமினிய
சந்தவடி வுள்ளசதுரா !
சகமெலாந் தனதாளு கைக்குட்படுத்திய
தனக்குவமை யெவருமில்லாய் !

வம்புறும் பெண்ணையந் தார்ச்சூர நேசனெனு
மகராச மகிப! நீதான்
வரையாம லீந்துபொருண் மிடிதீர்த்து நீடூழி
மாட்சியுடன் வாழியவரோ!

### திருச்சிற்றம்பலம்

**சுசீ:**—வித்யா சாகரப் புலவரே! கவி வெகு நன்றாயிருக்கின்றது. எங்கே, கொஞ்சம் அர்த்தஞ் சொல்லும் கேட்போம்.

**புல:**—'வேப்பம் பூமாலையை யணிந்த சற்குண வழுதி, நின்னுடைய மகிமையை யறியாது, புத்தி கெட்டுப் போய் உன்னை எதிர்த்த மாத்திரத்தில் ஒரு நிமிடத்தில் தோல்வியுறும்படி, தும்பைப் பூமாலை யணிந்து போர் புரிந்து, அவனை வென்று, வாகை மாலை தரித்து, பாணர் பாட, தோகையர் வாழ்த்த, சண்பகப்பூ வாசனை பொருந்திய கூந்தலையுடைய மாதர்கள் போற்றும் நலம் அனுபவித்துப் பிரகாசிக்கின்ற அழகான ரூபமுள்ள நற்குண முடையவனே! பூலோக முழுவதுந் தன்னுடைய சக்ராதிபத்தியத்திற்குள் கீழ்ப்படுத்தித் தனக்குச் சமமானவர் எவருமில்லாதவனே! மணம் நிறைந்த பனம்பூமாலையைத் தரித்த சூரசேநவர்மன் என்ற திவ்ய திருநாமத்தை உடைய மகாராஜ பூபதியே! எனக்கு அளவற்ற திரவியத்தைக் கொடுத்து, எனது தரித்திரந் தரித்திராவண்ணஞ் செய்து நீ நெடுங்காலம் சிறப்புடனே வாழ்வாயாக' என்பதாம் யாம் பாடிய செய்யுளின் பொருள்.

**சூர:**—சுசீலரே! கவி வெகு நன்றாயிருக்கிறதே! அர்த்தஞ் சொல்லிய பிற்பாடன்றோ தெரிகின்றது! புலவரே! கேட்டுக் கொண்ட பிரகாரம் உம்முடைய தரித்திரம் நீங்கும்படி பதினாயிரம் வராகன் உமக்குக் கொடுக்குமாறு உத்தரவு செய்திருக்கின்றோம். பெற்றுக் கொள்ளும். போம்.

**புல:**—மிகவும் வந்தனம்; ஆயினும் நாம் புரிசை வாயில் காவலனுக்கு எமது பேற்றில் காற்பங்கு தருதுமெனச் சொல்லி இருக்கின்றோம். அதனையும் சேர்த்துக் கொடுக்க ஆணையிடின் மிகவும் நலமுடைத்தாமால். அல்லாக்கால், அப்பேதை மகன் எம்மை அதிகமான அரந்தைக்கு ஆளாக்குவான் காண்.

**சுசீ:**—போய் வாரும்! அப்படியே செய்யச் சொல்வோம்.

(புலவர் போகின்றார்)

# * 10. கிராமத்தின் புதுவாழ்வு-தொழில் திட்டம்

(திரு. வி. வி. இராமசாமி, எம். எல். ஏ.)

நாட்டிலே மக்கள் எண்ணிக்கை பெருகிக்கொண்டே இருக்கிறது. கடந்த ஐந்தாறு ஆண்டுகாளகச் சரியான மழை கிடையாது. நீர்வளம் குன்றியபடியால் பிற வளங்களும் குறைந்து கொண்டே போகின்றன. விளைச்சலுக்கு வேண்டிய தண்ணீர் கிடைக்காததனால் விவசாயப் பொருள்களின்-குறிப்பாக உணவுத் தானியங்களின் உற்பத்தி குறைந்து மக்கள் அவதிப்படுகின்றனர். மக்களின் பெருக்கத்துக்கு ஏற்ற அளவு உணவு கிடைப்பதில்லை. அதற்கு மேல் பிழைக்க வழியின்றி உழைக்க முன்வருபவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். உணவுச் சங்கடத்தைக் காட்டிலும் வேலையில்லா நிலை பயங்கர விளைவுக்குக் கொண்டு போய்விடுமென்ற அச்சம் பரவி வருகின்றது. ஆகவே, தற்பொழுது நிலவி நிற்கும் பல்வேறு பஞ்ச நிலைமை சமாளிக்கப்பட வேண்டும். மக்களின் பெருக்கத்தைக் கண்டு அஞ்சாமல் அதைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பதே அறிவுடைமையாகும். ஆகவே, சோம்பலுக்கு இடமில்லாமல் மக்கள் உழைக்கும்படி வேலை கிடைக்கச் செய்ய வேண்டும்.

> ''கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
> பெருமையிற் பீடுடைய தில்''

என்ற திருக்குறளின் கருத்துக்கு ஏற்ப, மக்களும், தொழில் செய்ய யாம் சோர்வடைய மாட்டோம் என்று உறுதிகொண்டு உழைக்க முன்வரவேண்டும். ஒவ்வொருவரும் உணவுப்பொருள் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு முன் வந்தால் எப்படியும் உணவுப் பஞ்சத்தைப் போக்கடித்து விடலாம். நில மடந்தையும் அவர்களுக்கு வேண்டிய வளத்தைக் கொடுத்து மகிழ்விப்பாள் என்பதில் ஐயமில்லை.

---

* 21-9-52 அன்று, திருச்சி வானொலி நிலையத்தில் ஒலி பரப்பப்பெற்றது.



குடிசைத் தொழில்கள்

உணவுப் பொருள்கள் விளைவதும் கிராமங்களில்தான். வேலை இல்லாமல் மக்கள் சோம்பலில் உழல்வதும் அங்கேயே. கிராம மக்கள் பட்டணங்களுக்குப் போய் வசிக்க ஏன் ஆசைப் படுகின்றார்கள்? பிழைக்க வேலை தேடிச் செல்வார் ஒரு சாரார். தற்கால நவீனத்தில் கலந்து களிக்க விருப்பப்பட்டுச் செல்வார் ஒரு சாரார். இப்படிச் சிற்றூர்களை விட்டுப் பேரூர்களுக்குப் பெயர்ந்து செல்லும் மக்களைக் கிராமங்களிலே இருத்தி வைக்க வேண்டுமானால் அந்தப் பிரதேசங்களில் புது வாழ்வு மலரச் செய்ய வேண்டும். ஆகையால் கிராம மக்கள் ஈடுபட்டுள்ள தொழில்களில் நிரந்தரமாக என்றென்றும் வேலை இருக்கும்படி செய்வதுடன், காலத்துக்கு ஏற்ப நவீன வசதிகளும் அவர் களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டியது கட்டாயமென்று புலனாகின்றது.

சென்னை மாநிலத்தின் மக்கள் எண்ணிக்கை ஏறக்குறைய ஐந்தே முக்கால் கோடி என்று தெரிகிறது. இவர்களுள் எண்பத்து நான்கு சதவீதம் கிராமாந்தரங்களில் வசிக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நேர் முகமாகவும் மறை முகமாகவும் விவசாயத்தை நம்பி இருப்பவர்களின் விகிதம் மொத்தத் தொகைக்கு நூற்றுக்கு எழுபது என்று இருக்கிற தாகவும் சொல்லப்படுகின்றது. நம் மாகாணத்திலுள்ள ஐயாயிரத்து ஐந்நூற்றைம்பது வகையான கைத்தொழிற் சாலை களில் மூன்றரை லட்சம் பேர்களுக்கே வேலை கிடைத்திருக் கின்றது. ஆகவே, வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்து, சுபிட்சம் ஏற்பட்டு, மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டுமாயின், கிராமாந்தரங்களிலுள்ள குடிசைத் தொழில் களில் ஒரு புரட்சி ஏற்படவேண்டியது அவசியம். விவசாயத் தில் ஈடுபட்டோர் அந்தத் தொழிலை நவீன எந்திர சாதனங் களுடன் பெருக்கிக் கொள்வதற்கு உதவி செய்ய வேண்டும். நீர்த் தேக்கமும் கண்மாயும் இல்லாத இடங்களில் ஆழமான கிணறுகள் தோண்ட மக்கள் முன் வரவேண்டும். சராசரி ஒரு விவசாயிக்கு ஓர் ஆண்டில் நூற்று எண்பது நாட்களுக்கு முழு வேலை இருக்குமென்று எடுத்துக் கொள்ளலாம். மழை பெய்து நன்றாய் விளைந்திருந்தால் அந்த மகசூலைக் கொண்டு எஞ்சிய நாட்களைச் சும்மா கழித்துவிட முடியும். ஆனால் அப் படி விடுவது நாட்டுக்கு நட்டமேயாகும். விளையாவிட்டால்

அவன் வேறு வினையிலேதான் இறங்க நேரிடும். ஆகவே, ஆண்டின் முந்நூற்றறுபத்தைந்து நாட்களிலும் விவசாயத்தில் ஈடுபட வசதி இல்லாத கிராம மக்களுக்குக் குடிசைத் தொழில்களில் வேலை கொடுத்து, நாட்டின் செல்வத்தைப் பெருக்க முயல்வது இன்றியமையாததாகும்.

உலகத்தில் மக்கள் எண்ணிக்கை குறைந்திருந்த காலத்தில், கேளிக்கைகளில் மக்கள் நாட்டம் செலுத்தாதிருந்த காலத்தில், அதாவது ஒரு தனி மனிதனின் தேவை ஓர் அளவுக்குக் கட்டுப்பட்டிருந்த காலத்தில், மக்கள் வசித்து வந்த அந்தந்த வட்டாரங்களில் மக்களுக்குத் தேவையான பொருள்களை மக்கள் தம் கைவினைத் திறமையால் உற்பத்தி செய்து கொண்டு திருப்திகரமான வாழ்க்கை நடத்தி வந்திருக்கின்றனர்கள். ஆனால் இந்தக் காலத்திலோ மக்களுடைய எண்ணிக்கை பெருகியதோடல்லாமல், அவர்களுடைய தேவைகளும் விருப்பங்களும் பலவாறாக விரிந்துவிட்டன. இந்த வேட்கையைச் சமாளிக்க வேண்டுமானால் எந்திர சாதனங்களின் உதவி இல்லாவிட்டால் மனித முயற்சி வீணாய்ப் போய்விடுமென்று அஞ்சுகிறோம். மனிதனுக்கு வேண்டிய வசதிகளை மின்சாரம் அல்லது வேறு ஆற்றல்களின் உதவி இல்லாமல், பழைய காலத்து முறைகளைக் கொண்டே சாதித்துவிடலாமென்று நினைப்பது ஆற்று வெள்ளத்தில் எதிர் நீச்சல் அடிப்பது போலாகும். எனவே, குடிசைக் கைத்தொழில்களுக்குக் குறைந்த பட்சம் எவ்வளவு எந்திரசாதனம் அவசியமோ அவைகளைப் பயன்படுத்திக் கொள்வது சிறந்ததாகும். இல்லாவிட்டால் உலக அரங்கில் நடைபெறும் வணிகப் போட்டியில் நம் நாடு பின்வாங்க நேரிடலாம்.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே நம் நாட்டிலுள்ள பலவேறு கைத்தொழில் பொருள்கள் உலகமெங்கும் புகழுடன் விளங்கி இருக்கின்றன. அக்காலத்தில் அவைகளெல்லாம் ஒவ்வொரு துறையிலும் தேர்ச்சியுற்ற நிபுணர்களின் கைத்திறத்தால் ஆக்கப்பட்டனவே ஆகும். எவ்வித எந்திர சாதனமும் இருந்தது கிடையாது. எனினும், கையால் செய்யப்பட்ட வேலைப்பாடுகளுக்கு இணையாக எந்திரங்கள் சாதித்துவிட முடியும் என்று சொல்ல முடியாது. பண்டைக்

காலத்தில் நம் மக்களால் நெய்யப்பட்ட பட்டு, நூல், கம்பளம் முதலிய ஆடைகளும், மரம், தந்தம், செம்பு, பித்தளை முதலிய உலோகங்களினால் சித்திர வேலைப்பாட்டுடன் செய்யப்பட்ட பண்டங்களும் வெளிநாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டு, வெளிநாட்டுப் பணமெல்லாம் நம் நாட்டில் வந்து குவிந்திருக்கின்றன. நாடெங்கும் உள்ள கோவில்களிலும், கூட கோபுரங்களிலும், மாடமாளிகையிலும் உள்ள வேலைப்பாடுகளை ஆராய்ந்து பார்த்தால் நம் மக்களின் கைத்திறன் யாரையும் வியப்படையச் செய்யும். அந்தப் புகழ் பெற்ற கைத்திறன் தற்காலத்திலும் ஆங்காங்குக் காணப்படுகின்றது. ஆனால் அவைகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து, பல பண்டங்களினுடைய உற்பத்தியைப் பெருக்கி உலகெங்கும் பரப்ப நல்ல திட்டம் வேண்டும். இப்பொழுதும் நம் நாட்டில் செய்யப்படும் பூ வேலைகள் அமைந்த கம்பளி, சமுக்காளம், பட்டு நூலாடைகள் முதலியவற்றிற்கும், படுக்கை விரிப்பு, அழகிய பூங்கூடைகள், நார்ப்பெட்டி, பிரம்பு, கோரை, ஓலை முதலியவற்றால் பின்னப்படும் அழகிய வண்ணப் பாய்கள், மரம், கொம்பு, தந்தம், சிரட்டை முதலியவற்றால் செய்யப்படும் சித்திர வேலைப்பாடுள்ள பண்டங்கள், சவரியினால் செய்யப்படும் கயிற்றுப்பாய், மிதிபாய், துடைப்பம் முதலிய கருவிகள் ஆகிய இவற்றிற்கெல்லாம் இன்னும் உலக அங்காடியில் மதிப்பும், தேவையும் இருந்துகொண்டேதான் இருக்கின்றன.

கிராம வட்டாரங்களில் இன்னும் நசித்துப் போகாமல் இருக்கும்படி குடிசைத் தொழில்களை நன்கு ஆராய்ந்து எடுத்து அவைகளைக் கூட்டுறவு முறையிற் பெருகும்படி செய்ய வேண்டும். தேவையான நிதிகொடுத்து உதவுவதுடன் குறைந்த பட்ச எந்திர சாதனமுந் தேடிக் கொடுப்பதற்கும், பூற்றுப்பெற்ற பண்டங்களைச் சங்கடமில்லாமல் விற்பனையாக்குவதற்கும் அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். எந்த வட்டாரத்தில் எந்தத் தொழில் தழைத்து ஓங்குமோ அதைத்தான் அங்கு ஊக்குவிக்க வேண்டும். ஓரிடத்தில் நிபுணர்கள் இருக்கலாம்; ஆனால், தங்கள் தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைக்கும் இடத்துக்குப் பெயர்ந்துபோக அவர்கள் மறுக்கலாம். அந்த நிலையில் மலிவான செலவில் மூலப்பொருள்களைக் கொண்டு வந்து

கொடுக்க வேண்டும். ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் சாமான்களைக் கொண்டு போகுஞ் செலவு அதிகமாகின்ற காரணத்தால் அநேக தொழில்கள் கட்டுபடி இல்லாமல் போய் விடுகின்றன. இந்தச் செலவினம் மிகவும் மலிவாகக் கிடைக்கும் வண்ணம் செய்வது தொழில் வளர்ச்சியைப் பொறுத்து அரசாங்கத்தின் முதல் கடமையாகும்.

சிறப்பாகக் கிராமங்களில் கைத்தறி நெசவைப் பெருக்குவதிலும், பலவகை வித்துக்களிலிருந்து எண்ணெய் வகைகளைத் தயாரிப்பதிலும், கரும்பு, பனை, தென்னை, ஈந்து முதலியவற்றிலிருந்து இனிப்புப் பண்டங்கள் உண்டாக்குவதிலும், மண்ணிலிருந்து செய்யும் பலவகைப் பண்டங்கள், கூசா, சாடி, கண்ணுடி முதலியன ஆக்குவதிலும், ஈச்சங்கழியால் கூடை, தாள் முதலியன இயற்றுவதிலும், பனை நார், தென்னஞ்சவரி, கற்ருழை நார் ஆகியவற்ருல் கயிறுகள், வடங்கள், தும்புகள் திரிப்பதிலும், கோரை, ஓலை முதலியவற்ருல் பாய், பெட்டி, கம்பளிக் கொட்டான், பணப்பை முதலியன பின்னுவதிலும், பிரம்பினுல் நாற்காலி, மேசை, தொட்டில் முதலியன செய்வதிலும், எந்தெந்த இடத்தில் எந்தெந்த மூலப்பொருள்கள் கிடைக்குமோ, அந்தந்த இடத்திற்கு ஏற்ப அந்தந்தத் தொழில்கள் நடக்கும்படி அங்கங்கே வாய்ப்பு வசதிகளை உண்டாக்கிக் கொடுப்பதிலும் மக்கள் நாட்டஞ் செலுத்த வேண்டும். இத்தகைய குடிசைக் கைத்தொழில்கள் நல்ல முறையில் விரியுமாறு செய்து, சுருக்கமான காலத்தில் அதிகப்படியான அளவு உற்பத்தி செய்வதற்கும், மாறி மாறி நூதன வகைகளைப் புகுத்திக் கொண்டிருப்பதற்கும், குறைந்த பட்சம் தேவையான எந்திர சாதனங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் யோசனை சொல்ல ஜப்பான், சுவிட்சர்லாந்து போன்ற வெளி நாடுகளிலிருந்து நிபுணர்களைக் கொண்டுவந்து தெரிந்து கொள்ளலாம். சில குறிப்பிட்ட மாவட்டங்களில் என்னென்ன குடிசைத் தொழில்கள் என்னென்ன நிலைமையில் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து அறிய ஒரு திட்டத்தைச் சென்னை அரசாங்கம் அனுமதித்திருப்பதாகத் தெரிகிறது.

கிராமங்களிலே தனிப்பட்ட குடும்பங்கள், தாம் பரம்பரையாகத் தங்கள் வீட்டுக்குள்ளேயே பழமையான கருவிகளை வைத்துத் தாங்களே தங்கள் மூலதனத்தைக் கொண்டு, தங்க

ளுக்குப் பழக்கமான தொழில் செய்து கொள்ளுவது ஒருவகை. பிற தொழிலில் ஈடுபடாத மக்களைக் கொண்டு, அங்கு அல்லது பக்கத்தில் எளிதில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு சிறிய தொழிற்சாலைகளை வைத்து நடத்துவது மற்றொரு வகை. இந்த முறை தற்காலிகமாகவும் இருக்கலாம், அல்லது நீடித் தும் இருக்கலாம். பொதுவாக நகரங்களில் உள்ள பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு வேண்டிய சின்னஞ்சிறிய சாமான்களை, வசதியுள்ள கிராமங்களில் சிறு ஆலைகளை நிறுவி, அங்கு உற்பத்தி செய்யும்படி செய் வதை ஒரு திட்டமாகக் கொள்ளல் வேண்டும்.

நம் முன்னோர்கள் தங்களுடைய உழைப்புக்குத் தேவை யான உணவு முதலிய பொருள்களைத் தகுந்த காலத்தில் உற்பத்தி செய்து, பக்குவமாகச் சேமித்து வைத்து, தட்டுப் பாடு ஏற்படாமல் உண்டு, வாழ்ந்திருக்கின்றார்கள். தட்ப வெப்ப நிலைமையை அனுசரித்தும், கிடைக்கக் கூடிய உபகர ணங்களைக் கொண்டும் தேவைக்குத் தகுந்த அளவில் வசதி யாக வீடுகளைக் கட்டி வாழ்க்கை நடத்தி இருக்கின்றார்கள். மேலும், தங்களுக்கு வேண்டிய ஆடைகளைத் தாங்களே உற்பத்தி செய்திருக்கின்றார்கள். பருத்தி விளைவித்துப் பஞ்சு எடுத்து, அதை நூலாக்கி நெய்து பயனடைந்திருக்கிறார்கள். சுருங்கச் சொல்லின் பண்டைக் காலத்துக் கிராம வாழ்க்கை, அடிப்படையில் தன்னிறைவு பெற்றதாக இருந்தது. ஆனால், தற்காலத்திலோ சிற்றூர்களிலும் பேரூர்களிலும் உணவுக்கும் உடைக்கும் இருப்பிடத்திற்கும் தட்டுப்பாடு உள்ளது. ஆகவே, அடிப்படையில் கிராமப் புதுவாழ்வு கூடிய மட்டிலும் தன் னிறைவைக் குறிக்கோளாகக் கொள்ளல் வேண்டும்.

பழங்காலத்தில் நம் மக்கள் அந்தந்த ஊர்க்குத் தேவை யானவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் முதலில் கவனம் செலுத்திக்கொண்ட போதிலும், தேவைக்கு மேற்பட்ட விளை பொருள்களையும், கைத்திறனால் ஆக்கப்பட்ட வேலைப்பா டமைந்த பொருள்களையும் நிரம்ப உண்டாக்கி, தரை வழியாக வும் கடல் வழியாகவும் உள் நாட்டுக்கும் வெளி நாட்டுக்கும் அனுப்பி, வணிகத்தைப் பெருக்கி, செல்வ வளத்தை வளர்த் திருக்கின்றார்கள். அந்த வழியை நாமும் நினைவில் வைத்துக் கொள்வதே சாலச் சிறந்ததாகும்.

மேல்நாட்டுத் தொடர்புகளால் ஏற்பட்ட முறைப்படி பெரிய தொழிற்சாலைகளை நிறுவிப் பொருள்களை ஆக்குவதா, அல்லது நம் நாட்டு முறைப்படியே கைத்தொழிற் பொருள்களை வளர்ப்பதா என்ற பெரிய கேள்விகள் இன்னும் அடிக்கடி எழுந்து பிணங்குகொண்டு தான் இருக்கின்றன. இரும்புச் சுரங்கம், நிலக்கரிச் சுரங்கம், தங்கச் சுரங்கம் போன்ற பெரிய இடங்களில் வேலை செய்து, பொருள்களைப் பெருக்கும் முறைமையை மேனாட்டுத் தொழில் முறைகள் போலப் பெருக்கமாகத்தான் செய்ய முடியும். அவ்வாறு செய்வதிலும் ஒரு குறிப்பிட்ட தொகையான மக்களுக்குத்தான் வேலை கிடைக்கும். அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் முற்றிலும் ஒழிந்துவிடமாட்டாது. ஆகையால் அந்தந்த வட்டாரங்களில் உண்டாகின்ற மூலப்பொருள்களால் செய்ய வேண்டிய கைத்தொழிற் பொருள்களை அங்கங்கே உள்ள ஊர்களிலே தான் செய்யவேண்டும். அதற்கு உரிய சிறு சிறு தொழிற்சாலைகளை அங்கங்கே நிறுவுவதுதான் முறையாகும். அதனால் எல்லோருக்கும் வேலையும் கிடைக்கும். நம் நாட்டில் நாம் உண்டாக்கிக் கொள்ளக்கூடிய பொருள்களை வெளி நாட்டிலிருந்து வரவழைத்தால் நம் நாட்டுச் செல்வத்துக்கும் தொழிலுக்கும் கேடு ஏற்படும். வெளி நாட்டார் நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கின்ற பொருள்களை நாம் ஒழுங்காகச் செய்து ஏற்றுமதி செய்வதனால் நம் நாட்டுக்கு ஆக்கம் வளரும்.

மக்கள் உயிர் வாழக் கட்டாயமாக வேண்டிய பொருள்களை விளைவித்துப் பெருக்க வேண்டுமென்று சொன்னோம். எல்லா மக்களுக்கும் - சிறப்பாகக் கிராம மக்களுக்கு - நிரந்தரமாக வேலை கிடைப்பதற்காகக் குடிசைத் தொழில்களை ஆதரித்துப் பெருக்க வேண்டுமென்று சொன்னோம். வெளி நாட்டுச் செல்வத்தைக் கொண்டுவர, ஏற்றுமதிக்காக அருமைப்பொருள் உற்பத்தியை ஊக்குவித்து ஆதரிக்க வேண்டுமென்றும் சொன்னோம். அதே சமயத்தில் விவசாயத்திற்கு வேண்டிய உரமும், மக்கள் பயன்படுத்தக் கூடிய சோப்பு முதலிய நறுமணப் பொருள்களும், மருந்துகளும் ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டு நமது செல்வம் வெளியே போகின்றது. இவைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்களும் கருவிகளும் ஆதரிப்பாரற்றுத் தேம்பிக் கிடக்கின்றன. இவைகளைக்

கொண்டு நல்ல தொழில் உண்டாக்கி, இறக்குமதிச் சரக்குகளைக் குறைத்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் நகரங்களிலே மக்கள் வாழும் இல்லங்கள் வசீகரத் தோற்றத்துடனும், நவீன சுகாதார வசதிகளுடனும் அமைந்திருப்பதால் அவைகளைக் கண்டு கிராம மக்கள் மயங்குவதில் வியப்பில்லை. ஆதலால் கிராமாந்திரங்களில் புது வாழ்வை ஏற்படுத்த வகுக்கும் திட்டத்தில், சிறிய பட்டிகளில்கூட நல்ல சுகாதார வசதியுடன் தெருக்களும் வீடுகளும், ஓய்வு நேரங்களை நல்ல வழிகளில் கழிப்பதற்கு நூல் நிலையம், படிப்பகம், சொற்போர் அரங்கம், பேசும் படம், நாடக அரங்கம் முதலிய பல காரியங்களுக்கு உதவும் பொதுக் கூடங்களும் நாளாவட்டத்தில் கட்டி முடிக்கப்படுவதற்கு இடமிருக்க வேண்டும்.

காலப் போக்கை அனுசரித்து உழவுத் தொழிலையும், கைத்தொழிலையும் விஞ்ஞான முறைப்படி அமைத்து இயக்கினல் கிராமத்தில் வாழும் எண்பத்து நான்கு சதவீத மக்களின் வாழ்க்கை புது வாழ்க்கையாக மலருமென்பதில் ஐயமில்லை.

இவைகள் நம்மாற் செய்வதற்கு அரியன என்று தளராமல் முயற்சி செய்வதால் அவற்றைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய பெருமையை அந்த முயற்சியே தரும்.

"அருமை உடைத்தென்(று) அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

என்பது தீந்தமிழில் திருமறை தந்த திருவள்ளுவரின் திருவாக்கு.

# 11. பண்டை உரைநடை

## I

### அடியார்க்கு நல்லார் உரைநடை

*(1)*

தான் வளர்த்த கீரி தன் பிள்ளையைக் காத்திருந்ததாக ஒரு பாம்பனுக அதனைக் கௌவித் துணித்த குருதி வாயோடு தன் வரவு பார்த்து எதிர்கொண்டதனைத் தன் பிள்ளையைக் கடித்ததெனக் கருதித் தன் கையின் மணையாற் புடைக்க அது மரித்தலாலே வட திசையை நோக்கிக் கங்கையாடப் போகின்ற கொழுநனை மனைவி பின் செல்லப் பொரு திகழ்ந்து, நின்னெழுக்கத்தின் உண்டு மனையறத்தின் கண் வாழும் வாழ்க்கை இனிக் கடவதன்று ; ஆதலான் வடமொழி வாசகமெழுதிய இவ்வேட்டினை உணரக்கடவ பொருளையறி யும் மாந்தர் கையகத்தே நீ கொடுக்கவெனச் சொல்லி அவன் போக, பீடிகைத் தெருவினும் மாடமறுகினும் பிறர் மனைகளி னும் போகி மீளத்திரிந்து, கருமக் கழிபலங் கொண்மினெனக் கூவும் அருமறையாட்டியைக் கூவி நீ இங்ஙனமாதற்கு நீயுற்ற இடர்யாது? இக் கூறியாதென்று கேட்ப, அம்மாதர் தான் கொலை செய்தலாற் கொழுநன் பிரிய அவனைக் காணுது மிக்க துன்பமுற்றதனைக் கூறி, இத்திறமாகிய பொருளை எழுதிய ஏட்டினை வாங்கிக்கொண்டு கைப்பொருளைத் தந்து எனது கடுந்துயரைக் களைகவென்று சொல்ல, அஞ்சா தொழி ; நின் துயரை யானே களைகேன் ; நின்னெஞ்சின் மிக்க துயரத்தை இனி நீங்குவாயாகவெனச் சொல்லி அப்பொழுதே தருமாசனத் தோர் உரைத்த நூல் வழியே அப்பார்ப்பனிக்கு உளதாகிய கொலைப்பாவம் நீங்குதற்குத் தானத்தையுஞ் செய்து அவள் துன்பநீக்கி, காட்டு நெறிக்கட்போன கணவனையும் கூட்டி, அவர்க்கு மேலுள்ள காலத்திற்குத் தளராத பல படைப்பாகிய செல்வத்தோடே மிக்க கைப்பொருளையும் கொடுத்து, வேள்வி யையும் செய்வித்த தொலையாத செல்வனே !

(2)

எட்டிப் பட்டத்தையுடைய சாயலனென்னும் வாணிகன் துறவாது இல்லறத்திருந்தவன் தனது உண்ணு விரதத்தை உடையோர் பலரும் புகும் மனையகத்தே, அவன் மனைக்கிழத்தி ஒருபெரிய தவ முதல்வனைத் தன்வினை நீங்க எதிர் கொள்கின்ற பொழுதின்கண், அவ்வூரிடத்துத் துரப்புண்டு உணவும் பெறுதுசிறுமையுற்றதொரு கருங்குரங்கு அச்சத்தோடு ஒதுங்கி வந்து உள்புக்கு, அருளறத்தின் பகுதிப்பட்ட மாதவனுடைய பாதத்தினை வணங்கி, அவன் உண்டொழிந்த அன்னத்தையும் கை கழீஇய நீரையும் சிறிதருந்திப் பெரும்பசி தீர்ந்து எதிர்முக நோக்கிய முகச்செல்வியைக் கண்டு, சலியா உள்ளத்தை உடைய அறிவனும் மனமகிழ்ந்து, இல்லறக் கிழத்தி தன்னை, நீ நின் மக்களின் ஒரு தன்மையாக ஓம்புகவெனக் கைப்படுப்ப அவளும் மிக்கோனுற் கூறப்பட்ட மெய்ம்மொழியைத் நப்பாமற் பரிகரித்தொழுகாநிற்கின்றுழி, அங்ஙனம் காதலித்த அக் குரங்கு மரிக்க, அதனுடைய ஒரு கூற்றைத்தானஞ் செய்கின்ற மனைக்கிழத்தி, இதன் தீய பிறப்பறுகவெனச் செய்தனளாதலானே, மத்திம தேசத்து வாரணவாசி யென்னும் நகரியின் உத்தர கௌத்தன் என்னும் அரசனுக்கு ஒரு மகனுய் அழகினேடும் மெய்ப்பொறியோடும் உணர்வோடும் தோன்றி, மிக்க தானசூரனுய்ப் பலவகைப்பட்ட தானங்களையும் செய்து அந்த அரசுரிமையிலே முப்பத்திரண்டாண்டிருந்து பின்பு தெய்வ யாக்கை பெற்றனன்; ஆதலானே அங்ஙனம் பெற்ற சிமத் தான பெரும் பயனெல்லாம் தன்னைக் காத்தளித்தவள் செய்த தானத்தாற் பெற்ற சிறப்பென்று உட்கொண்டு, முற்பிறப்பிற் கருங்குரங்கான வடிவிற் சிறிய கையைத் தனது பெரிய ஒரு பாகத்தே கொண்டு, நன்மைக் கூற்றிலே பொருந்திய சாயலனுடைய மனையாள் தலைநாளிற் செய்த தானத்தாலே இந்த வடிவாயினேன்; இதனை நீங்கள் அறிமினென்று சாவக நோன்பிகட் கெல்லாம் விளங்க அறிவித்தற்குத் தேவகுமாரன் இங்ஙனம் தோன்றினன் என்று சொல்லவும் என்க.

## II

(சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் உரநடை)

வஞ்சிமூதூர் மணிமண்டபத்திடைத் தந்தையோடிருந் துழி அரசு வீற்றிருக்கும் திருப்பொறியுண்டென்று ஒரு நிமித் திகன் சொல்ல, முன்னேனாகிய செங்குட்டுவன் இருப்ப இவ் வாறு முறை பிறழக் கூறியது பொறாது குணவாயிற் கோட் டத்துக் கடவுளர் முன்னர்த் துறந்திருந்த இளங்கோவடி களுக்குக் கண்ணகி வானவர் போற்றத் தன் கணவனோடு கூடி யது கண்டு செங்குட்டுவனுக்கு உரைத்த குறவர் வந்து 'எல்லா மறிந்தோய்! இதனை அறிந்தருள்' என்று கூறிப்போக, பின்பு செங்குட்டுவனைக் கண்டு போந்து அடிகளுழை வந்த சாத்தன் அதுபட்டவாறெல்லாம் கூற, அதுகேட்டு, அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றென்பதூஉம், பத்தினி மகளிர் பெய்யெனப் பெய்யுமழை யென்பதூஉம், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம் இக்கதையகத்து உண்மையின், அதனை யாம் ஒரு செய்யுளாகச் செய்வோமென்று இளங்கோ வடிகள் கூற, 'மூவேந்தர் நாட்டினும் நிகழ்ந்த கதையாகலான் ஏனை இருவேந்தரியல்பும் வேத்தியலும் பொதுவியலும் எல் லாம் உணர்ந்த நீரே அருள வேண்டும்' என்று சாத்தன் சொல்ல, இம்முப்பது வகைத்தாகிய செய்யுளை இளங்கோவடி கள் அருளக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனனென்க.

# உரைநடைப் பகுதியின் வினாக்கள்

## பாடம் 1.

1. டாக்டர் ஐயரவர்களது ஆசிரியர் யார்?
2. பிள்ளையவர்களின் தோற்றத்தை ஐயரவர்கள் எவ்வாறு வருணித்துள்ளார்?
3. பிள்ளையவர்களை ஐயரவர்கள் முதன்முறை நோக்கிய நோக்கிற்குக் காட்டப்பட்டிருக்கும் உவமை யாது?
4. வேங்கட சுப்பன் என்பது நல்ல பெயர் என்று பிள்ளையவர்கள் ஏன் கூறினர்?
5. ஐயரவர்கள், பிள்ளையவர்களிடம் வருவதற்கு முன் யார் யாரிடம் பாடங்கேட்டிருந்தார்?
6. "தனிமுதற் சடையிற்சூடும்": ஈண்டுள்ள பிழையினைத் திருத்துக.
7. நிகண்டு என்பது யாது?
8. "யாராவது பாடம் கேட்க வந்தால் யோசனை செய்து தான் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது": இடஞ்சுட்டி விளக்கம் தருக.
9. 'என் தவம் பலித்ததென்று நான் குதூகலித்தேன்': 'தவம்' என்று ஐயரவர்கள் ஈண்டு எதனைக் குறிப்பிடுகின்றார்?
10. பிள்ளையவர்களை ஐயரவர்கள் முதலிற்கண்ட காட்சியைப் பத்து வரிகளுக்குள் வரைக.
11. ஐயரவர்களைப் பிள்ளையவர்கள் எவ்வாறு சோதித்தார்? பிறகு எவ்வாறு அவரை ஏற்றுக்கொண்டார்? பதினைந்து வரிகளுக்குள் வரைக.
12. "பிள்ளையவர்களும் ஐயரவர்களும்" என்னும் பொருள் பற்றி, உங்கள் பள்ளித் தமிழ்க் கழகத்தில் ஐந்து நிமிடப் பேச்சொன்று நிகழ்த்துவதற்குரிய குறிப்புகளைத் தயாரிக்க.

## பாடம் 2.

13. கடற்காட்சியை ஆசிரியர் எவ்வாறு வர்ணிக்கின்றார்?
14. கடற்பிணியைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
15. ஆசிரியர் 'இயற்கை விளையாட்டு' என்று எதனைச் சுட்டுகின்றார்?
16. கடலின் தொன்மைபற்றி எட்டு வரிகள் எழுதுக.

17. கடலின் வளத்தைச் சுருக்கி வரைக.

18. ஆசிரியர் சென்ற கப்பலில் உடனிருந்தோரைப் பற்றிக் குறிப்புகள் எழுதுக.

19. மனிதன் தோற்றத்தை ஆராய்க.

20. கடலைப் பெண்பால் என்று சுட்டுவதற்கு ஆசிரியர் கூறும் காரணம் யாது.

21. மலையாள மொழி எவ்வாறு தோன்றியது ?

22. ஆசிரியரின் முதல் நாள் கப்பல் அனுபவத்தைப்பற்றிப் பத்து வரிகளுக்குள் வரைக.

## பாடம் 3.

23. ஆந்தை : இப்பெயரினை ஆராய்க.

24. கோப்பெருஞ் சோழனும், பிசிராந்தையும் எவற்றிற்குச் சான்றுகளாக விளங்கினர் ?

25. வான்வழியே சென்ற அன்னத்தை நோக்கிய ஆந்தையார் கூறியவை யாவை ?

26. தன்னைச் சூழ்ந்திருந்த சான்றோரை நோக்கிச் சோழன் கூறியவை யாவை ?

27. சுக்கிரீவனுக்கும் விபீடணனுக்கும் உள்ள வேறுபாடுகளாக ஆசிரியர் எவற்றைக் குறிப்பிடுகின்றார் ?

28. "ஒரு நாளுற்ற எல்லியும் பகலும் போலத் தழுவினர்" : இடஞ் சுட்டி விளக்கம் தருக.

29. இனிய துணைவரைப் பெறுதலால் விளையும் நன்மைகள் யாவை ?

30. "ஊரில் ஒருவனே தோழன்" என்னும் முதுமொழியால் நீவிர் அறிவன யாவை ?

31. யானையின் பண்பையும் நாயின் பண்பையும் விளக்கி எழுதுக.

32. வேழத்தோடு பழகலாகாது என்று ஏன் ஆன்றோர் கூறுகின்றனர் ?

33. நாயனையார் கேண்மை வேண்டும் : ஏன் ? காரணம் காட்டுக.

34. 'நட்பின் சிறப்பு' என்னும் பொருள் பற்றி இருபது வரிகளுக்குள் கட்டுரை யொன்று வரைக.

35. நட்புரிமைக்கு உணர்ச்சியே போதுமானது : இக் கருத்தினை ஆராய்க.

## பாடம் 4.

36. நம் நாட்டின் சிறப்புகளைத் தொகுத்தெழுதுக.

37. "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" இக்கருத்தினை ஆராய்க.

38. நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகள் யாவை?

39. புறநானூற்றில் யார் யாருக்கு எவ்வெக்கடமைகள் உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளன?

40. கொடி வணக்கம் செய்ய வேண்டுவதன் இன்றியமையாமையை விளக்குக.

41. 'நம் நாட்டுக் கொடி' என்னும் பொருள்பற்றி உங்கள் பள்ளித் தமிழ்க் கழகத்தில் சொற்பொழிவொன்று நிகழ்த்துவதற்கு வேண்டிய குறிப்புகளைத் தயாரிக்க.

42. "நிலம் என்னும் நல்லாள் நகும்": எப்பொழுது? ஏன்? விளக்குக.

43. குழுவிசையினால் விளையும் நன்மைகள் யாவை?

44. "கூட்டுணர்ச்சி" என்னும் பொருள் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

45. "மக்களின் கடமைகள்" என்னும் பொருள் பற்றி ஒரு பக்கத்திற்கு மேற்போகாதவாறு கட்டுரை யொன்று எழுதுக.

46. "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்னும் தலைப்பை விளக்கிப் பதினைந்து வரிகள் எழுதுக.

47. "மாணவர்களின் கடமை" என்பதுபற்றி நண்பன் ஒருவனுக்கு எழுதுவதுபோல் கடிதம் ஒன்று வரைக.

48. "மாணவர்களும் குடியரசும்" என்னும் பொருள்பற்றி ஒன்றரைப் பக்கத்திற்கு மேற்போகாதவாறு கட்டுரை ஒன்று எழுதுக.

## பாடம் 5.

49. தாய் மகனுக்கு முன்பு எழுதிய கடிதத்தின் சுருக்கத்தை வரைக.

50. "உலகத்தார் உள்ளமெல்லாம் அதிரும் அதிர்ச்சி இந்திய நாட்டிலே டில்லியிலே நடந்துவிட்டது": அந்நிகழ்ச்சி யாது?

51. "காந்தியடிகளின் அரசியல் நெறி" என்பதுபற்றிப் பத்து வரிகள் எழுதுக.

52. "அம்மா, மறக்க முடியவில்லை" என்று மகன் குறிப்பிடுவதாக ஆசிரியர் காட்டியன யாவை?

53. "உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்": எப்பொழுது? விளக்குக.

54. "நாகரிகத்தின் பெயரால் கொள்கைகளை உணராமல் வாயால் புகழும் மக்கள் மிகுதியாக இருக்கின்றார்கள்": இதனை விளக்க ஆசிரியர் காட்டியுள்ள எடுத்துக் காட்டுகள் யாவை?

55. "திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை": இப்பழமொழி கொண்டு விளக்கப்பட்டது யாது?

56. காந்தியடிகளின் கோலத்தை மாற்றிய காட்சி யாது?

57. "காந்தியடிகளும் நேர்மையும்" என்னும் பொருள் பற்றி ஒரு பக்கத்திற்கு மேற்போகாதவாறு கட்டுரை ஒன்று எழுதுக.

58. உனது பள்ளி வாழ்க்கையைக் குறித்து, உன் தாய்க்கு எழுதுவதுபோல் கடிதம் ஒன்று எழுதுக.

## பாடம் 6.

59. பஞ்சத்தின் கொடுமை ஆசிரியர் எவ்வாறு விளக்குகின்றார்?

60. தாய்க்குச் சிறிது உணவு எவ்வாறு கிடைத்தது?

61. மகனுக்கு நோய் வந்த காரணம் யாது?

62. 'ஏனிந்தப் பஞ்சம்' என்னும் தலைப்பில் அமைந்துள்ள சிறுகதையினை ஒரு பக்கத்திற்குள் வரைக.

63. நீங்களாகக் கற்பனை செய்து, சிறுகதை ஒன்றை இரண்டு பக்கங்களுக்குள் எழுதிக் காட்டுக.

## பாடம் 7.

64. வ. உ. சி. மக்களுக்குச் செய்த உபதேசங்கள் யாவை?

65. வ. உ. சி. செய்ந்நன்றி மறவாதவர் என்பதனை நாம் எவ்வாறு உணரலாம்?

66. எளியார்க்கு இரங்கும் பண்பு வ. உ. சி. யினிடம் இருந்தது என்பதற்கு எடுத்துக் காட்டொன்று தருக.

67. வ. உ. சி. யின் பிறர் நலம் பேணும் பண்பு எவ்வாறு வெளிப்படுகின்றது?

68. நீதிபதி பின்ஹே அவர்கள் வ. உ. சி. யின் சொற்பொழிவைப் பற்றி யாது கூறியுள்ளார்?

69. வ. உ. சி. வீரர்களைப் போற்றிப் புகழ்ந்தார்: எடுத்துக் காட்டு ஒன்று கொண்டு விளக்குக.

70. வ. உ. சி. எழுதிய நூல்கள் யாவை?

71. வ. உ. சி. பதிப்பித்த நூல்கள் யாவை?

72. வ. உ. சி. ஒரு சிறந்த தமிழாசிரியர்: இக்கருத்தினை விளக்குக.

73. சித்த வைத்தியத்தைப்பற்றி வ. உ. சி. அவர்களின் கருத்தினை வரைக.

74. வ. உ. சி. யின் குண நலன்களைப்பற்றி ஒரு பக்கத்திற்குள் வரைக.

75. "வ. வு. சி. யின் தமிழ்த் தொண்டு" என்னும் பொருள் பற்றி உங்கள் தமிழ்க் கழகத்தில் பேசுவதற்கு உரிய குறிப்புகள் எழுதுக.

## பாடம் 8.

76. குயிலின் உடல் அமைப்பை விளக்குக.

77. காகத்தின் உணவுகள் யாவை?

78. காகம் பட்டினியே கிடப்பதில்லை: காரணம் எழுதுக.

79. காகம் மக்களுக்கு எவ்வெவ்விதங்களில் நன்மைகளைச் செய்கிறது?

80. காகத்தினிடம் காணப்படும் நற்பண்புகள் யாவை?

81. காகம் எவ்வாறு கூட்டை அமைக்கின்றது?

82. காகத்தினும் தந்திரம் வாய்ந்தது குயில்: எப்படி?

83. "காகத்திற்கும் குயிலுக்கும் உள்ள வேறுபாடுகள்" என்னும் பொருள் பற்றி ஒரு பக்கத்திற்குள் கட்டுரை யொன்று வரைக.

## பாடம் 9.

84. "அதெல்லாம் இங்கே இலக்கணம் படிக்காதேயும்" இடஞ் சுட்டி விளக்குக.

85. வாயிற் காவலரின் பண்பு பற்றிப் புலவர் கூறியன யாவை?

86. வித்தியாசாகரப் புலவர்: இப்பெயர் தமக்கு வந்ததற்கு அப் புலவர் கூறும் காரணம் யாது?

87. புலவர் அரசனைப் புகழ்ந்து பாடிய பாடலின் கருத்தினை வரைக.

88. உங்களுக்குத் தெரிந்த நிகழ்ச்சியொன்றை, ஒரு நாடகக் காட்சியாக எழுதுக.

## பாடம் 10.

89. கிராம மக்களின் ஓய்வு நேரங்களைப் பயன்படுத்துவதற்கு ஆசிரியர் கூறும் வழி யாது?

90. குடிசைக் கைத்தொழில்களுக்கு ஓரளவு எந்திர சாதனம் வேண்டும்: இக்கருத்தினை ஆராய்க.

91. நம் நாட்டில் இன்று நடைபெறும் குடிசைக் கைத்தொழில்கள் யாவை?

92. கிராம மக்களுக்கு இருக்கும் தொல்லைகளுட் சிலவற்றைக் குறிப்பிட்டு, அவற்றைப் போக்குவதற்கு உரிய வழிகளை வரைக.

93. கிராமப் புது வாழ்வு எதனைக் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்?

94. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு ஆசிரியர் கூறும் வழிகள் யாவை?

95. "கிராமச் சீர்திருத்தம்" என்னும் பொருள்பற்றி ஒன்றரைப் பக்கங்களுக்கு மேற்படாமல் கட்டுரை ஒன்று எழுதுக.

96. "கிராம மக்களின் புது வாழ்க்கை" என்னும் பொருள் பற்றி உங்கள் பள்ளித் தமிழ்க் கழகத்தில் பேசுவதற்கு வேண்டிய குறிப்புகளை வரைக.

## பாடம் 11.

97. கோவலனின் அருட்பண்பினை எடுத்துக்காட்டு ஒன்றினால் விளக்குக.

98. தேவகுமாரன், கருங்குரங்கின் கையுடன் தோன்றியது ஏன்? வரலாற்றை விளங்க வரைக.

99. இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் பாடிய வரலாற்றை விளக்கி எழுதுக.

100. சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள் யாவை?

13366

---

13366
600 008

Rajan Electric Press, Madras-1.